வாசமாமலர் உடையார், வர்த்தமானீச்சுரத்தாரே.

The God of Vartthamāneecchuram at Pukalūr, the beauteous, is adorned by
Muruka Nāyanār during the three divisions of the day with Kondrai flowers
which are lovelily fragrant and buzzed by bees.
He is, indeed the true God, the One whose mount is the Bull;
He is nectarean; He is our Father; He is our God;
He is bedaubed with the flawless holy ash. 5

1011. தளிர் இளங் கொடி வளர, தண்கயம் இரிய வண்டு ஏறிக்
கிளர் இளம்(ம்) உழை நுழைய, கிழிதரு பொழில் புகலூரில்,
உளர் இளஞ் சினை மலரும் ஒளிதரு சடைமுடி அதன்மேல்
வளர் இளம்பிறை உடையார்--வர்த்தமானீச்சுரத்தாரே.

Pukalūr abounds in young lianas laden with buds,
abutting the cool pools; here chafers wing fast
bending these buds, barging thus into the gardens.
Our God who abides at Vartthamānecchuram
wears on His radiant matted crest the blossoms
blowing in the spring water, and the crescent moon. 6

1012. தென்சொல், விஞ்சு அமர் வடசொல்-திசைமொழி, எழில் நரம்பு எடுத்துத்
துஞ்சு நெஞ்சு இருள் நீங்கத் தொழுது எழு தொல் புகலூரில்,
அஞ்சனம் பிதிர்ந்தனைய, அலைகடல் கடைய அன்று எழுந்த,
வஞ்ச நஞ்சு அணி கண்டர்--வர்த்தமானீச்சுரத்தாரே.

In Tamil and Sanskrit--the peerless tongues--, as well as
in languages rife in all the directions, hymns
are sung by servitors who also play on the yāzh
strumming its nerves, to dispel altogether their inner murk.
It is so and even so at Pukalūr. Of yore when the billowy sea was churned
the venom burst like black khol and rose up.
He quaffed it, the cruel venom, and retained it in His throat.
He is entempled in Vartthamāneecchuram. 7

1013. சாமவேதம் ஓர் கீதம் ஓதி அத் தசமுகன் பரவும்
நாமதேயம் அது உடையார், நன்கு உணர்ந்து, "அடிகள்" என்று ஏத்த;
காமதேவனை வேவக் கனல் எரி கொளுவிய கண்ணார்;
வாமதேவர்--தண் புகலூர் வர்த்தமானீச்சுரத்தாரே.

Our God's name was hailed by the ten-headed
Asura, who of yore, hymned His glory in Sāma Veda.
Lo, He is hailed as the Noble One omniscient.
With His forehead-eye, He gutted with fire Manmata.
At the cool Pukalūr, He who is Vāmadeva,
is entempled in Vartthamāneecchuram. 8

1014. சீர் அணங்கு உற நின்ற செரு உறு திசைமுகனோடு
நாரணன் கருத்து அழிய நகைசெய்த சடைமுடி நம்பர்;
ஆர் அணங்கு உறும் உமையை அஞ்சுவித்து, அருளுதல்பொருட்டால்,
வாரணத்துஉரி போர்த்தார்--வர்த்தமானீச்சுரத்தாரே.

Their glory involved in befuddlement, when
Brahma and Vishnu, contending for supremacy,
went in quest of Him, in vain, He but smiled.
He is the most desirable One of the matted crest.
To cause dread unto Uma, the supremely beautiful,
He flayed the Tusker and mantled Himself in
its skin. Even He abides in Vartthamāneecchuram. 9

1015. கையில் உண்டு உழல்வாரும், கமழ் துவர் ஆடையினால்-தம்
மெய்யைப் போர்த்து உழல்வாரும், உரைப்பன மெய் என விரும்பேல்!
செய்யில் வாளைகளோடு செங்கயல் குதிகொளும் புகலூர்,
மை கொள் கண்டத்து எம்பெருமான்--வர்த்தமானீச்சுரத்தாரே.

Believe not the utterances of those that roam about eating alms from
their gowpens and those that are shrouded in ochre robes.
In the fields of Pukalūr, *Vālais* and ruddy *Kayals* leap about and sport.
It is here in Vartthamāneechuram, He—our God whose
throat is blue--, is entempled. 10

1016. பொங்கு தண்புனல் சூழ்ந்து போது அணி பொழில் புகலூரில்
மங்குல் மா மதி தவழும் வர்த்தமானீச்சுரத்தாரை,
தங்கு·சீர் திகழ் ஞானசம்பந்தன் தண் தமிழ்பத்தும்
எங்கும் ஏத்த வல்லார்கள், எய்துவர், இமையவர்உலகே.

Pukalūr is girt with flowery gardens and water,
cool and swelling, in Vartthamāneecchuram over which the great moon
sails in the sky. It is here our God is entempled.
On Him, Gnānasambandhan of well-established renown,
has sung these ten hymns in cool and serene Tamiḷ.
They that are valiant to hail these, wherever they be,
will gain ascension to the supernal world. 11

93. திருத் தெங்கூர் பியந்தைக்காந்தாரம்

93. TIRUTTHEṄKŪR

1017. புரை செய் வல்வினை தீர்க்கும் புண்ணியர்; விண்ணவர் போற்ற,
கரை செய் மால்கடல் நஞ்சை உண்டவர்; கருதலர் புரங்கள்
இரை செய்து ஆர் அழலூட்டி, உழல்பவர், இடுபலிக்கு;-எழில் சேர்
விரை செய் பூம்பொழில்-தெங்கூர் வெள்ளி அம்குன்று அமர்ந்தாரே.

Our God is entempled in Velliamkundru at Thēṅkūr
girt with lovey and fragrant gardens.
He is the Holy One that annuls the troublous and cruel karma. Implored by
the Devas, He quaffed the staining venom that uprose from the great sea.
He smote the three, hostile and walled-citadels of the sky.
He roams about seeking alms from willing givers. 1

1018. சித்தம் தன் அடி நினைவார் செடி படு கொடுவினை தீர்க்கும்
கொத்தின் தாழ்சடைமுடிமேல் கோள் எயிற்று அரவொடு பிறையன்;
பத்தர்தாம் பணிந்து ஏத்தும் பரம்பரன்; பைம்புனல் பதித்த
வித்தன்--தாழ்பொழில்-தெங்கூர் வெள்ளி அம்குன்று அமர்ந்தாரே.

Our God is entempled in Velliamkiri at Thēṅkūr girt with low-lying gardens.
He annuls the sinful and cruel consequences of evil karma
of those that think on Him in single-minded concentration.
On His strands of matted crest, He sports the crescent and the serpent.
He is the Supreme Ens whom the *bhaktas* hail in humility.
Lo, He is like the seed sown on the moist soil. 2

1019. அடையும் வல்வினை அகல அருள்பவர், அனல் உடை மழுவாள்-
படையர், பாய் புலித்தோலர், பைம்புனக் கொன்றையர், படர்புன்-
சடையில் வெண்பிறை சூடித் தார் மணி அணிதரு தறுகண்
விடையர்--வீங்கு எழில்-தெங்கூர் வெள்ளி அம்குன்று அமர்ந்தாரே.

Our God is entempled in Velliamkiri at Thēṅkūr of swelling pulchritude;
He annuls the cruel karma that afflicts His devotees.
He wields the mazhu that is the blazing rod. He is clad in the skin
of the leaping tiger. His is the spreading and ruddy matted crest on which
He is adorned with the *kondrai* blossoms that blow
in fresh water, and also the crescent.
His mount is the Bull decked with a bell. 3

1020. பண்டு நாம் செய்த வினைகள் பறைய, ஓர் நெறி அருள் பயப்பார்;
கொண்டல் வான்மதி சூடி; குரை கடல் விடம் அணி கண்டர்--
வண்டு மா மலர் ஊதி மது உண, இதழ் மறிவு எய்தி
விண்டவர் வார் பொழில்-தெங்கூர் வெள்ளி அம்குன்று அமர்ந்தாரே.

Our God is entempled in Velliamkiri at Thēṅkūr girt with gardens whose
flowers are caused to unfold by bees that wing thither seeking nectar.
He does away with my hoary karma and causes me,
in grace, to tread the Godly way.
He wears the skyey and cloud-girt moon on His crown.
He quaffed the venom of the roaring sea and retains it
in His throat that thence became like a blue gem. 4

1021. சுழித்த வார் புனல் கங்கை சூடி, ஓர் காலனைக் காலால்-
தெழித்து, வானவர் நடுங்கச் செற்றவர்; சிறை அணி பறவை
கழித்த வெண்தலை ஏந்தி; காமனது உடல் பொடி ஆக
விழித்தவர்--திருத் தெங்கூர் வெள்ளி அம்குன்று அமர்ந்தாரே.

Our God is decked with the whirlpooled Ganga on His crown; He kicked
Death to death at which the Devas quaked, gripped with dread.
He holds in His hand a white skull of Brahma's who
in the guise of a bird flew up in search of Him, in vain.

He stared Manmata to powdery cinders.
Lo, He is entempled in Tirutthenkūr at Velliamkiri. 5

1022. தொல்லை வல்வினை தீர்ப்பார்; சுடலை வெண்பொடி அணி சுவண்டர்;
எல்லி சூடி நின்று ஆடும் இறையவர்; இமையவர் ஏத்த,
சில்லை மால்விடை ஏறி, திரிபுரம் தீ எழச் செற்ற
வில்லினார்--திருத் தெங்கூர் வெள்ளி அம்குன்று அமர்ந்தாரே.

Our God is entempled in Velliamkiri at Tirutthenkūr.
He will annul our hoary karma cruel; He, the Adept, is adorned with
the crematorial white ash. Decked with the bright crescent, our God doth dance.
Hailed by the Devas, He rode His great Bull and gutted with fire
the three, base and walled-citadels, with His bow-- the Mount Meru. 6

1023. நெறி கொள் சிந்தையர் ஆகி நினைபவர் வினை கெட நின்றார்;
முறி கொள் மேனி முக்கண்ணர்; முளைமதி நடுநடுத்து இலங்க,
பொறி கொள் வாள் அரவு அணிந்த புண்ணியர்; வெண்பொடிப்பூசி--
வெறி கொள் பூம்பொழில்-தெங்கூர் வெள்ளி அம்குன்று அமர்ந்தாரே.

Our God is entempled in Velliamkiri at Thēnkūr girt
with fragrant gardens; He is adorned with the white ash.
He annuls the karma of those who are endowed with the *manam*
to pursue the right path and who think on Him in bhakti.
His divine form is soft as shoot; His vision is trinocular.
He wears on His matted crest the crescent which dreads
the presence of the serpent close by. 7

1024. எண் இலா விறல் அரக்கன் எழில் திகழ் மால்வரை எடுக்க,
கண் எலாம் பொடிந்து அலற, கால்விரல் ஊன்றிய கருத்தர்;
தண் உலாம் புனல்கன்னி தயங்கிய சடைமுடிச் சதுரர்--
விண் உலாம் பொழில்-தெங்கூர் வெள்ளி அம்குன்று அமர்ந்தாரே.

Our God is entempled in Velliamkiri at Thēṅkūr
rich in sky-vaulting gardens.
When the Asura of humongous puissance durst uproot
His beauteous and great Kailas, He so pressed His toe
that his eyes became powdery and he wailed aloud.
He, the Strategist, wears the Ganga as His chaplet. 8

1025. தேடித்தான், அயன் மாலும், திருமுடி அடிஇணை காணார்;
பாடத்தான் பலபூதப்படையினர்; சுடலையில் பலகால்
ஆடத்தான் மிக வல்லர்; அருச்சுனற்கு அருள்செயக் கருதும்
வேடத்தார்--திருத் தெங்கூர் வெள்ளி அம்குன்று அமர்ந்தாரே.

When Brahma and Vishnu went in quest of His crest and feet,
He stood unbeholdable by them. His are the Bhūta-Hosts;
He dances in the crematory on occasions, a good many.
To grace Arjuna, He assumed the form of the forester.
He is entempled in Velliamkiri at Tiruttheṅkūr. 9

1026. சடம் கொள் சீவரப்போர்வைச் சாக்கியர், சமணர், சொல்-தவிர,
இடம் கொள் வல்வினை தீர்க்கும்; ஏத்துமின்--இருமருப்பு ஒருகைக்
கடம் கொள் மால்களிற்று உரியர், கடல் கடைந்திடக் கனன்று எழுந்த
விடம் கொள் கண்டத்தர், தெங்கூர் வெள்ளி அம்குன்று அமர்ந்தாரே.

Our God is enshrined in Velliamkiri at Thēṅkūr.
He annuls the cruel karma of those that reject
the utterances of the Buddhists that are shrouded
in the ochre robes as well as the Samanas.
He flayed the great, musty and trunked elephant endowed
with a pair of tusks, and mantled Himself in its skin. He holds in His
throat the raging venom that uprose when the sea was churned. 10

1027. வெந்தநீற்றினர் தெங்கூர் வெள்ளி அம்குன்று அமர்ந்தாரை,
கந்தம் ஆர் பொழில் சூழ்ந்த காழியுள் ஞானசம்பந்தன்,
சந்தம் ஆயின பாடல்-தண் தமிழ்பத்தும் வல்லார்மேல்,
பந்தம் ஆயின பாவம் பாறுதல் தேறுதல் பயனே.

On the God of Velliamkiri at Thēṅkur girt with fragrant gardens,
the One that wears the baked ash,
Gnānasambandhan of Kāzhi girt with suaveolent gardens,
has sung these ten psalms in serene Tamil̲ in Vedic chhandas.
They that are valiant in these ten hymns will be
rid of their fettering sins; eke will they be
blessed with absolute clarity of mind. 11

94. திரு வாழ்கொளிபுத்தூர் பியந்தைக்காந்தாரம்

94. TIRUVĀZHKOḶIPUTTHŪR

1028. சாகைஆயிரம் உடையார், சாமமும் ஓதுவது உடையார்,
ஈகையார் கடை நோக்கி இரப்பதும் பலபல உடையார்;
தோகைமாமயில் அனைய துடியிடை பாகமும் உடையார்--
வாகை நுண்துளி வீசும் வாழ்கொளிபுத்தூர் உளாரே.

He, our God, is entempled in Vāzhkoḷiputthūr where
through the leaves of *Vākai* trees drips water.
He is the Author of the Vedas whose sections are
a thousand; He is a Singer of the hymns of
the Sāma Veda; He is a liberal giver.
He is a seeker who receives alms from willing givers.
Lo, He is concorporate with Uma whose mien is
like unto the fantailed peacock and whose waist is like a *tudi*. 1

1029. எண்ணில் ஈரமும் உடையார்; எத்தனையோ இவர் அறங்கள்!
கண்ணும் ஆயிரம் உடையார்; கையும் ஓர் ஆயிரம் உடையார்;
பெண்ணும் ஆயிரம் உடையார்; பெருமைஓர் ஆயிரம் உடையார்;
வண்ணம் ஆயிரம் உடையார்-வாழ்கொளிபுத்தூர் உளாரே.

Our God is entempled in Vāzhkoḷiputthūr.
He dispenses mercy in ways multitudinous;
many many are those who received His dharma.
His eyes are a thousand; His hands are a thousand;
His glories are a thousand; His hues are a thousand;
His Sakti-s are a thousand. Eke are a thousand His ways. 2

1030. நொடி ஓர் ஆயிரம் உடையார்; நுண்ணிய ஆம், அவர் நோக்கும்
வடிவும் ஆயிரம் உடையார்; வண்ணமும் ஆயிரம் உடையார்;
முடியும் ஆயிரம் உடையார்; மொய்குழலாளையும் உடையார்;
வடிவும் ஆயிரம் உடையார்--வாழ்கொளிபுத்தூர் உளாரே.

Our God is entempled in Vāzhkoḷiputthūr; subtle,
very subtle, is His reckoning of time; so too, His vision.
His forms are a thousand; His ways too are a thousand.
A thousand fold is His head-dress; so is His beauty.
He is concorporate with Uma whose flowery tresses are buzzed by bees. 3

1031. பஞ்சி நுண்துகில் அன்ன பைங்கழல் சேவடி உடையார்;
குஞ்சி மேகலை உடையார்; கொந்து அணி வேல் வலன் உடையார்;
அஞ்சும் வென்றவர்க்கு அணியார்; ஆனையின் ஈர் உரி உடையார்;
வஞ்சி நுண்ணிடை உடையார்--வாழ்கொளிபுத்தூர் உளாரே.

Our God is entempled in Vazhkoḷiputthūr. His beautiful, ever-fresh,
ankleted and salvific feet are soft like the silk-cotton. He is cinctured
with a girdle from which are suspended ornate tassels.

He holds a sharp spear in His right hand; He is
easy of access to those that have vanquished the pentad of senses.
He is mantled in the flayed skin of the Tusker.
His body shares Uma whose waist is liana-like. 4

1032. பரவுவாரையும் உடையார்; பழித்து இகழ்வாரையும் உடையார்;
விரவுவாரையும் உடையார்; வெண்தலைப் பலி கொள்வது உடையார்;
அரவம் பூண்பதும் உடையார்; ஆயிரம்பேர் மிக உடையார்;
வரவும் ஆயிரம் உடையார்--வாழ்கொளிபுத்தூர் உளாரே.

Our God is entempled in Vāzhkoḷiputthūr.
He is hailed by many; He is dispraised by many.
He is with them who have gained at-one-ment with Him.
He seeks alms in a white skull; His names are
legion; He is decked with serpents. Lo, He bestows boons galore. 5

1033. தண்டும் தாளமும் குழலும் தண்ணுமைக்கருவியும் புறவில்
கொண்ட பூதமும் உடையார்; கோலமும் பலபல உடையார்;
கண்டுகோடலும் அரியார்; காட்சியும் அரியது; ஓர் கரந்தை
வண்டு வாழ் பதி உடையார்--வாழ்கொளிபுத்தூர் உளாரே.

Our God abides at the uberous Vāzhkoḷiputthūr
where bees lie cradled in *Karantai* blossoms.
He is companied with His Bhūta-Hosts in the crematory
where they play *Vina* and flute keeping time with cymbals and drums.
His forms are many, yes, a good many.
He is beyond our ken of comprehension and sight as well. 6

1034. மான வாழ்க்கைஅது உடையார்; மலைந்தவர் மதில் பரிசு அழித்தார்;
தான வாழ்க்கைஅது உடையார்; தவத்தொடு நாம் புகழ்ந்து ஏத்த,
ஞான வாழ்க்கைஅது உடையார்; நள்இருள் மகளிர் நின்று ஏத்த,
வான வாழ்க்கைஅது உடையார்--வாழ்கொளிபுத்தூர் உளாரே.

Our God is of Vāzhkoḷiputthūr; His is the glorious life.
He smote the three, hostile, skyey and walled-citadels of the Asuras.
He gives gifts and boons galore.
His life is of Gnosis to be hailed by us poised in *tapas*.
He is of the Empyrean who is hailed during
midnight by the supernal women. 7

1035. ஏழும்மூன்றும் ஓர் தலைகள் உடையவன் இடர்பட அடர்த்து,
வேழ்வி செற்றதும் விரும்பி, விருப்பு அவர் பலபல உடையார்;
கேழல் வெண்பிறை அன்ன கேழ் மணிமிடறு நின்று இலங்க
வாழி சாந்தமும் உடையார்--வாழ்கொளிபுத்தூர் உளாரே.

Our God abides at Vāzhkoḷiputthūr.
He crushed the peerless ten-headed Ravana involving him in deep distress.
He devastated the sacrifice of Daksha. Many, a good many, are His devotees
who willingly adore Him in intense love. He wears on His gemmy
and bright neck the crescent-like tusk of the Hog.
Lo, He is ever poised in surpassing peace. 8

1036. வென்றி மாமலரோனும், விரிகடல்-துயின்றவன் தானும்,
என்றும் ஏத்துகை உடையார்; இமையவர் துதிசெய, விரும்பி,
முன்றில் மா மலர் வாசம் முதுமதி தவழ் பொழில்-தில்லை
மன்றில் ஆடல்அது உடையார்--வாழ்கொளிபுத்தூர் உளாரே.

Our God is entempled in Vāzhkoḷiputthūr. He is ever hailed by
the triumphant Brahma seated on the great flower Lotus and Vishnu
that slumbers on the extensive sea. He dances in Tillai-Ambalam
girt with sky-vaulting gardens rich in great flowers
of pervading fragrance, over which the moon sails.
It is here the Devas long to adore Him. 9

1037. மண்டை கொண்டு உழல் தேரர்; மாசு உடை மேனி வன்சமணர்,--
குண்டர்--பேசிய பேச்சுக் கொள்ளன்மின்! திகழ் ஒளி நல்ல
துண்டவெண்பிறை சூடி, சுண்ணவெண்பொடி அணிந்து, எங்கும்
வண்டு வாழ் பொழில் சூழ்ந்த வாழ்கொளிபுத்தூர் உளாரே.

Our God is entempled in Vāzhkoḷiputthūr girt with
gardens where bees galore thrive.
Do utterly ignore the words of the Tēras who roam
about toting *Mantai-s* and those of the dirty-bodied
Samaṇas who are obstinate and obdurate.
Adore our God who sports the slice of the white moon
on His crest. Lo, He is adorned with the white ash powder. 10

1038. நலம் கொள் பூம்பொழில் காழி நல்-தமிழ் ஞானசம்பந்தன்,
வலம் கொள் வெண்மழுவாளன் வாழ்கொளிபுத்தூர் உளானை--
இலங்கு வெண்பிறையானை--ஏத்திய தமிழ்இவை வல்லார்,
நலம் கொள் சிந்தையர் ஆகி, நன்நெறி எய்துவர் தாமே.

Gnānasambandhan, the one versed in goodly Tamiḻ, the abider at Kāzhi
girt with flowery gardens of foison, has hailed the presiding deity
of Vāzhkoḷiputthūr, the wielder of a *mazhu* in His right hand,
in these hymns of Tamiḻ. They that are valiant
in these will be blessed with the weal-conferring deportment
and thus gain the Godly Way. 11

95. திரு அரசிலி பியந்தைக்காந்தாரம்

95. TIRUVARASILI

1039. பாடல் வண்டு அறை கொன்றை, பால்மதி, பாய் புனல் கங்கை,
கோடல் கூவிளமாலை, மத்தமும், செஞ்சடைக் குலாவி,
வாடல்வெண்தலைமாலை மருவிட, வல்லியந்தோல்மேல்
ஆடல் மாசுணம் அசைத்த அடிகளுக்கு இடம்--அரசிலியே.

On our God's ruddy matted crest are *kondrai* blossoms bebuzzed by bees,
the milk-white moon, the gushing Ganga, the garlands of
kotal and *kūvilam*, the flowers of *ūmatham* and the garland
of a white faded skull. His waist is clad in tiger-skin;
on His shoulders winds a sinuous serpent that doth dance.
Lo, the Noble One's delubrum is Arasili. 1

1040. ஏறு பேணி அது ஏறி; இள மதக்களிற்றினை எற்றி,
வேறுசெய்து, அதன் உரிவை வெம்புலால் கலக்க மெய் போர்த்த
ஊறு தேன் அவன்; உம்பர்க்கு ஒருவன்; நல் ஒளி கொள் ஒண்சுடர் ஆம்;
ஆறு சேர்தரு சென்னி அடிகளுக்கு இடம்--அரசிலியே.

Riding His Bull in delight great, He flayed the musty
tusker that came confronting Him, and mantled
Himself in its white flesh-sticking and stinking skin. He is the melis
that wells up in the *chinta*-s of His devoees; He is the Peerless One
hailed by the Devas; He blazes bright with exquisite radiance.
He wears on His crest the river Ganga.
Lo, the Noble One's delubrum is, indeed, Arasili. 2

1041. கங்கை நீர் சடைமேலே கதம் மிக, கதிர் இளவனமென்-
கொங்கையாள் ஒரு பாகம் மருவிய, கொல்லை வெள் ஏற்றன்;
சங்கை ஆய்த் திரியாமே தன் அடியார்க்கு அருள்செய்து,
அங்கையால் அனல் ஏந்தும் அடிகளுக்கு இடம்--அரசிலியே.

On His matted crest He bears the Ganga that down descended crashing.
He is concorporate with Uma whose breasts are beauteous, young and dazzling.
He rides the argent Bull of the *mullai* region; He doth
bless His devotees without doubt. He holds the fire in His palm.
Lo, the Noble One's delubrum is, indeed, Arasili. 3

1042. மிக்க காலனை வீட்டி, மெய் கெடக் காமனை விழித்து,
புக்க ஊர் இடு பிச்சை உண்பது, பொன் திகழ் கொன்றை,
தக்க நூல் திகழ் மார்பில்-தவள-வெண்நீறு அணிந்து, ஆமை
அக்கின் ஆரமும் பூண்ட அடிகளுக்கு இடம்--அரசிலியே.

He did away with the ever-wrathful Yama; He so stared
Manmata that he totally lost his form.
He eats the alms offered to Him by women folk.
His chest is adorned with the golden kondrai garland and the sacred thread.
He is coated with the holy ash; He wears a carapace
and a garland of bones.
Lo, the Noble One's delubrum is, indeed, Arasili. 4

1043. மான் அஞ்சும் மடநோக்கி மலைமகள் பாகமும் மருவி,
தான் அஞ்சா அரண் மூன்றும் தழல் எழச் சரம் அது துரந்து,
வான் அஞ்சும் பெருவிடத்தை உண்டவன்; மாமறைஓதி;
ஆன் அஞ்சு ஆடிய சென்னி அடிகளுக்கு இடம்--அரசிலியே.

He is concorporate with Himavant's bashful Daughter whose eyes excel
the antelope's. He sped a dart and gutted with fire the three
walled-citadels of the fearless Asuras.
He quaffed the great venom that put to dreadful fright the Devas.
He is a reciter of the Vedas and He has His ablutions
in the five producs of the kine.
Lo, the Noble One's delubrum is, indeed, Arasili. 5

1044. பரிய மாசுணம் கயிறா, பருப்பதம் அதற்கு மத்து ஆக,
பெரிய வேலையைக் கலங்க, பேணிய வானவர் கடைய,
கரிய நஞ்சுஅது தோன்றக் கலங்கிய அவர் தமைக் கண்டு,
அரிய ஆர்அமுது ஆக்கும் அடிகளுக்கு இடம்--அரசிலியே.

Longing to come by *amrit* when the Devas churned the vast sea with
the churning stick--the Mount Mantara--, and with the rope-- the puissant
snake Vāsuki--, up rose the murky venom
at which the Devas stood bebufuddled in dread.
Beholding their plight, our God quaffed it, as though it were ambrosia.
Lo, the Noble One's delubrum is, indeed, Arisili. 6

1045. The original Tamil verse is not extant. 7

1046. வண்ண மால்வரை தன்னை மறித்திடல்உற்ற வல் அரக்கன்
கண்ணும் தோளும் நல்வாயும் நெரி தரக் கால்விரல் ஊன்றி,
பண்ணின் பாடல் கைந்நரம்பால் பாடிய பாடலைக் கேட்டு,
அண்ணலாய் அருள் செய்த அடிகளுக்கு இடம்--அரசிலியே.

Our God so pressed with a toe of His foot the mighty Asura who durst uproot His
beauteous Mount, that his arms, eyes and great mouths were crushed.
Then when he wrought a Vina out of his nerves, strummed it
and sang melodiously,He blessed him with manifold grace,
Lo, the Noble One's delubrum is, indeed, Arasili. 8

1047. குறிய மாண் உரு ஆகிக் குவலயம் அளந்தவன்தானும்,
வெறி கொள் தாமரைமேலே விரும்பிய மெய்த்தவத்தோனும்,
செறிவு ஒணா வகை எங்கும் தேடியும், திருவடி காண
அறிவு ஒணா உருவத்து எம் அடிகளுக்கு இடம்--அரசிலியே.

Both Vishnu in the guise of a dwarf that metamorphosed
into a cosmic figure and measured the entire earth in a stride
and Brahma, the true tapaswi seated on the suaveolent Lotus,
went in quest of His feet and crown. At this, He so soared up and up
as a column of fire that His feet (and crown) transcended their ken of vision.
Lo, the Noble One is, indeed entempled in Arasili. 9

1048. குருளை எய்திய மடவார் நிற்பவே குறிஞ்சியைப் பறித்துத்
திரளை(க்) கையில் உண்பவரும், தேரரும், சொல்லிய தேறேல்!
பொருளை, பொய்இலி மெய் எம் நாதனை, பொன்அடி வணங்கும்
அருளை ஆர் தர நல்கும் அடிகளுக்கு இடம்--அரசிலியே.

Deem not worthy the words of the Samanas, who without living the domestic life
companied with young bashful women, indulge in trichotillomania
and eat standing the rice balls received by them in their gowpens,
as alms, and of the Buddhists.
He is our God, the True Ens who is to be gained by us. He is never false;
He is ever true; He is our Lord-God. Who else can bless us with grace?
Pay obeisance to His golden feet. Lo, the Noble One abides at Arasili. 10

1049. அல்லி நீள் வயல் சூழ்ந்த அரசிலி அடிகளை, காழி
நல்ல ஞானசம்பந்தன் நல்-தமிழ் பத்துஇவை, நாளும்,
சொல்ல வல்லவர், தம்மைச் சூழ்ந்து அமரர் தொழுது ஏத்த,
வல்ல வான்உலகு எய்தி, வைகலும் மகிழ்ந்து இருப்பாரே.

On the Noble God of Arasili which is girt with extensive fields where
lilies thrive lovelily the goodly Gnānasambandhan of Kāzhi has sung
these ten hymns in Tamiḻ par excellence.
They that recite these ten psalms and hail Him,
will gain the ethereal world and flourish in
eternal bliss, hailed by the supernals who form their company. 11

96. சீகாழி பியந்தைக்காந்தாரம்

96. SEEKĀZHI

1050. பொங்கு வெண்புரி வளரும் பொற்பு உடை மார்பன், எம்பெருமான்,
செங்கண் ஆடு அரவு ஆட்டும் செல்வன், எம் சிவன், உறை கோயில்--
பங்கம் இல் பலமறைகள் வல்லவர், பத்தர்கள், பரவும்
தங்கு வெண்திரைக் கானல்-தண்வயல் காழி நன்நகரே.

On the beautiful chest of our God, the strands of the sacred thread roll in
swelling whiteness. He causes the ruddy-eyed serpent to dance.
He is the Opulent One. He is Siva who is entempled in the lovely city of Seekāzhi
girt with foreshore gardens and cool fields close to the white waves of the sea.
Here *bhaktas* and those well-versed in the many
and blemishless Vedas adore and hail Him. 1

1051. தேவர் தானவர் பரந்து, திண்வரை மால்கடல் நிறுவி,
நா அதால் அமிர்து உண்ண நயந்தவர் இரிந்திடக் கண்டு,
"ஆவ!" என்று அரு நஞ்சம் உண்டவன் அமர்தரு மூதூர்--
காவல் ஆர் மதில் சூழ்ந்த கடி பொழில் காழி நன்நகரே.

When Devas and Asuras foregathered, planted the rocky
Mount into the vast sea and churned it, uprose the venom
at which they fled helter skelter shouting: "Save us, Oh save us!"
Our God had the spreading venom duly secured and quaffed it.
He is entempled in the hoary polis, the lovely city of
the walled-Seekāzhi girt with fragrant gardens. 2

1052. கரியின் மா முகம் உடைய கணபதி தாதை, பல்பூதம்
திரிய இல் பலிக்கு ஏகும் செழுஞ்சுடர், சேர்தரு மூதூர்--
சரியின் முன்கை நல் மாதர் சதிபட மா நடம்ஆடி,
உரிய நாமங்கள் ஏத்தும் ஒலி புனல் காழி நன்நகரே.

He is the Sire of the great Ganapati, the elephant-faced.
He roams about with His Bhuta-Hosts soliciting alms in every house.
He is God Siva of splendorous radiance; He is entempled in the hoary
and lovely urbs of Kāzhi, rich in dinsome water,
and where the beautiful belles whose forearms are bebangled,
keeping time doubled with foot work, dance, the while hailing 3
His hallowed names.

1053. சங்க வெண்குழைச் செவியன், தண்மதி சூடிய சென்னி
அங்கம் பூண் என உடைய அப்பனுக்கு அழகிய ஊர்ஆம்--
துங்க மாளிகை உயர்ந்த தொகு கொடி வான்இடை மிடைந்து,
வங்க வாள்மதி தடவும் மணி பொழில் காழி நன்நகரே.

He wears in His ear a white kuzhai wrought of chank; He sports on His
matted crest the cool crescent; He, our Sire, is
adorned with a wreath of bones which, indeed, is His jewel.
He is entempled in the lovely city of Kāzhi, the beautiful polis
of ornate gardens and where the flags
on the tall poles fastened to the lofty and storeyed
mansions, getting close to each other, brush the argent moon. 4

1054. "மங்கை கூறு அமர் மெய்யான், மான்மறி ஏந்திய கையான்,
எங்கள் ஈசன்!" என்று எழுவார் இடர்வினை கெடுப்பவற்கு ஊர்ஆம்--
சங்கை இன்றி நன்நியமம் தாம் செய்து, தகுதியின் மிக்க
கங்கைநாடு உயர் கீர்த்தி மறையவர் காழி நன்நகரே.

He annuls the cruel karma--the engenderer of troubles--, of those that
wake up hailing Him as the true God concorporate with
His Woman, as the One who holds a fawn in His hand and as their own Deity.
He is entempled in the lovely city of Kāzhi where thrive the Vedic Brahmins,
who without doubt, duly perform the ordained rituals
thanks to which their great renown extends to the realm of the Ganga. 5

1055. நாறு கூவிளம் மத்தம் நாகமும் சூடிய நம்பன்,
ஏறும் ஏறிய ஈசன், இருந்து இனிது அமர்தரு மூதூர்--
நீறு பூசிய உருவர், நெஞ்சினுள் வஞ்சம் ஒன்று இன்றித்
தேறுவார்கள், சென்று ஏத்தும் சீர் திகழ் காழி நன்நகரே.

He is the supremely desirable Person who is decked with
fragrant *Vilva*, *ūmattham* and snake on His matted crest.
He rides in delight great, His Bull; He wears the holy ash. He is sweetly
enshrined in the hoary urbs—the lovely city of the glorious Kāzhi to which repair
those whose hearts are absolutely free from deception, and adore Him. 6

1056. நடம் அது ஆடிய நாதன், நந்திதன் முழவுஇடைக் காட்டில்;
விடம் அமர்ந்து, ஒரு காலம், விரித்து அறம் உரைத்தவற்கு ஊர்ஆம்--
இடம்அதா மறை பயில்வார், இருந்தவர், திருந்தி அம் போதிக்
குடம்அது ஆர் மணி மாடம் குலாவிய, காழி நன்நகரே.

He is the Lord-God that dances in the crematory
to the accompaniment of *muzhavu* played by Nandi.
He is the quaffer of venom; of yore, He explicated dharma to the saints.
He is entempled in the lovely city of Kāzhi dight with
ornate and storeyed mansions in which are
homa-*kundas*; here flourish the practitioners of the extensive Vedas. 7

1057. கார் கொள் மேனி அவ் அரக்கன்--தன் கடுந் திறலினைக் கருதி,
ஏர் கொள் மங்கையும் அஞ்ச, எழில் மலை எடுத்தவன்--நெரிய,
சீர் கொள் பாதத்து ஓர் விரலால் செறுத்த எம் சிவன் உறை கோயில்--
தார் கொள் வண்டுஇனம் சூழ்ந்த தண்வயல் காழி நன்நகரே.

When the dark-hued Asura, thinking no end
of his fierce puissance durst uproot His splendorous
Mount at which the comely Uma stood in dread,
He, with a toe of His glorious foot pressed and undid him.
He is Siva, enshrined in the lovely city of Kāzhi rich in cool fields;
here thrives bees galore seeking the nectar of blossoms. 8

1058. மாலும் மா மலரானும் மருவி நின்று, இகலிய மனத்தால்,
பாலும் காண்பு அரிதுஆய பரஞ்சுடர்தன் பதி ஆகும்--
சேலும் வாளையும் கயலும் செறிந்து தன் கிளையொடு மேய,
ஆலும் சாலிநல்கதிர்கள் அணி, வயல் காழி நன்நகரே.

When Vishnu, and Brahma seated on the great Lotus, with all their *manam,*
contended with each other for supremacy, He, our God,
so stood loftily that they could not eye even a part of Him.
He is, indeed, the Flame of the Empyrean. He is entempled
in the lovely city of Kāzhi in whose ornate fields flourish thick
the fishes of *cale*, *Vālai* and kayal, and where the heavy ears
of paddy, sway in the wind. 9

1059. புத்தர், பொய் மிகு சமணர், பொலி கழல்அடி இணை காணும்
சித்தம் மற்று அவர்க்கு இலாமைத் திகழ்ந்த நல் செழுஞ்சுடர்க்கு ஊர்ஆம்--
சித்தரோடு நல் அமரர், செறிந்த நல்மாமலர் கொண்டு,
"முத்தனே, அருள்!" என்று முறைமை செய் காழி நன்நகரே.

His splendorous feet are unbeholdable by the Buddhists
and the Samaṇas who are fibsters; These, alas, lack the right *chinta.*
He is the splendorous and sempiternal Flame. He is entempled in
the lovely city of Kāzhi where the Siddhas and the Devas,
duly adore Him with great flowers galore and pray thus:
"O Granter of mukti, do bless us." 10

1060. ஊழி ஆனவைபலவும் ஒழித்திடும் காலத்தில் ஓங்கு
....
Even afer the passage of many many
Cosmic Dissolutions, it stands aloft
... ... 11
(This verse is incomplete.)

97. சீகாழி நட்டராகம்
திருவிராகம்
97. SEEKĀZHI

1061. "நம் பொருள், நம் மக்கள்" என்று நச்சி, இச்சை செய்து, நீர்
அம்பரம் அடைந்து, சால அல்லல் உய்ப்பதன் முனம்--
உம்பர்நாதன், உத்தமன், ஒளி மிகுந்த செஞ்சடை
நம்பன், மேவு நன்நகர்--நலம் கொள் காழி சேர்மினே!

Ere You suffer severely from attachment claiming:
"these are our things and these are our offspring."
hail Him, the God of the supernals, the Noble One,
the supremely desirable One of the radiant matted hair,
and reach His lovely city of Kāzhi abounding in weal. 1

1062. பாவம் மேவும் உள்ளமோடு, பத்தி இன்றி, நித்தலும்
ஏவம் ஆன செய்து, சாவதன் முனம்--இசைந்து நீர்,
நீவம் மாலை தூபமும் செறிந்த கையர் ஆகி, நம்
தேவதேவன் மன்னும் ஊர்--திருந்து காழி சேர்மினே!

Ere You pass away sans *bhakti*, doing daily futile
acts prompted by your desire-borne heart,
foster volitional love for our God and hail Him with Your hands
holding lighted lamps, garlands, holy smoke and the like.
Reach the rdeeming Kāzhi where abides eternally our God of gods. 2

1063. சோறு கூறை இன்றியே துவண்டு, தூரம்ஆய், நுமக்கு
ஏறு சுற்றம் எள்கவே, இடுக்கண் உய்ப்பதன் முனம்-
ஆறும் ஓர் சடையினான், ஆதி யானை செற்றவன்,
நாறு தேன் மலர்ப்பொழில் நலம் கொள்--காழி சேர்மினே!

Ere You wilt without food and shelter and fall into the miserable plight
distanced from your kin that deride you, reach and hail Him whose
matted hair sports the Ganga, the One who
did away with the creator Brahma.
Lo, He is enshrined in the weal-abounding Kāzhi,
girt with fragrant and flowery gardens rich in melis. 3

1064. நச்சி நீர் பிறன் கடை நடந்து செல்ல, "நாளையும்
உச்சி வம்!" எனும் உரை உணர்ந்து கேட்பதன் முனம்--
பிச்சர், நச்சு அரவு அரைப் பெரிய சோதி, பேணுவார்
இச்சை செய்யும் எம்பிரான்,--எழில் கொள் காழி சேர்மினே!

Ere You wallow in intensely- felt suffering owing to your desirous seeking of
the thresholds of people who bid you come the next day at noon,
reach the beautiful shrine of Kāzhi where abides our God,
the mad lover of devoted bhaktas, the One decked with
snakes of poisonous sacs and the One of Empyrean effulgence. 4

1065. கண்கள் காண்பு ஒழிந்து, மேனி கன்றி, ஒன்று அலாத நோய்
உண்கிலாமை செய்து, நும்மை உய்த்து அழிப்பதன் முனம்--
விண் குலாவு தேவர் உய்ய வேலை நஞ்சு அமுதுசெய்,
கண்கள்மூன்று உடைய, எம் கருத்தர்--காழி சேர்மினே!
Ere the orbs of your eyes are quenched, your body languishes sore
and multitudinous maladies assail and totally enervate you,
gain access to Siva of trinocular vision who as the Almighty
abides at Kāzhi and who, of yore, quaffed the oceanic venom,
as though it were ambrosia, to save the Devas. 5

1066. அல்லல் வாழ்க்கை உய்ப்பதற்கு அவத்தமே பிறந்து, நீர்,
எல்லை இல் பிணக்கினில் கிடந்திடாது எழு(ம்)மினோ!
பல்இல் வெண்தலையினில் பலிக்கு இயங்கு பான்மையான்,
கொல்லை எறுஅது ஏறுவான், கோலக் காழி சேர்மினே!

Born to lead a futile and troublous life, you get involved in
numberless contentions; this ’ll not do.
Rise up and gain the splendorous Kāzhi where abides the Rider
of the Bull of the *mullai* region, who goes
abegging alms toting in His hand a white toothless skull. 6

1067. This verse is not extant. 7

1068. பொய் மிகுந்த வாயராய்ப் பொறாமையோடு செல்லும் நீர்
ஐ மிகுந்த கண்டராய் அடுத்து இரைப்பதன் முனம்--
மை மிகுந்த மேனி வாள் அரக்கனை நெரித்தவன்,
பை மிகுந்த பாம்பு அரைப் பரமர்,--காழி சேர்மினே!

Your lips articulate numberless falsehoods and your words are born of envy.
Lo, ere phlegm blocks your throat and makes your breathing hard,
reach Kāzhi where abides our God, who in His waist, is cinctured with
a serpent of poisonous sacs and who is
the supreme God who, of yore, crushed the sword- wielding
Asura whose body was extremely murky. 8

1069. காலினோடு கைகளும் தளர்ந்து, காமநோய்தனால்
ஏல வார் குழலினார் இகழ்ந்து உரைப்பதன் முனம்--
மாலினோடு நான்முகன்--மதித்தவர்கள்--காண்கிலா
நீலம் மேவு கண்டனார் நிகழ்ந்த--காழி சேர்மினே!

Ere Your hands and feet grow extremely effete by your lecherous
indulgence at which women of perfumed locks rail at you,
reach Kāzhi where abides splendorously the God
of the blue throat whose worth was unassessable
and whose person was unbeholdable by 9
the Four-faced Brahma and Vishnu.

1070. நிலை வெறுத்த நெஞ்சமோடு நேசம் இல் புதல்வர்கள்
முலை வெறுத்த பேர் தொடங்கியே முனிவதன் முனம்--
தலை பறித்த கையர், தேரர், தாம் தரிப்ப (அ)ரியவன்;
சிலை பிடித்து எயில் எய்தான்;--திருந்து காழி சேர்மினே!

Before you reach your dotage and wallow long in it when your sons
and women cease to love and serve you besides being wroth with you,
do reach the redeeming Kāzhi and hail its God who is beyond
the ken of comprehension of the Samaṇas
that are trichotillomanias and the Buddhists.
Lo, our God, of yore, smote with His bow the walled-citadels. 10

1071. தக்கனார் தலை அரிந்த சங்கரன்--தனது அரை
அக்கினோடு அரவு அசைத்த அந்திவண்ணர்--காழியை,
ஒக்க ஞானசம்பந்தன் உரைத்த பாடல் வல்லவர்,
மிக்க இன்பம் எய்தி வீற்றிருந்து வாழ்தல் மெய்ம்மையே.

Sankara, of yore, decapitated Daksha; His waist is cinctured with
a wreath of bones and a dancing serpent; He is of Kāzhi.
Gnānasambandhan has becomingly hailed Him in these hymns.
They that are valiant in these, will be poised majestically in
accrescent joy and will, it is certes, thrive exceedingly. 11

98. திருத் துருத்தி

நட்டராகம்

திருவிராகம்

98. TIRUTTHURUTTHI

1072. வரைத்தலைப் பசும்பொனோடு அருங் கலங்கள் உந்தி வந்து,
இரைத்து, அலைச் சுமந்து கொண்டு எறிந்து, இலங்கு காவிரிக்
கரைத்தலைத் துருத்தி புக்கு இருப்பதே கருத்தினாய்!
உரைத்தலைப் பொலிந்த உனக்கு உணர்த்தும்ஆறு வல்லமே?

The splendorous river Kāviri flows rolling in its current the montane
and ever-fresh gold and rare gems which are shored up by its waves.
It is on its bank at Thurutthi our God is entempled willingly.
O Omniscient God, how can we express Thee unblamed? 1

[**Note.** I have quoted *mutatis mutandis* a passage of Milton's that runs thus:
"May I express Thee unblamed."-Paradise Lost, Book III, Line 3.]

1073. அடுத்து அடுத்து அகத்தியோடு, வன்னி, கொன்றை, கூவிளம்,
தொடுத்துஉடன் சடைப் பெய்தாய்! துருத்தியாய்! ஓர் காலனைக்
கடுத்து, அடிப்புறத்தினால் நிறத்து உதைத்த காரணம்
எடுத்து எடுத்து உரைக்கும் ஆறு வல்லம் ஆகில், நல்லமே.

You have adorned on Your matted crest the flowers
of *akatthi, vanni* and *kondrai* with the leaves of *vilva* in a concatenated row.
You are entempled in Thurutthi.
If we can iterate and reiterate competently the reason
for Your wrathful kicking with Your foot, Yama, we'll come by weal. 2

1074. கங்குல் கொண்ட திங்களோடு கங்கை தங்கு செஞ்சடைச்
சங்கு இலங்கு வெண்குழை சரிந்து இலங்கு காதினாய்!
பொங்கு இலங்கு பூணநூல் உருத்திரா! துருத்தி புக்கு,
எங்கும் நின் இடங்களா அடங்கி வாழ்வது என்கொலோ?

Our God Rudra! You sport on Your ruddy matted
crest the moon that shines nocturnally.
In the lobe of Your ear dangles a white *kuzhai* wrought
of chank; Your chest is decked with the strands
of the splendorous sacred threads. Though You are omnipresent,
yet wherefore did You choose Thurutthi for Your kenotic entemplement? 3

1075. கருத்தினால் ஓர் காணி இல்; விருத்தி இல்லை; தொண்டர்தம்
அருத்தியால்,-தம்(ம்) அல்லல் சொல்லி, ஐயம் ஏற்பது அன்றியும்,
ஒருத்திபால் பொருத்தி வைத்து, உடம்பு விட்டு யோகியாய்
இருத்தி நீ, துருத்தி புக்கு: இது என்ன மாயம் என்பதே!

Duly considered, You do not own any land from the income of which
You can subsist. Seeking relief, You are hailed with penchant
by Your servitors; yet You go about begging alms.
You are concorporate with Your Woman; yet unattached
to Your body You flourish as a Yogi. What gramarye is this
that, You, the omnipresent, are entempled in Thurutthi! 4
[**Note.** Stella Kramrich observes that sexual union is impossible in
Siva's androgynic form.]

1076. துறக்குமா சொலப்படாய்! துருத்தியாய்! திருந்து அடி
மறக்கும் ஆறு இலாத என்னை மையல் செய்து, இம் மண்ணின் மேல்
பிறக்கும் ஆறு காட்டினாய்! பிணிப்படும் உடம்பு விட்டு
இறக்கும் ஆறு காட்டினாய்க்கு இழுக்குகின்றது என்னையே?

O God entempled in Thurutthi, You reveal not
to me the way to gain renunciation.
I throve as one who would never forget Your redeeming
feet; alas, by Your gramarye, I came to be born on earth.
You do reveal to me the demise of the fettered embodiment.
What, indeed, is the sin I have committed for this, my miserable plight? 5

1077. வெயிற்கு எதிர்ந்து இடம் கொடாது அகம் குளிர்ந்த பைம்பொழில்
துயிற்கு எதிர்ந்த புள்இனங்கள் மல்கு தண் துருத்தியாய்!
மயிற்கு எதிர்ந்து அணங்கு சாயல் மாது ஓர்பாகம் ஆக மூ-
எயிற்கு எதிர்ந்து ஓர் அம்பினால் எரித்த வில்லி அல்லையே?

O God who is enshrined in Thurutthi abounding in
cool and imbrowned gardens proof against the rays
of the sun! Here thrive birds galore resenting slumber.
You are concorporate with Your Woman whose lovely mien
vanquishes and distresses the beautiful peafowls.
Aren't You the hunter, who, of yore, gutted with fire
the three walled-citadels? 6

1078. கணிச்சிஅம்படைச் செல்வா! கழிந்தவர்க்கு ஒழிந்த சீர்
துணிச் சிரக் கிரந்தையாய்! கரந்தையாய்! துருத்தியாய்!
அணிப்படும் தனிப் பிறைப் பனிக் கதிர்க்கு அவாவும் நல்
மணிப் படும் பைநாகம் நீ மகிழ்ந்த அண்ணல் அல்லையே?

O the Opulent One who wields the mazhu!
You wear the knotted wreath of the heads
of Brahma and Vishnu whose deaths defy counting.
You wear the flowers of *Karantai*; You are enshrined in Turutthi.
You sport on Your matted crest the unique and the moist-rayed
crescent juxtaposed with the hooded adder of poisonous sacs.
Lo, aren't You the Noble One that rejoices thus? 7

1079. சுடப் பொடிந்து உடம்பு இழந்து அநங்கன் ஆய மன்மதன்
இடர்ப்படக் கடந்து, இடம் துருத்திஆக எண்ணினாய்!
கடல்படை உடைய அக் கடல் இலங்கை மன்னனை,
அடல் பட, அடுக்கலில் அடர்த்த அண்ணல் அல்லையே?
Manmata suffered the fatal affliction when You stared him to death.
You are the conqueror of senses; You chose, in grace,
to get entempled in Thurutthi.
You crushed the sovereign of Sri Lanka, the lord of the naval force,
by pressing Your toe on your Mount which he durst uproot.
Aren't You the ever-noble God of ours? 8

1080. களம் குளிர்ந்து இலங்கு போது காதலானும், மாலும்ஆய்,
வளம் கிளர் பொன்அம் கழல் வணங்கி வந்து காண்கிலார்;
துளங்கு இளம்பிறைச் செனித் துருத்தியாய்! திருந்து அடி,
உளம் குளிர்ந்தபோதுஎலாம், உகந்துஉகந்து உரைப்பனே.

Even when Brahma whose seat is the cool and melliferous
Lotus and Vishnu paid obeisance to You, they were
unable to eye Your matted crest which bears the bright cresent
and your golden and uberous feet. You are entempled in Thurutthi.
Whenever I revel in the coolth of heart-felt joy,
by Your grace, I will hail and adore You. 9

1081. புத்தர், தத்துவம் இலாச் சமண், உரைத்த பொய்தனை
உத்தமம் எனக் கொளாது, உகந்து எழுந்து, வண்டுஇனம்
துத்தம் நின்று பண்செயும் சூழ் பொழில்--துருத்தி எம்
பித்தர்பித்தனைத் தொழ, பிறப்பு அறுத்தல் பெற்றியே.
Our God abides at Thurutthi in whose ever-fresh gardens, bees hum
the note yclept *tuttham*.Here thrive bhaktas who reject the falsehoods
of the *tattvaless* Buddhists and Samanas, and who on waking hail Him
and rejoice. Our mad God loves them that are mad after Him.
Lo, our cycle of birth and death will cease altogether if we love Him sincerely. 10

1082. கற்று முற்றினார் தொழும் கழுமலத்து அருந்தமிழ்
சுற்றும் முற்றும் ஆயினான் அவன் பகர்ந்த சொற்களால்,
பெற்றம் ஒன்று உயர்த்தவன் பெருந் துருத்தி பேணவே,
குற்றம் முற்றும் இன்மையின், குணங்கள் வந்து கூடுமே.
Gnānasambandhan of Kazhumalam, adored by those of accomplished learning,
has sung these hymns on our God who is here,
there and everywhere, and who sports in His
flag the signum of His Bull and who is entempled in Thuruthi.
They that are valiant in these psalms will be totally manumitted
from sins and wrongs; great virtues will become theirs. 11

99. திருக் கோடிகா

99. TIRUKKŌṬIKA

நட்டராகம்

1083. "இன்று நன்று, நாளை நன்று" என்று நின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போக விட்டுப் போதுமின்!
மின் தயங்கு சோதியான்--வெண்மதி, விரிபுனல்,
கொன்றை, துன்று சென்னியான்--கோடி காவு சேர்மினே!

Give up thinking which is bred by desire that this day is good
and the day after this day is good and thus waste your life.
Hie and reach Koṭika where is enshrined our God whose matted crest
sports the white crescent, the extensive Ganga and the blossoms
of *kondrai*; He is the One of fulgurant effulgence. 1

1084. அல்லல் மிக்க வாழ்க்கையை ஆதரித்து இராது நீர்,
நல்லது ஓர் நெறியினை நாடுதும், நட(ம்)மினோ!
வில்லை அன்ன வாள்நுதல் வெள்வளை ஓர்பாகம்ஆம்
கொல்லை வெள்ளை ஏற்றினான் கோடிகாவு சேர்மினே!
Foster not life replete with troubles; seek and pursue the right way.
Fare forth and reach Koṭika where is enshrined our God who is
concorporate with Her whose bow-like forehead is bright and whose
forearms are decked with the white chank-bangles.
Lo, He is the Rider of the Bull of the mullai region. 2

1085. துக்கம் மிக்க வாழ்க்கையின் சோர்வினைத் துறந்து நீர்,
தக்கது ஓர் நெறியினைச் சார்தல் செய்யப் போதுமின்!
அக்கு அணிந்து, அரைமிசை, ஆறு அணிந்த சென்னிமேல்
கொக்குஇறகு அணிந்தவன் கோடிகாவு சேர்மினே!
Give up the fatigue of life laden with sorrows galore;
do endeavour to gain the fit and proper way.
Reach Koṭika of our God who is cinctured with a wreath
of bones, in His waist, and who is adorned with the heron's feather. 3

1086. பண்டு செய்த வல்வினை பற்று அறக் கெடும் வகை
உண்டு; உமக்கு உரைப்பன், நான்: ஒல்லை நீர் எழுமினோ!
மண்டு கங்கை செஞ்சடை வைத்து மாது ஓர்பாகமாக்
கொண்டு உகந்த மார்பினான் கோடிகாவு சேர்மினே!

I'll reveal to you the way to annul altogether tracelessly the resultants
of your past cruel deeds. Rise up in all celerity and reach Koṭika of our God
who sports on His ruddy matted crest the swelling Ganga.
His bosom revels in bliss as He is concorporate with His Woman. 4

1087. முன்னை நீர் செய் பாவத்தால் மூர்த்திபாதம் சிந்தியாது,
இன்னம் நீர் இடும்பையின் மூழ்கிறீர், எழு(ம்)மினோ!
பொன்னை வென்ற கொன்றையான், பூதம் பாட ஆடலான்,
கொல்-நவிலும் வேலினான், கோடிகாவு சேர்மினே!

You suffer from the consequences of the sins you committed
in your past births when you adored not the feet of Siva-Mūrti.
Alas, You stand now drowned in troubles galore.
I'll tell you what you should do to rout these.
Reach Koṭika of our God who wears *kondrais*
that excel gold, who dances to the singing
of His Bhutas and who wields the murderous javelin. 5

1088. ஏவம் மிக்க சிந்தையோடு இன்பம் எய்தல் ஆம் எனப்
பாவம் எத்தனையும் நீர் செய்து ஒரு பயன் இலை;
காவல் மிக்க மா நகர் காய்ந்து வெங்கனல் படக்
கோவம் மிக்க நெற்றியான் கோடிகாவு சேர்மினே!
No benefit can ensue from your sinful deeds galore
which you did, prompted by your base chinta, hoping to gain joy.
He gutted with raging fire the great, well-guarded and walled-citadels
by staring at them with the eye of His forehead.
Reach Koṭikka where our God is enshrined, and adore Him. 6

1089. ஏண் அழிந்த வாழ்க்கையை இன்பம் என்று இருந்து நீர்,
மாண் அழிந்த மூப்பினால் வருந்தல்முன்னம் வம்மினோ!
பூணல் வெள்எலும்பினான், பொன்திகழ் சடைமுடிக்
கோணல்வெண்பிறையினான், கோடிகாவு சேர்மினே!

Before you age into shameful dotage and wallow in misery having
performed in the past inglorious deeds deeming such living as joyous,
fare forth to Koṭikka where our God is enshrined and adore Him.
Lo, He wears a garland of white bones as His ornament;
He sports on His golden matted crest the curved and white crescent. 7

1090. மற்று இ(வ்) வாழ்க்கை மெய் எனும் மனத்தினைத் தவிர்ந்து நீர்,
பற்றி வாழ்மின், சேவடி! பணிந்து வந்து எழுமினோ!
வெற்றிகொள் தசமுகன் விறல் கெட இருந்தது ஓர்
குற்றம் இல் வரையினான் கோடிகாவு சேர்மினே!

Our God is entempled in Koṭika; He rendered futile the puissance
of the ten-headed Asura who was ever victorious.
Let not your *manam* believe as true the life which is false.
Gain at-one-ment with Siva's salvific feet who is seated on His
flawless Mount; to adore Him, reach Koṭika forthwith. 8

1091. மங்கு நோய் உறும் பிணி மாயும் வண்ணம் சொல்லுவன்;
செங்கண் மால், திசைமுகன், சென்று அளந்தும் காண்கிலா--
வெங் கண் மால்விடை உடை--வேதியன் விரும்பும் ஊர்,
கொங்கு உலாம் வளம் பொழில். கோடிகாவு சேர்மினே!
Listen. I'll show you the way to do away with the cause
for your wilting life which is wholly unwholesome.
Our God is the Vedic Brahmin who rides the great fearsome Bull.
He stood unbeholdable by Brahma and Vishnu when they went
in quest of Him.He is enshrined in Koṭika girt with
uberous and pollen-laden gardens. Do reach it and adore Him. 9

1092. தட்டொடு தழைமயில்பீலி கொள் சமணரும்,
பட்டு உடை விரி துகிலினார்கள், சொல் பயன் இலை;
விட்ட புன்சடையினான், மேதகும் முழவொடும்
கொட்டு அமைந்த ஆடலான், கோடிகாவு சேர்மினே!

Futile indeed are the utterances of the Samanas who tote plates
and bunches of peacock feathers
and those, the Buddhists who are shrouded
in ochre-robes. The strands of our God's matted hair are a-dangle;
His dance is accompanied on the great muzhavu.
He abides at Koṭika; reach it and adore Him. 10

1093. கொந்து அணி குளிர்பொழில் கோடிகாவு மேவிய
செந்தழல் உருவனை, சீர்மிகு திறல் உடை
அந்தணர் புகலியுள் ஆய கேள்வி ஞானசம்-
பந்தன தமிழ் வல்லார் பாவம்ஆன பாறுமே.

The form of the God of Koṭika which is girt with
cool and flowery gardens, is incarnadine flame.
On Him, Gnanasambandhan, well-versed in
learning, the one of Pukali where flourish Vedic Brahmins,
has sung these hymns in Tamiḻ. The sins of those
that are valiant in these psalms, will altogether perish. 11

100.திருக் கோவலூர்வீரட்டம் நட்டராகம்

திருவிராகம்

100. TIRUKKŌVALŪR VĪRAṬṬAM

1094. படை கொள் கூற்றம் வந்து, மெய்ப் பாசம் விட்டபோதின்கண்,
இடைகொள்வார் எமக்கு இலை; எழுக! போது, நெஞ்சமே!
குடை கொள் வேந்தன்மூதாதை, குழகன், கோவலூர் தனுள்--
விடைஅது ஏறும் கொடியினான்--வீரட்டானம் சேர்துமே.

Ere Yama, the one with an immense army, throws his noose
and snatches life, none will, alas, intervene, O heart, on our behalf.
So, rise and reach Virattam at Kōvalūr to adore our God,
the Rider of the Bull which is eke the signum of His flag.
Lo, He is the ancestor of Malayamān endowed with the royal umbrella. 1

1095. காவலாளர் தம் மனைக்கடைகள்தோறும் கால் நிமிர்ந்து,
இரவல்--ஆழி நெஞ்சமே!--இனியது எய்த வேண்டின், நீ!
குரவம் ஏறி வண்டுஇனம் குழலொடு யாழ்செய் கோவலூர்,
விரவி நாறு கொன்றையான், வீரட்டானம் சேர்துமே.

Do not repair straight to the thresholds of them--
the concealers--, and thither stand begging alms.
O profound heart! If you seek to come by Him
who is truly sweet, may you reach Virattam at Kōvalūr where bees
wing over the kura trees and hum like *yāzh* and flute.
Adore Him here who wears the wreath of
the *kondrais* of spreading suaveolence. 2

1096. உள்ளத்தீரே! போதுமின்(ன்), உறுதிஆவது அறிதிரேல்!
அள்ளல்-சேற்றில் கால் இட்டு, அங்கு அவலத்துள் அழுந்தாதே,
கொள்ளப் பாடு கீதத்தான், குழகன், கோவலூர் தனுள்--
வெள்ளம் தாங்கு சடையினான்--வீரட்டானம் சேர்துமே.

Ye of goodly heart! Do not get drowned in infernal quagmire;
if you really seek to come by the lasting beatitude, come with me
to the Virattam at Kōvalūr where abides our God, the singer of songs
coveted by longing ears. He is ever-young that bears
the flood of the Ganga. Let us hail and adore Him. 3

1097. கனைகொள் இருமல். சூலைநோய், கம்பதாளி, குன்மமும்,
இனையபலவும், மூப்பினோடு எய்தி வந்து நலியாமுன்,
பனைகள் உலவு பைம்பொழில் பழனம் சூழ்ந்த கோவலூர்,
வினையை வென்ற வேடத்தான், வீரட்டானம் சேர்துமே.

Before phlegmatic cough, colic, constant quaking of body and the like
coupled with dotage afflict us, let us fare forth to our
God's Virattam at Kōvalūr girt with ever-green gardens
and fields whose ridges are dotted with palm-trees,
and adore Him, the One of Saivite habit,
the triumphant Victor who is for ever free from Karma. 4

1098. உளம் கொள் போகம் உய்த்திடார், உடம்பு இழந்தபோதின்கண்;
துளங்கி நின்று நாள்தொறும் துயரல், ஆழி நெஞ்சமே!
வளம் கொள் பெண்ணை வந்து உலா வயல்கள் சூழ்ந்த கோவலூர்,
விளங்கு கோவணத்தினான், வீரட்டானம் சேர்துமே.

If body be lost, the experience of hearty enjoyment is lost,
do not daily wallow in misery and wilt. O heart of profound
capability, let us fare forth and reach our God's Virattam
at Kōvalūr girt with fecund fields fed by the great Peṇṇai river.
Here, let us adore our splendorous God, clad in a bright loin-cloth. 5

1099. கேடுமூப்புச்சாக்காடு கெழுமி வந்து நாள்தொறும்,
ஆடு போல நரைகள் ஆய் யாக்கை போக்குஅது அன்றியும்,
கூடி நின்று, பைம்பொழில் குழகன் கோவலூர் தனுள்--
வீடு காட்டும் நெறியினான்--வீரட்டானம் சேர்துமே.
Grey hair'll cover the body; life 'll be subject to adversity, old age
and demise; before these assail, give up roaming like a goat.
Le us reach betimes Virattam and adore the One
ever-young, the Revealer of the way of deliverance.
He dwells in Kōvalūr girt with ever-green gardens. 6

1100. உரையும் பாட்டும் தளர்வு எய்தி உடம்பு மூத்தபோதின்கண்,
நரையும் திரையும் கண்டு எள்கி நகுவர் நமர்கள் ஆதலால்,
வரைகொள் பெண்ணை வந்து உலா வயல்கள் சூழ்ந்த கோவலூர்,
விரைகொள் சீர் வெண்நீற்றினான், வீரட்டானம் சேர்துமே.

During old age speaking and singing will wane; grey hair and shrinking
of skin will occur, which witnessing our kith and kin'll cachinnate in glee.
So to worship our God, reach Virattram where He who is coated with
the fragrant, white and holy ash is entempled in Kōvalūr--enriched
by the Peṇṇai river that descends from the mountain and feeds the fields. 7

1101. ஏதம் மிக்க மூப்பினோடு, இருமல், ஈளை, என்று இவை
ஊதல் ஆக்கை ஓம்புவீர்! உறுதி ஆனது அறிதிரேல்,
போதில் வண்டு பண்செயும் பூந் தண் கோவலூர்தனுள்,
வேதம் ஓது நெறியினான், வீரட்டானம் சேர்துமே.
Ye who foster your swollen body suffering from miserable dotage, cough
and phlegm, do you desire to know the way leading to the gain
of beatitude. Hie to Virattam and reach it and adore its God--
the Knower of Vedas who blesses with deliverance.
He is entempled in the flowery Kōvalūr where
bees bombinate in blossoms. 8

1102. ஆறு பட்ட புன்சடை அழகன், ஆயிழைக்கு ஒரு-
கூறு பட்ட மேனியான், குழகன், கோவலூர் தனுள்--
நீறுபட்ட கோலத்தான், நீலகண்டன், இருவர்க்கும்
வேறுபட்ட சிந்தையான்,-வீரட்டானம் சேர்துமே.
He is the Handsome One whose ruddy matted crest sports
the river Ganga; He is concorporate with His bejewelled Woman;
He is the ever-young One entempled in Kōvalūr;
in His splendorous and ash bedaubed form; He is
imperceivable by Brahma and Vishnu. 9
Come, let us fare forth and reach His Virattam.

1103. குறிகொள், ஆழி நெஞ்சமே! கூறை துவர் இட்டார்களும்,
அறிவு இலாத அமணர், சொல் அவத்தம் ஆவது அறிதிரேல்,
பொறி கொள் வண்டு பண்செயும் பூந் தண் கோவலூர் தனில்,
வெறி கொள் கங்கை தாங்கினான், வீரட்டானம் சேர்துமே.

O heart endowed with profundity, if you are convinced of the futility of the words
of the ochre-shrouded Buddhists and the addle-pated Samaṇas,
come with me; let us reach and adore Him in His
Virattam at the flowery Kōvalūr where speckled bees hum in *pann*.
Lo, He is the God that sports on His crest the suaveolent Ganga. 10

1104. கழியொடு உலவு கானல் சூழ் காழி ஞானசம்பந்தன்,
பழிகள், தீரச் சொன்ன சொல் பாவநாசம் ஆதலால்,
அழிவுஇலீர், கொண்டு ஏத்துமின்! அம் தண் கோவலூர்தனில்,
விழிகொள் பூதப்படையினான், வீரட்டானம் சேர்துமே.

Gnānasambandhan of Kāzhi which is close to the creeks girding
the foreshore gardens, has sung these hymns which will altogether annul
blame and cause the perishing of sins.
Do hail these psalms to come by athanasia.
1186. கடிய ஏற்றினர், கனல் அன மேனியர், அனல் எழ ஊர்மூன்றும்
இடிய மால்வரை கால் வளைத்தான், தனது அடியவர்மேல் உள்ள
வெடிய வல்வினை வீட்டுவிப்பான், உறை விற்குடிவீரட்டம்
படியதுஆகவே பரவுமின்! பரவினால், பற்றுஅறும், அருநோயே.

He rides the swift Bull; His body blazes like fire; He bent the great Meru Mount
into a bow and gutted with fire, the triad of the walled citadels.
He annuls the cruel hostile Karma of His devotees. He is entempled in
Vir̲kudi Veeraṭṭam where if you humbly adore and hail Him,
the nexus with your malady, well-nigh impossible to cure, will snap altogether. 5

1187. பெண் ஓர் கூறினர்; பெருமையர்; சிறுமறிக் கையினர்; மெய் ஆர்ந்த
அண்ணல்; அன்புசெய்வார் அவர்க்கு எளியவர்; அரியவர், அல்லார்க்கு;
விண்ணில் ஆர் பொழில் மல்கிய மலர் விரி விற்குடிவீரட்டம்
எண் நிலாவிய சிந்தையினார் தமக்கு இடர்கள் வந்து அடையாவே.

He is concorporate with His Woman; great is His renown;
His palm holds a little fawn; He, the Noble One,
is of easy of access to His devotees; for others He is inaccessible.
Troubles will not afflict them that meditate on Him
who is entempled in Vir̲kudi Veeraṭṭam girt with
sky-vaulting gardens where blossoms galore blow. 6

1188. This verse is not extant. 7

1189. இடம் கொள் மா கடல் இலங்கையர் கோன் தனை இகல் அழிதர ஊன்று
திடம் கொள் மால்வரையான், உரை ஆர்தரு பொருளினன், இருள் ஆர்ந்த
விடம் கொள் மா மிடறு உடையவன், உறைபதி விற்குடிவீரட்டம்
தொடங்கும்ஆறு இசை பாடி நின்றார் தமைத் துன்பம் நோய் அடையாவே.

He is of the Mount Kailās who crushed the sovereign of Lanka girt with
the spacious and great sea and his hostility. He is the Word
and its import. He quaffed the murky venom and retained it in His throat.
Troubles and maladies will not afflict them that contemplate
and hymn Him in music, who is entempled in Vir̲kudi Veeraṭṭam. 8

1190. செங்கண் மாலொடு நான்முகன் தேடியும் திருவடி அறியாமை
எங்கும் ஆர் எரி ஆகிய இறைவனை--அறைபுனல் முடி ஆர்ந்த,
வெங் கண் மால்வரைக்கரி உரித்து உகந்தவன்--விற்குடிவீரட்டம்
தம் கையால்-தொழுது ஏத்த வல்லார் அவர் தவம் மல்கு குணத்தாரே.

He, our God, so stood as a column of fire of cosmic pervasion that
the red-eyed Vishnu and the Four- faced Brahma could not
behold His feet or crown after which they went in quest.
He sports the Ganga on His matted crest; He flayed the cruel and ruddy-eyed
Tusker and mantled Himself in its skin and rejoiced.
They that adore Him with their hands and hail Him who is
entempled in Vir̲kudi Veeraṭṭam, stand blessed with virtuous *tapas*. 9

1191. பிண்டம் உண்டு உழல்வார்களும், பிரி துவர் ஆடையர், அவர் வார்த்தை
பண்டும் இன்றும் ஓர் பொருள் எனக் கருதன்மின்! பரிவுஉறுவீர், கேண்மின்;
விண்ட மா மலர்ச் சடையவன் இடம் எனில், விற்குடிவீரட்டம்;
கண்டுகொண்டு அடி காதல் செய்வார் அவர் கருத்துஉறும் குணத்தாரே.

Ye loving devotees! do listen. Deem not the words of Samanas who subsist
on alms and roam about as well as the Buddhists shrouded in ochre-robes,
as anything of substance now or in the past.
Our God wears in His matted crest, the great and blown blossoms.
He is entempled in Vir̲kudi Veeraṭṭam.
They that gain His presence and adore His feet in love,
are, indeed, endowed with virtues worth treasuring. 10

1192. விலங்கலே சிலை இடம் என உடையவன், விற்குடிவீரட்டத்து
இலங்குசோதியை, எம்பெருமான்தனை, எழில் திகழ் கழல் பேணி,
நலம் கொள் வார் பொழில் காழியுள் ஞானசம்பந்தன் நல்-தமிழ்மாலை
வலம்கொடே இசை மொழியுமின்! மொழிந்தக்கால், மற்று அது வரம் ஆமே.

He is of the Mount Kailās; He is the splendorous effulgence;
He is entempled in Virkudi Veeraṭṭam. He is, indeed,
our God. His are the splendorous ankleted feet.
On Him, Gnānasambandhan of Kāzhi which is
girt with the extensive gardens of goodly foison,
has sung this goodly garland of Tamil̲ hymns.
Render them musically, firmly poised in longing devotion.
If you do so, it is, indeed the boon par excellence, you have come by. 11

109. திருக் கோட்டூர் நட்டராகம்

109. TIRUKKŌṬṬŪR

1193. "நீலம் ஆர்தரு கண்டனே! நெற்றி ஓர் கண்ணனே! ஒற்றை விடைச்
சூலம் ஆர்தரு கையனே! துன்று பைம்பொழில்கள் சூழ்ந்து அழகுஆய
கோல மா மலர் மணம் கமழ் கோட்டூர் நற்கொழுந்தே!" என்று எழுவார்கள்
சால நீள் தலம்அதன்இடைப் புகழ் மிகத் தாங்குவர், பாங்காலே.

O God whose throat is blue-hued! You sport an eye in your forehead;
You ride a Bull; Your hand wields a three-leaved spear.
You are entempled in Kōṭṭūr dight with dense and beauteous and green
gardens teeming in great and colourful blossoms fragrant.
They that invoke You hailing You as the goodly Shoot and rise up,
will gain the great Siva-loka and abide there in glory grand. 1

1194. "பங்கயம்மலர்ச்சீறடி, பஞ்சு உறு மெல்விரல், அரவுஅல்குல்
மங்கைமார்பலர்--மயில், குயில், கிளி, என மிழற்றிய மொழியார், மென்-
கொங்கையார் குழாம்--குணலைசெய் கோட்டூர் நற்கொழுந்தே!" என்று
எழுவார்கள்--
சங்கை ஒன்று இலர்ஆகி, சங்கரன் திருஅருள் பெறல் எளிது ஆமே.

Their feet are small and comely like the lotus; their fingers are soft;
their *alkul* is like unto the cobric hood; delicate are their breasts:
these are damozels who warble like peafowl, koel and parakeet.
They enact the Kuṉalai dance and dwell in Kōṭṭūr. Lo, they that invoke You,
hailing You as the goodly Shoot of Kōṭṭūr and rise up, will,
without doubt, come by the grace of Sankara, with ease. 2

1195. "நம்பனார், நல மலர்கொடு தொழுது எழும் அடியவர் தமக்கு எல்லாம்;
செம்பொன் ஆர் தரும் எழில் திகழ் முலையவர், செல்வம் மல்கிய நல்ல
கொம்பு அனார், தொழுது ஆடிய கோட்டூர் நற்கொழுந்தே!" என்று எழுவார்கள்
அம் பொன் ஆர் தரும் உலகினில் அமரரோடு அமர்ந்து இனிது இருப்பாரே.

Our God is adored by women who are like flowery lianas
whose bodies are like ruddy gold, and whose breasts are lovely;
these sing and dance and hail Him.
He is the supremely desirable One unto all His devotees
who invoke and hail Him as the goodly Shoot of Kōṭṭūr and rise up.
These will abide in the auric and ethereal world, companied with the immortals. 3

1196. "பலவும் நீள் பொழில்-தீம் கனி தேன்பலா, மாங்கனி, பயில்வு ஆய--
கலவமஞ்ஞைகள் நிலவு சொல் கிள்ளைகள் அன்னம் சேர்ந்து அழகுஆய,
குலவு நீள் வயல் கயல் உகள்--கோட்டூர் நற்கொழுந்தே!" என்று எழுவார்கள்
நிலவு செல்வத்தர் ஆகி, நீள் நிலத்துஇடை நீடிய புகழாரே.
Our God is entempled in Kōṭṭūr dight with extensive gardens
of multitudinous trees and lianas. Here abound, in particular,
jack trees the drupels of which are melliferous as also sweet mango trees.
Here flourish fan-tailed peacocks, parakeets that warble sweet vocables as well as
swans; eke is it rich in extensive fields where beauteous *Kayals* leap and sport.
The devotees that invoke and hail Him as the goodly Shoot before rising up,
will thrive on earth in ever-during opulence
and immense renown and eventually gain the ethereal world. 4

1197. "உருகுவார் உள்ளத்து ஒண்சுடர்! தனக்கு என்றும் அன்பர் ஆம் அடியார்கள்
பருகும் ஆர் அமுது!" என நின்று, பரிவொடு பத்தி செய்து, "எத்திசையும்
குருகு வாழ் வயல் சூழ்தரு கோட்டூர் நற்கொழுந்தே!" என்று எழுவார்கள்
அருகு சேர்தரு வினைகளும் அகலும், போய்; அவன் அருள் பெறல் ஆமே.

Our God is the great radiance unto them whose bosoms melt in devotion;
unto these who always foster love for Him, He is the potable and insatiable
Ambrosia. He is entempled in Kōṭṭūr abounding in fields frequented by
herons.He is ever adored by devotees in all the directions.
The afflicting Karma of those that invoke and hail Him
as the goodly Shoot before rising up, will cease.
Lo, they will come by the grace of Grace. 5

1198. "துன்று வார்சடைத் தூமதி, மத்தமும், துன் எருக்கு, ஆர் வன்னி,
பொன்றினார் தலை, கலனொடு, பரிகலம், புலிஉரிஉடை ஆடை,
கொன்றை பொன் என மலர்தரு கோட்டூர் நற்கொழுந்தே!" என்று எழுவாரை--
என்றும் ஏத்துவார்க்கு இடர் இலை; கேடு இலை;--ஏதம் வந்து அடையாவே.

In His dense and long crest of matted hair, He is adorned with the pure crescent,
ūmattham, the flowers of white *erukku* and the leaves of *vanni*.
His begging-bowl is the skull of a dead one. He is clad in a tiger-skin.
Troubles, evil and misery will not afflict them that hail those who hail
them that invoke and adore the goodly Shoot--the God of Kōṭṭūr
where golden *kondrai* flowers burgeon, before rising up from their beds. 6

1199. "மாட மாளிகை, கோபுரம், கூடங்கள், மணி அரங்கு, அணி சாலை,
பாடு சூழ் மதில் பைம்பொன் செய் மண்டபம். பரிசொடு பயில்வுஆய
கூடு பூம்பொழில் சூழ்தரு கோட்டூர் நற்கொழுந்தே!" என்று எழுவார்கள்
கேடுஅது ஒன்று இலர்ஆகி, நல் உலகினில் கெழுவுவர்; புகழாலே.

Storeyed mansions, towers and turrets, hexedras, ornate forms, beautiful streets,
walls that gird the urbs on all sides and *mantapams* decked
with fresh gold: these, indeed, mark Kōṭṭur
dight with beautiful gardens. They that hail and adore Him
as the goodly Shoot before rising up from their beds 'll be rid of
blemishes and flourish with renown in orbis terrarum. 7

1200. ஒளி கொள் வாள்எயிற்று அரக்கன் அவ் உயர்வரை எடுத்தலும், உமை அஞ்சி,
சுளிய ஊன்றலும், சோர்ந்திட, வாளொடு நாள் அவற்கு அருள்செய்த--
குளிர் கொள் பூம்பொழில் சூழ்தரு--கோட்டூர் நற்கொழுந்தினைத் தொழுவார்கள்
தளிர் கொள் தாமரைப்பாதங்கள் அருள்பெறும் தவம் உடையவர் தாமே.

When the Asura of sharp and bright canine teeth, durst uproot the lofty
Mount Kailās, Uma stood scared. At this, He slightly bent His toe
and pressed the Mount, causing him to wilt altogether; then when
he rued, our God blessed him with a sword and longevity of Life.
They that hail the goodly Shoot of Kōṭṭūr dight with
cool and flowery gardens, will come by the *tapas* to gain
the soft and tender and lotus-like feet of our God. 8

1201. பாடி ஆடும் மெய்ப் பத்தர்கட்கு அருள்செயும் முத்தினை, பவளத்தை,
தேடி மால் அயன் காண ஒண்ணாத அத் திருவினை, "தெரிவைமார்
கூடி ஆடவர் கைதொழு கோட்டூர் நற்கொழுந்தே!" என்று எழுவார்கள்
நீடு செல்வத்தர்ஆகி, இவ் உலகினில் நிகழ்தரு புகழாரே.
Our God blesses His devotees who dance, the while singing His encomia.
He is the Pearl, the Coral; Vishnu and Brahma went in quest
Of Him but were disabled from beholding His feet or crown.
He is the opulence of *tapas*; women companied with their men
adore Him with their hands. They that hail Him as the goodly Shoot
of Kōṭṭūr and then rise from their beds,'ll come by
ever-during wealth and flourish in this world with glory. 9

1202. கோணல் வெண்பிறைச் சடையனை, கோட்டூர் நற்கொழுந்தினை, செழுந்திரளை,
பூணல்செய்து அடி போற்றுமின்! பொய் இலா மெய்யன் நல் அருள் என்றும்
காணல் ஒன்று இலாக் கார் அமண், தேரர்குண்டு ஆக்கர், சொல் கருதாதே,
பேணல்செய்து, அரனைத் தொழும் அடியவர் பெருமையைப் பெறுவாரே.

He wears the curved crescent in His matted crest. He is the goodly Shoot
of Kōṭṭūr; He is the splendorous assemblage. Adore Him duly;
do hail Him. Lo, He is the True Ens. The dark-hearted
and the Buddhists cannot perceive the grace of Him who is
never false; ignore the words of these obdurate and obstinate ones.
The devotees that foster love for Him and adore Him will come by renown. 10

1203. பந்து உலா விரல் பவளவாய்த் தேன்மொழிப்பாவையோடு உரு ஆரும்
கொந்து உலாம் மலர் விரி பொழில் கோட்டூர் நற்கொழுந்தினை, செழும் பவளம்
வந்து உலாவிய காழியுள் ஞானசம்பந்தன் வாய்ந்து உரைசெய்த
சந்து உலாம் தமிழ்மாலைகள் வல்லவர் தாங்குவர், புகழாலே.

He is the goodly Shoot of Kōṭṭūr engirt with lovely gardens
where burgeon in bunches flowers galore.
Here, He is concorporate with His Consort--doll-like--,
whose fingers sport a ball, whose lips are
corralline and whose words are sweet like melis.
On Him, Gnānasambandhan of Kāzhi to which the waves of the sea carry
splendorous coral, has sung these garlands of Tamiḷ cast in *chhandas*.
They that are valiant to hail our God with these psalms
will be ever poised in glory. 11

110. திரு மாந்துறை நட்டராகம்

110. TIRUMĀNTHUṞAI

1204. செம்பொன் ஆர்தரு வேங்கையும், ஞாழலும், செருந்தி, செண்பகம், ஆனைக்
கொம்பும், ஆரமும், மாதவி, சுரபுனை, குருந்து, அலர் பரந்து உந்தி,
அம் பொன் நேர் வரு காவிரி வடகரை மாந்துறை, உறைகின்ற
எம்பிரான், இமையோர் தொழு, பைங்கழல் ஏத்துதல் செய்வோமே.

Our God is entempled on the northern bank of the Kāviri which flows
rolling in its current the flowers of the auric *Vengkai, Gnāzhal, Serunti*,
and Shanbaga and also the tusks of tuskers and sandalwood along with
the blossoms of *Mātavi Surapunnai and Kuruntu* at Mānthuṟai.
Let us hail His ever-fresh and ankleted feet adored by the supernals. 1

1205. விளவு தேனொடு சாதியின் பலங்களும் வேய் மணி நிரந்து உந்தி,
அளவி நீர் வரு காவிரி வடகரை மாந்துறை உறைவான், அத்
துளவ மால்மகன் ஐங்கணைக் காமனைச் சுட விழித்தவன், நெற்றி
அளக வாள்நுதல் அரிவைதன் பங்கனை அன்றி, மற்று அறியோமே.

Our God is entempled on the northern bank of the Kāviri that flows
rolling in its current, the honey-laden fruits of Viḷa and Sāti,
along with the pearls of bamboos, at Mānthuṟai.
He stared to death Manmata-- the wielder of a pentad of darts--,
the son of Vishnu who wears tulsi wreaths.
He is concorporate with His Woman of bright forehead and beautiful coiffure.
We reckon none but Him as our true God. 2

1206. கோடு தேன் சொரி குன்றுஇடைப் பூகமும் கூந்தலின் குலை வாரி
ஓடு நீர் வரு காவிரி வடகரை மாந்துறை உறை நம்பன்,
வாடினார் தலையில் பலி கொள்பவன், வானவர் மகிழ்ந்து ஏத்தும்
கேடுஇலாமணியைத் தொழல் அல்லது, கெழுமுதல் அறியோமே.

Our God is the supremely desirable One who is entempled on the northern
bank of the Kāviri which flows carrying in its current the areaca nut
trees and the bunchy tops of other trees, from the hills
rich in honey, at Mānthuṟai. He receives alms in the skull of Brahma
and is hailed in delight great by the Devas.
He is the flawless Gem; He is the great Source.
We reckon and adore none but Him as our God. 3

1207. இலவம், ஞாழலும். ஈஞ்சொடு, சுரபுன்னை. இளமருது. இலவங்கம்,
கலவி நீர் வரு காவிரி வடகரை மாந்துறை உறை கண்டன்,
அலைகொள் வார்புனல், அம்புலி, மத்தமும், ஆடுஅரவு உடன் வைத்த
மலையை; வானவர் கொழுந்தினை; அல்லது வணங்குதல் அறியோமே.

Our blue-throated God is entempled on the northern bank of the Kāviri
which flows carrying in its current the trees of *Ilavam, Eantu,*
Surapunnai and young *Ilavangkam*, at Mānthuṟai.
He, indeed, is the Mountain, the Shoot adored by Devas.
He sports on His crown the billowy Ganga, the crescent
ūmattham flowers and the dancing snake.
We reckon none but Him as the true God. 4

1208. கோங்கு, செண்பகம், குருந்தொடு, பாதிரி, குரவு, இடை மலர் உந்தி,
ஓங்கி நீர் வரு காவிரி வடகரை மாந்துறை உறைவானை,
பாங்கினால் இடும் தூபமும் தீபமும் பாட்டு அவி(ம்) மலர் சேர்த்தி,
தாங்குவார்அவர், நாமங்கள் நாவினில்--தலப்படும் தவத்தோரே.
Our God is entempled at Mānthuṟai on the northern bank of the Kāviri
that flows amain rolling in its current the flowers
of *Kongku, Shanbaga, Kuruntu, Patiri* and *Kura*.
They that hail Him ritually with holy smoke, light of lamp,
hymns, *havis* and flowers and chant His hallowed names with their
tongues, are indeed, the lofty *tapaswis*. 5

1209. பெருகு சந்தனம், கார் அகில் பீலியும், பெரு மரம், நிமிர்ந்து உந்தி,
பொருது காவிரி வடகரை மாந்துறைப் புனிதன் எம்பெருமானை--
பரிவினால் இருந்து, இரவியும் மதியமும் பார் மன்னர் பணிந்து ஏத்த,
மருதவானவர் வழிபடும்--மலர் அடி வணங்குதல் செய்வோமே.

Our God is ever holy; He is entempled on the northern bank of the Kāviri
that flows majestically rolling in its current sandalwood
aplenty, dark eaglewood and bunches of peacocks' feathers.
He is of Mānthuṟai. He is hailed in humble devotion by Surya, Chandra,
the rulers of this earth as well as *Maruts*. Well, let us adore Him. 6

1210. நறவம் மல்லிகை முல்லையும் மௌவலும் நாள்மலர் அவை வாரி
இறவில் வந்து எறி காவிரி வடகரை மாந்துறை இறை, அன்று அங்கு
அறவன் ஆகிய கூற்றினைச் சாடிய அந்தணன், வரைவில்லால்
நிறைய வாங்கியே வலித்து எயில் எய்தவன், நிரை கழல் பணிவோமே.

Our God is entempled on the northern bank of the Kāviri that flows
majestically rolling and carries in its current, the honey- fragrant Mallikai,
Mullai, Mauval and other flowers great and shores them up.
He presides over Mānthuṟai. He, the Brahmin, of yore,
smote Dharmaraja who is Yama.
He, with His mountain-bow whose string He drew to its utmost, and with
full force targeted the skyey walled-citadels and destroyed them.
Let us hail His feet fastened with anklets, filled with precious gems pretty. 7

1211. மந்தம் ஆர் பொழில் மாங்கனி மாந்திட மந்திகள், மாணிக்கம்
உந்தி நீர் வரு காவிரி வடகரை மாந்துறை உறைவானை;
நிந்தியா எடுத்து ஆர்த்த வல் அரக்கனை நெரித்திடு விரலானை;
சிந்தியா மனத்தார் அவர் சேர்வது தீநெறி அதுதானே.

Our God is entempled on the northern bank of the Kāviri
that flows with gushing water laden with rubies.
He presides over Mānthuṟai in whose gardens,
the Notus wafts and female monkeys feast on mangoes.
Of yore, the fierce Asura, ignoring His greatness, durst uproot His Mount;
at this our God pressed a toe of His on His Mount and crushed him.
Lo, it is, indeed, the evil way that they pursue
whose *manams* fail to contemplate Him. 8

1212. நீலமாமணி நித்திலத்தொத்தொடு நிரை மலர் நிரந்து உந்தி
ஆலியா வரு காவிரி வடகரை மாந்துறை அமர்வானை--
மாலும் நான்முகன் தேடியும் காண்கிலா--மலர்அடி இணை நாளும்
கோலம் ஏத்தி நின்று ஆடுமின்! பாடுமின்! கூற்றுவன் நலியானே.

Our God is entempled on the northern bank of the Kāviri that flows
spraying droplets of water and carrying in its current
the great blue gems, the heaps of pearls and flowers galore.
He presides over Mānthuṟai. He remained unbeholdable to Vishnu
and the Four-faced Brahma, their quest after Him, notwithstanding.
Daily hail His splendorous flower-feet. Yama will not afflict you at all. 9

1213. நின்று உணும் சமண், தேரரும், நிலை இலர்; நெடுங்கழை, நறவு, ஏலம்,
நன்று மாங்கனி, கதலியின் பலங்களும், நாணலின் நுரை வாரி,
ஒன்றி நேர்வரு காவிரி வடகரை மாந்துறை, ஒரு காலம்
அன்றி, உள் அழிந்து எழும் பரிசு அழகிது; அது அவர்க்கு இடம்ஆமே.
The Samanas that eat standing and the Buddhists revel in inconsistency.
Ignore them. Our God is entempled on the northern bank of the Kāviri
that flows with reeds and foam, sweetcanes fragrant,
cardamom, toothsome mangoes, bananas and other fruits.
He is the presiding deity of Mānthuṟai which is the guerdon of a shrine
unto them who always inly melt and are poised in beatitude. 10

1214. வரை வளம் கவர் காவிரி வடகரை மாந்துறை உறைவானை,
சிரபுரம்பதி உடையவன்--கவுணியன், செழுமறை நிறை நாவன்,
அர எனும் பணி வல்லவன், ஞானசம்பந்தன்--அன்புஉறு மாலை
பரவிடும் தொழில் வல்லவர், அல்லலும் பாவமும் இலர்தாமே.

The God of Mānthurai is entempled on the northern
bank of the Kāviri which flows with mountane products.
On Him, Gnānasambandhan whose *gotra*, is Kaudinya
and who belongs to Sirapuram and who is valiant
to chant "Hara, Hara!" while rendering service to Siva,
has sung these garlands of devotional hymns.
They that are competent to propagate these,
his psalms,'ll ever be free from troubles and sins. 11

111. திரு வாய்மூர் நட்டராகம்

111. TIRUVĀIMŪR

1215. "தளிர் இள வளர்" என உமைபாட, தாளம்(ம்)இட, ஓர் கழல் வீசி,
கிளர் இள மணி அரவு அரை ஆர்த்து, ஆடும் வேடக் கிறிமையார்;
விளர் இள முலையவர்க்கு அருள் நல்கி வெண்நீறு அணிந்து, ஓர் சென்னியின்மேல்
வளர் இளமதியமொடு,--இவராணீர்--வாய்மூர் அடிகள் வருவாரே.
While Uma who is like unto a young tendril, sings and keeps time, He whose
waist is cinctured with a serpent that keeps concealed a blazing gem
in its body, swaying an ankleted foot doth enact His dance;
it is such his tricky guise is. Unto the women of buxom breasts who are
devoted to Him, He grants grace; He is bedaubed with
the holy ash and sports the crescent on His crest.
He is the Noble One entempled in Vāimūr. Behold His advent. 1

1216. வெந்தழல் வடிவினர்; பொடிப் பூசி, விரிதரு கோவண உடைமேல் ஓர்
பந்தம் செய்து, அரவு அசைத்து, ஒலி பாடி, பலபல கடைதொறும் பலி தேர்வார்;
சிந்தனை புகுந்து, எனக்கு அருள் நல்கி, செஞ்சுடர்வண்ணர் தம் அடி பரவ,
வந்தனைபல செய,--இவராணீர்--வாய்மூர் அடிகள் வருவாரே.

His frame is like the fierce flame; He is coated with
the powder of ash; His broad loin-cloth is cinctured with a serpent.
He sings and begs alms in a good many thresholded houses; entering my chinta,
He graces me. His complexion is radiantly incarnadine;
He is entempled in Vāimūr. He has resolved to reveal His feet for
the adoration of His devotees. Lo and behold! He is coming. 2

1217. பண்ணின் பொலிந்த வீணையர்; பதினெண்கணமும் உணரா நஞ்சு
உண்ணப் பொலிந்த மிடற்றினார்; உள்ளம் உருகின் உடன் ஆவார்;
சுண்ணப்பொடி-நீறு அணி மார்பர்; சுடர் பொன்சடைமேல்-திகழ்கின்ற
வண்ணப் பிறையோடு,--இவராணீர்--வாய்மூர் அடிகள் வருவாரே.

He plays on the Vina that displays paṇ; He is not
to be perceived by the eighteen *ganas*.
His neck displays the stain of the venom He quaffed. He will be one with
them that melt in love for Him.His chest is bedaubed with the holy ash
that is His gold-dust. He is decked with a splendorous
crescent in His crest. Lo and behold! He is coming. 3

1218. எரி கிளர் மதியொடு எழில் நுதல்மேல், எறி பொறி அரவினொடு, ஆறு மூழ்க
விரி கிளர் சடையினர்; விடைஏறி; வெருவ வந்து இடர் செய்த விகிர்தனார்;
புரி கிளர் பொடி அணி திருஅகலம் பொன்செய்த வாய்மையர்; பொன்மிளிரும்
வரி அரவு அரைக்கு அசைத்து,--இவராணீர்--வாய்மூர் அடிகள் வருவாரே.
He sports on His crest a crescent of radiant flame; eke doth He sport on His
extensive crest of matted hair a serpent of speckled hood
and a river brimful of water; He, the Vikirta,
rides the Bull and causes trouble to us, His women-devotees.
His divine chest is adorned with the bright powder
of ash; He is the golden One ever true.
He whose waist is cinctured with a dancing snake, 4
is entempled in Vāimūr. Lo and behold! He is coming.

1219. அஞ்சன மணிவணம் எழில் நிறமா அகம்மிடறு அணி கொள, உடல் திமில
நஞ்சினை, அமரர்கள் அமுதம் என, நண்ணிய நறு நுதல் உமை நடுங்க
வெஞ்சின மால்களியானையின் தோல் வெரு உறப் போர்த்து, அதன் நிறமும் அஃதே,
வஞ்சனை வடிவினொடு,--இவராணீர்--வாய்மூர் அடிகள் வருவாரே.

When Devas beholding the uprising and dinsome venom, stood scared
and quaked and beseeched Him, He quaffed it as though
it were *amrut*, causing His beauteous neck to get murky like khol.
The same valiancy He manifested when He flayed
the huge and fierce tusker and mantled Himself
in its skin witnessing which Uma was seized by dread.
He, the God of Vāimūr, sports the guise of a hoodwinker.
Lo and behold! The Noble One is coming. 5

1220. அல்லிய மலர் புல்கு விரிகுழலார் கழல்இணை அடி நிழல்அவை பரவ,
எல்லி அம்போது கொண்டு எரி ஏந்தி, எழிலொடு தொழில் அவை இசைய வல்லார்;
சொல்லிய அருமறை இசை பாடி, சூடு இளமதியினர்; தோடு பெய்து,
வல்லியந்தோல் உடுத்து,--இவராணீர்--வாய்மூர் அடிகள் வருவாரே.

The God of Vāimūr that dances during night, holding
fire in His hand, accepts the adoration
of women whose curly coiffures are decked with flowers
compact of many rows of petals. He recites the rare Vedas.
He sports a young moon; He, clad in a tiger-skin, wears a *todu* in one ear.
Lo and behold! The Noble One is coming. 6

1221. கடிபடு கொன்றை நன்மலர் திகழும் கண்ணியர்; விண்ணவர் கன மணி சேர்
முடி பில்கும் இறையவர்; மறுகில் நல்லார் முறைமுறை பலி பெய, முறுவல் செய்வார்;
பொடி அணி வடிவொடு, திருஅகலம் பொன் என மிளிர்வது ஓர் அரவினொடும்,
வடி நுனை மழுவினொடு,--இவராணீர்--வாய்மூர் அடிகள் வருவாரே.

He is the God of Vāimūr; He wears as His chaplet the wreath of fragrant
konrai flowers. When His feet touch the crowned heads of Devas,
the gems on their crown coruscate with splendour.
When women, in the streets, make offerings
to Him He casts a benevolent smile.
He is coated with ash; His auric bosom displays a circling serpent.
He displays a sharp and well-crafted maḻu.
Lo and behold! The Noble One is coming. 7

1222. கட்டு இணை புதுமலர் கமழ் கொன்றைக்கண்ணியர்; வீணையர்; தாமும் அஃதே;
எண்-துணை சாந்தமொடு உமை துணையா, இறைவனார் உறைவது ஓர் இடம் வினவில்,
பட்டு இணை அகல் அல்குல் விரிகுழலார் பாவையர் பலி எதிர் கொணர்ந்து பெய்ய,
வட்டணை ஆடலொடு,--இவராணீர்--வாய்மூர் அடிகள் வருவர்ரே.

He wears as His chaplet the wreath of fresh konṟai flowers woven in pairs.
He plays on the Vina; eke is He its melody. If it is queried where
He, the One that wears the sandal paste of abounding fragrance,
the One concorporate with Uma, abides, it is indeed Vāimūr
where damsels of dense and curly coiffures, endowed with broad forelaps
covered with silk, come before Him and make
offerings to Him, when He enacts His dance in circles.
Lo and behold! The Noble One is coming. 8

1223. ஏன மருப்பினொடு எழில் ஆமை இசையப் பூண்டு, ஓர் ஏறு ஏறி,
கானம் அது இடமா உறைகின்ற கள்வர்; கனவில்-துயர் செய்து,
தேன் உண மலர்கள் உந்தி விம்மித் திகழ் பொன்சடைமேல்-திகழ்கின்ற
வானநல்மதியினொடு,-- இவராணீர்--வாய்மூர் அடிகள் வருவாரே.

Adorned with the tusk of the Hog and the carapace of the beautiful
Tortoise, He rides the Bull. He abides at the forest.
He is the furtive One who steals us and our hearts too to grieve in our dreams.

His auric and matted crest is adorned with honey-laden blooms that blow
splendorously. Eke does He, the God of Vāimūr, sport the skyey crescent on His crest.
Lo and behold! He is coming. 9

1224. சூடல் வெண்பிறையினர்; சுடர் முடியர்; சுண்ணவெண்நீற்றினர்; சுடர் மழுவர்;
பாடல் வண்டு இசை முரல் கொன்றைஅம்தார் பாம்பொடு நூல் அவை பசைந்து இலங்க,
கோடல் நன் முகிழ் விரல் கூப்பி, நல்லார் குறை உறு பலி எதிர் கொணர்ந்து பெய்ய,
வாடல்வெண்தலை பிடித்து,--இவராணீர்--வாய்மூர் அடிகள் வருவாரே.

He wears the white crescent; radiant is His crown;
He is bedaubed with the white ash; He wields
the blazing malu; on His garland of konrai humming bees do sing.
His chest is adorned with a snake as well as the sacred-thread.
With their adoring and folded hands like unto *Kāntal* flowers,
women seeking annulment of their blemishes
make their offerings which He receives in His
begging-bowl, the faded and white skull.
Lo and behold! The Noble One of Vāimūr is coming. 10

1225. திங்களொடு அரு வரைப் பொழில்-சோலைத் தேன் நலம் கானல் அம் திரு வாய்மூர்,
அங்கமொடு அருமறை ஓலிபாடல் அழல்நிற வண்ணர்தம் அடி பரவி,
நங்கள் தம் வினை கெட பொழிய வல்ல ஞானசம்பந்தன் தமிழ்மாலை
தங்கிய மனத்தினால்-தொழுது எழுவார் தமர் நெறி, உலகுக்கு ஓர் தவநெறியே.

Our God abides at Tiruvāimūr which is dight with walls and melliferous gardens
the tops of which graze the moon. He is the flame-hued One
who is the import of the hymns of the Vedas and their Angas.
Hailing His sacred feet, Gnānasambandhan who can hymn away
the kārmic consequences, has sung this garland of Tamil.

They that store this in their inner sensorium and pray to Him
in humble obeisance, pursue the way which is the tapaswic
way unto the orbis terrarum. 11

112. திரு ஆடானை நட்டராகம்

112. TIRUĀṬĀNAI

1226. மாது ஓர் கூறு உகந்து, ஏறு அது ஏறிய
ஆதியான் உறை ஆடானை
போதினால் புனைந்து, ஏத்துவார்தமை
வாதியா வினை மாயுமே.

He is concorporate with His Woman and rejoices; He rides
a Bull. He is the Primordial Ens; He is entempled in Āṭānai.
The karma of those that adorn Him with blossoms
and hail Him ceases and altogether perishes. 1

1227. வாடல்வெண்தலை அங்கை ஏந்தி நின்று
ஆடலான் உறை ஆடானை
தோடு உலாம் மலர் தூவிக் கைதொழ,
வீடும், நுங்கள் வினைகளே.

He is the Dancer who holds in His hand
a faded and white skull. He is of Āṭānai.
If you, strewing flowers, hail Him with folded hands
your twyfold karma will perish. 2

1228. மங்கை கூறினன், மான்மறி உடை
அம் கையான், உறை ஆடானை
தம் கையால்-தொழுது, ஏத்த வல்லார்
மங்கு நோய் பிணி மாயுமே.

He is concorporate with His Woman; His beautiful hand
holds a fawn; He is of Āṭānai.
The ills and fetters of those that adore and hail Him
with their hands, will perish. 3

1229. சுண்ண நீறு அணி மார்பில்-தோல் புனை
அண்ணலான் உறை ஆடானை
வண்ண மா மலர் தூவிக் கைதொழ
எண்ணுவார் இடர் ஏகுமே.

His chest is coated with sandal powder and ash.
The Noble One is clad in a skin. He is of Āṭānai.
The troubles of those that are prone to adore Him
with their hands, strewing flowers, will flee. 4

1230. கொய் அணி(ம்) மலர்க்கொன்றை சூடிய
ஐயன் மேவிய ஆடானை
கை அணி(ம்) மலரால் வணங்கிட,
வெய்ய வல்வினை வீடுமே.

Our God that wears the beauteous garlands woven
of plucked konṟai flowers, abides at Āṭānai.
The cruel karma of those that adore Him, strewing
flowers with their hands, will flee away. 5

1231. வான் இள(ம்) மதி மல்கு வார்சடை
ஆன் அஞ்சு ஆடலன் ஆடானை
தேன் அணி(ம்) மலர் சேர்த்த, முன் செய்த
ஊனம் உள்ள ஒழியுமே.

Our God who wears the skyey crescent in His long
strands of matted hair, has His ablutions
in the five products of kine. He is of Āṭānai.
The blemishes of past karma of those that adorn
His feet with melliferous flowers, will vanish. 6

1232. துலங்கு வெண்மழு ஏந்தி, சூழ் சடை
அலங்கலான், உறை ஆடானை
நலம் கொள் மா மலர் தூவி, நாள்தொறும்
வலம்கொள்வார் வினை மாயுமே.

He holds a white and splendorous maḻu in His hand;
He is wreathed in blossoms. He is of Āṭānai.
The karma of those that circumambulate His shrine
and adore Him with great and goodly flowers, will perish. 7

1233. வெந்தநீறு அணி மார்பில்-தோல் புனை
அந்தம் இல்லவன் ஆடானை
கந்தமாமலர் தூவிக் கைதொழும்
சிந்தையார் வினை தேயுமே.

Our God wears the baked ash; His chest is adorned with
a deer-skin; He is of Āṭānai; He is endless.
The karma of those that are endowed with the *Chinta*
to adore Him and do so, strewing great and fragrant
flowers, will waste away altogether. 8

1234. மறைவலாரொடு வானவர் தொழுது
அறையும் தண்புனல் ஆடானை
உறையும் ஈசனை ஏத்த, தீவினை
பறையும்; நல்வினை பற்றுமே.

Our God abides at the cool-watered Āṭānai, adored with stotras
by them well versed in the Vedas and by the supernals.
If He is adored and hailed, evil karma will
perish and good karma will ensue. 9

1235. மாயனும் மலரானும் கைதொழ
ஆய அந்தணன் ஆடானை
தூய மா மலர் தூவிக் கைதொழ,
தீய வல்வினை தீருமே.

Our God of Āṭānai is the Brahmin adored with hands
by Vishnu, and Brahma on the Lotus.
The cruel karma of those that adore Him with their hands
and strew pure and great flowers on His chest,'ll end. 10

1236. வீடினார் மலி வெங்கடத்து நின்று
ஆடலான் உறை ஆடானை
நாடி, ஞானசம்பந்தன் செந்தமிழ்
பாட, நோய் பிணி பாறுமே.

Our God of Āṭānai is the Dancer in the fierce
crematory of corpses galore. The ills and fetters
of those that sing the classical Tamil hymns of
Gnānasambandhan on Him, will perish. 11

செவ்வழி

113.சீகாழி

113. SEEKĀZHI

1237. பொடி இலங்கும் திருமேனியாளர், புலி அதளினர்,
அடி இலங்கும் கழல் ஆர்க்க ஆடும் அடிகள்(ள்), இடம்--
இடி இலங்கும் குரல் ஓதம் மல்க(வ்) எறி வார்திரைக்
கடி இலங்கும் புனல் முத்து அலைக்கும் கடல் காழியே.

Our God's sacred body is coated with the holy ash;
He is clad in a tiger-skin; He is the Dancer whose
feet are fastened with resonating anklets.
He is entempled in Kāzhi close to the sea
that rages like thunder with its recurring waves
which shore up pearls aplenty. 1

1238. மயல் இலங்கும் துயர் மாசு அறுப்பான், அருந் தொண்டர்கள்
அயல் இலங்கப் பணி செய்ய நின்ற(வ்) அடிகள்(ள்), இடம்--
புயல் இலங்கும் கொடையாளர் வேதத்து ஒலி பொலியவே,
கயல் இலங்கும் வயல் கழனி சூழும் கடல் காழியே.

Our God is adored by servitors who labour hard
to wipe out the recurrence of flawed and befuddled embodiments.
He is entempled in Seekāzhi girt with fields where teeming kayals flourish.
It is pervaded by the splendorous sound of Vedic recitation.
It is, indeed, the polis where patrons munificent like nimbi, flourish. 2

1239. கூர்வு இலங்கும் திரிசூலவேலர், குழைக் காதினர்,
மார்வு இலங்கும் புரிநூல் உகந்த(ம்) மணவாளன், ஊர்--
நேர் விலங்கல் (ல்) அன திரைகள் மோத(ந்), நெடுந் தாரைவாய்க்
கார் விலங்கில்(ல்) எனக் கலந்து ஒழுகும் கடல் காழியே.
Our God wields the sharp trident; His ear is decked with a kul̲ai;
He is the Bridegroom who is entempled in Seekāzhi close to the sea,
who, in delight great, wears on His chest
the strands of the sacred thread. Here, the mountainous waves
that dash against the shore like hills formed by downpour. 3

1240. குற்றம் இல்லார், குறைபாடு செய்வார் பழி தீர்ப்பவர்,
பெற்றம் நல்ல கொடி முன் உயர்த்த பெருமான், இடம்--
மற்று நல்லார், மனத்தால் இனியார்,மறை கலைஎலாம்
கற்று நல்லார், பிழை தெரிந்து அளிக்கும் கடல் காழியே.

Our God is entempled in Seekāzhi close to the sea where dwell
compassionate ones who detect the defects of
the good ones versed in the Vedas and rectify them.
He is the flawless; He annuls the blame of His devotees' shortcomings.
He has hoist His lofty flag which carries in it the signum of His Bull;
He is the goodly One, sweet unto our inner sensorium. 4

1241. விருது இலங்கும் சரிதைத் தொழிலார், விரிசடையினார்,
எருது இலங்கப் பொலிந்து ஏறும் எந்தைக்கு இடம்ஆவது--
பெரிது இலங்கும் மறை கிளைஞர் ஓத, பிழை கேட்டலால்,
கருது கிள்ளைக்குலம் தெரிந்து தீர்க்கும் கடல் காழியே.

The annals of our God are a recordation of His glorious triumphs;
spreading is His matted hair. He is the splendorous Rider of His Bull.
He is entempled in Kāzhi close to the sea, where the bevy of parakeets,
well acquainted with the Vedic recitation performed by the practitioners
of the Vedas, detect flaws in their recitation and rectify them. 5

1242. தோடு இலங்கும் குழைக் காதர், வேதர், சுரும்பு ஆர் மலர்ப்
பீடு இலங்கும் சடைப் பெருமையாளர்க்கு இடம்ஆவது--
கோடு இலங்கும் பெரும் பொழில்கள் மல்க, பெருஞ் செந்நெலின்
காடு இலங்கும் வயல் பயிலும் அம் தண் கடல் காழியே.

The splendorous ears of our God are decked with a todu and a Kul̲ai;
He is Mahādēva. His majestic and glorious matted crest is decked with
blossoms bebuzzed by bees. He is entempled in the cool
and beauteous Kāzhi close to the sea which is dight with gardens
abounding in great and ramiferous and melliferous trees; 6
eke is it girt with fields of great *Cennal* crops.

1243. மலை இலங்கும் சிலை ஆக வேக(ம்) மதில்மூன்று எரித்து,
அலை இலங்கும் புனல் கங்கை வைத்த(வ்) அடிகட்கு இடம்--
இலை இலங்கும் மலர்க்கைதை கண்டல் வெறி விரவலால்,
கலை இலங்கும் கணத்துஇனம் பொலியும் கடல் காழியே.

Our God wielding His mountain-bow, gutted with fire the swiftly-flying triad
of the walled-citadels. He in whose crest abides the flood of Ganga, is
entempled in the splendorous Kāzhi close to the sea
which is pervaded by the incense of the leafy
fragrant-screwpine and *kantals*. 7

[**Note.** The last line can also be rendered thus:
"Here thrive the antlered deer galore."]

1244. முழுது இலங்கும் பெரும் பாருள் வாழும் முரண் இலங்கைக் கோன்
அழுது இரங்க, சிரம் உரம் ஒடுங்க(வ்) அடர்த்து, ஆங்கு அவன்
தொழுது இரங்கத் துயர் தீர்த்து, உகந்தார்க்கு இடம்ஆவது--
கழுதும் புள்ளும் மதில் புறம் அது ஆரும் கடல் காழியே.

Our God is the Magnum Ens of splendorous perfection.
He crushed the heads and the body of the rebellious
monarch of Lanka; then when he wailed and rued
and prayed, He redressed his miserable plight.
Lo, He is entempled in Seekāzhi close to the sea
beyond whose walls ghouls and birds foregather. 8

1245. பூவினானும், விரிபோதில் மல்கும் திருமகள் தனை
மேவினானும், வியந்து ஏத்த, நீண்டு ஆர்அழல்ஆய் நிறைந்து,
ஓவி, அங்கே அவர்க்கு அருள்புரிந்த(வ்) ஒருவர்க்கு இடம்--
காவிஅம் கண் மடமங்கையர் சேர் கடல் காழியே.

Our God rose aloft as an immense column of flame when
Brahma of the Lotus and Vishnu, the consort of Lakshmi
whose seat is the large and ruddy Lotus, went in quest of Him in vain.
When these two, struck with wonder hailed Him,
He changed His unbeholdable form, and blessed them.
He is the peerless One entempled in Kāzhi close to the sea,
where flourish women whose eyes are like blue lilies. 9

1246. உடை நவின்றார், உடை விட்டு உழல்வார்,--இருந் தவத்தார்--
முடை நவின்ற(ம்) மொழி ஒழித்து, உகந்த(ம்) முதல்வன்(ன்) இடம்--
மடை நவின்ற புனல் கெண்டை பாயும் வயல் மலிதர,
கடை நவின்ற(ந்) நெடுமாடம் ஓங்கும் கடல் காழியே.

Our God annulled gladly the malodorous words of
the Buddhists shrouded in robes and the nude
Samaṇas--both practising hard but pseudo-*tapas*.
He is entempled in Kāzhi close to the swelling sea,
dight with vestibules and storeyed mansions;
eke are in this polis sluices in whose water
Kendais leap and sport close to the fields. 10

1247. கருகுமுந்நீர் திரை ஓதம் ஆரும் கடல் காழியுள்,
உரகம் ஆரும் சடை அடிகள் தம்பால் உணர்ந்து உறுதலால்,
பெருக மல்கும் புகழ் பேணும் தொண்டர்க்கு, இசை ஆர் தமிழ்-
விரகன் சொன்ன இவை பாடி ஆட, கெடும், வினைகளே.

He is the God of Kāzhi close to the dark and billowy sea of threefold water.
His servitors fully alive to His grace whose matted
crest sports a serpent, thrive in accrescent glory.
Their twyfold karma will perish if they sing
the musical hymns of the Tamil̲ Virakan and enact their dance. 11

114. திருக் கேதாரம்

114. TIRUKKĒTĀRAM

செவ்வழி

1248. தொண்டர் அஞ்சுகளிறும்(ம்) அடக்கி, சுரும்பு ஆர் மலர்
இண்டை கட்டி, வழிபாடு செய்யும் இடம் என்பரால்--
வண்டு பாட, மயில் ஆல, மான்கன்று துள்ள(வ்), வரிக்-
கெண்டை பாய, சுனை நீலம் மொட்டு அலரும் கேதாரமே.

His servitors control their pented of senses that are
like dreadful elephants; they weave for Him the *intai*
wreath buzzed by bees, and adore Him.
It is here at Kētāram our God is entempled where
bees buzz, peafowls revel in din, fawns jump
about and striped *kentais* leap into springs
and cause the blowing of the buds of blue lilies. 1

1249. பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்து ஏத்தவே,
வேதம் நான்கும் பதினெட்டொடு ஆறும் விரித்தார்க்கு இடம்--
தாது விண்ட(ம்), மது உண்டு மிண்டி(வ்) வரு வண்டுஇனம்
கீதம் பாட(ம்), மடமந்தி கேட்டு உகளும் கேதாரமே.

His sacred feet are hailed by a good many celestials
who bow low and celebrate Him.
Our God is the Author and Explicator of the four
Vedas, their Angas and the eighteen puranas.
He is entempled in Kētāram where bees sip nectar
from the pollen-laden flowers and wing inebriate
all the while bombilating melodiously, hearing 2
which monkeys frolic in deight great.

1250. முந்தி வந்து புரோதயம் மூழ்கி(ம்) முனிகள்பலர்,
“எந்தைபெம்மான்!” என நின்று இறைஞ்சும் இடம் என்பரால்--
மந்தி பாய, சரேலச் சொரிந்து(ம்) முரிந்து உக்க பூக்
கெந்தம் நாற, கிளரும் சடை எந்தை கேதாரமே.

Many a muni doth bathe in the pre-dawn hour
and hail Him as their Sire and God and pray to Him standing.
He, our Sire of matted crest, abides at Kētāram
where when monkeys leap on a sudden,
nectarean flowers break and fall down wafting suaveolence. 3

1251. உள்ளம் மிக்கார், குதிரை(ம்) முகத்தார், ஒரு காலர்கள்,
எள்கல் இல்லா இமையோர்கள், சேரும்(ம்) இடம் என்பரால்--
பிள்ளை துள்ளிக் கிளை பயில்வ கேட்டு, பிரியாது போய்,
கிள்ளை, ஏனல்கதிர் கொணர்ந்து வாய்ப் பெய்யும் கேதாரமே.

Those whose hearts are full of devotion for Him, our God,
the equine-visaged, the single-footed, and the fearless celestials
gather at Kētāram where He is entempled and adore Him.
When their chicks feel hungry and cry for food,
their mothers—parrots--, unwillingly part from
them, wing away, gather millet grains which
they put into the tender beaks of their young ones. 4

1252. ஊழிஊழி உணர்வார்கள், வேதத்தின் ஒண் பொருள்களால்,
“வாழி, எந்தை!” என வந்து இறைஞ்சும் இடம் என்பரால்--
மேழி தாங்கி உழுவார்கள் போல(வ்), விரை தேரிய,
கேழல் பூழ்தி கிளைக்க, மணி சிந்தும் கேதாரமே.

Over many many aeons they that have mastered
the import of the Vedas foregather, hail and adore
Him here at Kētāram where our God is entempled.

Like tillers that plough the fields, when boars burrow the soil
for food and cause dust to rise up, rubies get scattered at this urbs. 5

1253. நீறு பூசி, நிலத்து உண்டு, நீர் மூழ்கி, நீள்வரை தன்மேல்
தேறு சிந்தை உடையார்கள் சேரும்(ம்) இடம் என்பரால்--
ஏறி மாவின் கனியும் பலாவின்(ன்) இருஞ் சுளைகளும்
கீறி, நாளும் முசுக் கிளையொடு உண்டு உகளும் கேதாரமே.

Plunging in water they bathe; they wear the holy ash;
these are of clarified intellect: these *tapaswis*
meditate on the extensive and holy mountain-
range of Siva; these gather and adore Siva
at Kētaram where climbing daily mango
and jack trees, monkeys secure these fruits;
they with their young ones feed on mangoes and drupels
of jack-fruit which they tear open. 6

1254. மடந்தை பாகத்து அடக்கி(ம்), மறை ஓதி வானோர் தொழ,
தொடர்ந்த நம்மேல் வினை தீர்க்க நின்றார்க்கு இடம் என்பரால்--
உடைந்த காற்றுக்கு உயர் வேங்கை பூத்து உதிர, கல்அறைகள்மேல்
கிடந்த வேங்கை சினமா முகம் செய்யும் கேதாரமே.

Our God is concorporate with His Consort, He ever recites the Vedas;
He is adored by the supernals. He continues to annul our karma.
Lo, He is entempled in Kētāram.
Here wind blows crashing and causes the flowers of Vēnkai trees fall on rocks;
such fallen flowers resemble the fierce visage of a great tiger. 7

1255. அரவ முந்நீர் அணி இலங்கைக் கோனை, அருவரைதனால்
வெருவ ஊன்றி, விரலால் அடர்த்தார்க்கு இடம் என்பரால்--
குரவம், கோங்கம், குளிர் பிண்டி, ஞாழல், சுரபுன்னை, மேல்
கிரமம்ஆக வரிவண்டு பண்செய்யும் கேதாரமே.

Our God crushed the monarch of ornate Lanka girt with the raging sea
of threefold water, by pressing a toe of His on His mount which he
durst uproot. He is entempled in Kētāram.
Here, on the flowers of *Kuravu, Kongku,* cool *pindi,*
gnāzhal and *surapunnai,* striped bees rest and melodise gingerly. 8

1256. ஆழ்ந்து காணார், உயர்ந்து எய்தகில்லார், அலமந்தவர்
தாழ்ந்து, தம்தம் முடி சாய நின்றார்க்கு இடம் என்பரால்--
வீழ்ந்து செற்று(ந்) நிழற்கு இறங்கும் வேழத்தின் வெண்மருப்பினைக்
கீழ்ந்து சிங்கம் குருகு உண்ண, முத்து உதிரும் கேதாரமே.

As a boar, Vishnu burrowed deep the earth and as a swan Brahma flew
up and up, in their quest of Siva's feet and crown in vain.
they but stood befuddled. Then they bent low their heads and adored Him.
He is entempled in Kētāram- where the lion jumps on a tusker
resting in shade, kills and cleaves it and gins to eat the flesh
covering the tusks whence pearls fall down and get scattered. 9

1257. கடுக்கள் தின்று கழி மீன் கவர்வார்கள், மாசு உடம்பினர்,
இடுக்கண் உய்ப்பார் அவர் எய்த ஒண்ணா இடம் என்பரால்--
அடுக்க நின்ற(வ்) அறஉரைகள் கேட்டு ஆங்கு அவர் வினைகளைக்
கெடுக்க நின்ற பெருமான் உறைகின்ற கேதாரமே.
They eat *Katukkai*; they fish furtively from creeks;
they are the dirty-bodied Samaṇas; they mislead men into evil ways.
Our God is entempled in Kētāram inaccessible to the Samaṇas but easy
of approach to those that articulate righteous words to which
He lends His ears and rids them of their twyfold karma. 10

1258. வாய்ந்த செந்நெல் விளை கழனி மல்கும் வயல் காழியான்,
ஏய்ந்த நீர்க்கோட்டு இமையோர் உறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்து சொன்ன அருந்தமிழ்கள்பத்தும் இசை வல்லவர்,
வேந்தர் ஆகி உலகு ஆண்டு, வீடுகதி பெறுவரே.

Gnāsambandhan of Kāzhi dight with fields where grow aplenty *cennel* paddy,
has sung these ten Tami̱l psalms after due deliberation
on the God of Kētāram blessed with cateracts.
Here abide the celestials to adore Him. They that are valiant
to sing these hymns melodiously will reign as monarchs
on earth and eventually gain *moksha*. 11

115. திருப் புகலூர் செவ்வழி

115. TIRUPPUKALŪR

1259. வெங் கள் விம்மு குழல் இளையர் ஆட(வ்) வெறி விரவு நீர்ப்
பொங்கு செங்கண் கருங்கயல்கள் பாயும் புகலூர் தனுள்--
திங்கள் சூடி, திரிபுரம் ஒர் அம்பால் எரியூட்டிய--
எங்கள் பெம்மான் அடி பரவ, நாளும்(ம்), இடர் கழியுமே.

At Pukalūr where our God is entempled, nectar- brimming flowers
deck the coiffures of young damsels that dance.
Our God is the One that wears the crescent in His crest; of yore,
with an arrow, He gutted with fire the triad of the walled-citadels.
The troubles of those who hail the sacred feet
of our God daily, will perish altogether. 1

1260. வாழ்ந்த நாளும்(ம்), இனி வாழும் நாளும்(ம்), இவை அறிதிரேல்,
வீழ்ந்த நாள் எம்பெருமானை ஏத்தா விதிஇ(ல்)லிகாள்!
போழ்ந்த திங்கள் புரிசடையினான் தன் புகலூரையே
சூழ்ந்த உள்ளம் உடையீர்காள்! உங்கள் துயர் தீருமே.

O Ye devoid of good kismet, if you know the nature
of the days past and the days to-come,and the days
unspent in hailing our God, are truly the unlived days.
Lo, He wears a slice of the moon in His strands
of matted hair; He is entempled in Pukalūr.

If you are blessed with good bosoms that forget
not Him, your troubles will end. 2

1261. மடையில் நெய்தல், கருங்குவளை, செய்ய(ம்) மலர்த்தாமரை,
புடை கொள் செந்நெல் விளை கழனி மல்கும் புகலூர் தனுள்,
தொடை கொள் கொன்றை புனைந்தான்,--ஓர் பாகம்,--மதிசூடியை
அடைய வல்லார் அமருலகம் ஆளப்பெறுவார்களே.

Our God is entempled in Pukalūr in whose sluices flowers of *neytal,* dark lily
and crimson lotus flourish; in its fields close by grow *cennel* crops aplenty.
He wears the crescent on His crest; He is concorporate with His Consort;
He is adorned with a chaplet woven of *konrai* blossoms. They that gain
access to Him 'll be blessed to reign in the ethereal and athanasic world. 3

1262. பூவும் நீரும் பலியும் சுமந்து, புகலூரையே
நாவினாலே நவின்று ஏத்தல் ஓவார்; செவித்துளைகளால்
யாவும் கேளார், அவன் பெருமை அல்லால், அடியார்கள்தாம்,
"ஓவும் நாளும் உணர்வு ஒழிந்த நாள்" என்று உளம் கொள்ளவே.

Blessed, indeed, are the days when servitors, without fail carry flowers,
holy water and *bali* to the God of Pukalūr, the while chanting and hailing
His praise. Save His glory; their ears with holes will not listen to aught else.
His servitors'll reckon the days during which
they neiher thought of Him nor glorified Him,
as days absolutely lost and as days spent, blind to Siva-consciousness. 4

1263. அன்னம் கன்னிப்பெடை புல்கி, ஒல்கி அணி நடையவாய்,
பொன்அம்காஞ்சி மலர்ச்சின்னம் ஆலும் புகலூர்தனுள்,
முன்னம் மூன்று மதில் எரித்த மூர்த்தி திறம் கருதுங்கால்,
இன்னர் என்னப் பெரிது அரியர்; ஏத்தச் சிறிது எளியரே.

In Pukalūr where our God is entempled, cobs embrace their virgin pens,
move slowly and with splendid gait reach the shade of the Kānchi
tree whose blossoms blow gold-like, and revel in din.
Of yore, Siva Mūrti, burnt the triad of walled-citadels.
Such is the dexterity of the great ineffable One
that He could kenotically get hailed by His servitors. 5

1264. குலவர் ஆக; குலம்இலரும் ஆக; குணம் புகழுங்கால்,
உலகில் நல்ல கதி பெறுவரேனும், மலர் ஊறு தேன்
புலவம்எல்லாம் வெறி கமழும் அம் தண் புகலூர்தனுள்,
நிலவம் மல்கு சடை அடிகள் பாதம் நினைவார்களே.

Whether they be of good lineage or not, if they
hail our God's *gunas* they'll in this orbis terrarum,
come by the Godly way leading to His hallowed feet.
Our noble God, the crescent-crested, is entempled in
the cool and beauteous Pukalūr pervaded
by the fragrance of melliferous flowers. 6

1265. ஆணும் பெண்ணும்(ம்) என நிற்பரேனும்(ம்), அரவு ஆரமாப்
பூணுமேனும், புகலூர் தனக்கு ஓர் பொருள் ஆயினான்;
ஊணும் ஊரார் இடு பிச்சை ஏற்று உண்டு, உடைகோவணம்
பேணுமேனும், பிரான் என்பரால், எம்பெருமானையே.
Our God, the Noble Ens, who is entempled in Pukalūr, is both male and female;
He is adorned with snakes; He but eats the alms that is offered to Him by
the folks of the urbs. His clothing is but a loin-cloth. 7
Yet, devotees hail Him alone as the true God.

1266. உய்ய வேண்டில்(ல்) எழு, போத! நெஞ்சே! உயர் இலங்கைக் கோன்
கைகள் ஒல்கக் கருவரை எடுத்தானை ஓர்விரலினால்
செய்கை தோன்றச் சிதைத்து அருள வல்ல சிவன் மேய, பூம்
பொய்கை சூழ்ந்த, புகலூர் புகழ, பொருள் ஆகுமே.

O heart, if you seek redemption, gain our God. Siva with a puissant toe of His
crushed the king of the great Lanka when he with his hands durst
uproot His mount and later graced him. He is entempled in Pukalūr
dight with flowery pools formed by nature.
Lo, life will get infused with meaning if we adore at His delubrum. 8

1267. 'நேமியானும், முகம் நான்கு உடைய(ந்) நெறி அண்ணலும்,
"ஆம் இது" என்று தகைந்து ஏத்தப் போய், ஆர் அழல் ஆயினான்;
சாமிதாதை; சரண் ஆகும்' என்று தலைசாய்மினோ--
பூமிஎல்லாம் புகழ் செல்வம் மல்கும் புகலூரையே!

When the discigerous Vishnu and the Four-faced that pursued the true path,
went in quest of our God, He soared up and as an
unbeholdable and humongous column of flame;
at this struck with wonderment the two adored Him.
Bow your heads at His feet who is the Pater of Muruka, and adore Him;
Your glory and opulence will pervade the orbis terrarum. 9

1268. வேர்த்த மெய்யர் உருமத்து உடைவிட்டு உழல்வார்களும்,
போர்த்த கூறைப் போதி நீழலாரும்,--புகலூர் தனுள்
தீர்த்தம்எல்லாம் சடைக் கரந்த தேவன் திறம் கருதுங்கால்--
ஓர்த்து, மெய் என்று உணராது, பாதம் தொழுது உய்ம்மினே!

The nude Samanas of dirty bodies roam about sudating; the shrouded
Buddhists seek the shade of the *bodhi* tree.(Ignore them.)
Our God conceals in His matted hair the sacred water
of the Ganga. He is entempled in Pukalūr.
Indulge not in reason and ratiocination touching
the true One. Adore at His feet and stand redeemed. 10

1269. புந்தி ஆர்ந்த பெரியோர்கள் ஏத்தும் புகலூர் தனுள்,
வெந்தசாம்பல்பொடிப் பூச வல்ல விடை ஊர்தியை,
அந்தம் இல்லா அனல்ஆடலானை, அணி ஞானசம்-
பந்தன் சொன்ன தமிழ் பாடி ஆட, கெடும், பாவமே.

Our God is coated with the baked ash; He rides
the Bull; He dances in the unextinguishable fire.
He abides at Pukalūr adored by the great wise men.
On Him Gnānasambandhan has sung these psalms
in ornate Tamiḻ; the sins of those that sing
his hymns, and dance, will perish altogether. 11

116. திரு நாகைக்காரோணம் செவ்வழி

116. TIRUNĀKAIKKĀROṆAM

1270. கூனல்-திங்கள் குறுங்கண்ணி கான்ற(ந்) நெடுவெண்நிலா,
வேனல் பூத்த(ம்) மராம்கோதையோடும் விராவும் சடை,
வானநாடன், அமரர்பெருமாற்கு இடம்ஆவது--
கானல் வேலி கழி சூழ் கடல் நாகைக்காரோணமே.

The curved crescent is His chaplet; eke doth He wear in His extensive
matted crest the garland of *katampa* flowers that bloom in
the moonlight amidst the fields of millet in the Kurinchi realm.
He is the God of the supernals who is entempled
in Nākaikkāroṇam-upon-the sea, fenced with
gardens and abounding in creeks. 1

1271. விலங்கல் ஒன்று சிலையா மதில்மூன்று உடன்வீட்டினான்,
இலங்கு கண்டத்து எழில் ஆமை பூண்டாற்கு இடம்ஆவது--
மலங்கி ஓங்கி(வ்) வரு வெண்திரை மல்கிய மால்கடல்
கலங்கல் ஓதம் கழி சூழ் கடல் நாகைக்காரோணமே.

Our God devastated with His mountain-bow the triad
of the walled-ciadels; in His splendorous neck He sports a carapace.
He is entempled in Nākaikkāroṇam upon
the great sea abounding in tossing white waves,
whence flow the agitated waters of the creeks. 2

1272. வெறி கொள்--ஆரும் கடல் கைதை, நெய்தல், விரி பூம்பொழில்--
முறி கொள் ஞாழல், முடப்புன்னை, முல்லை(ம்) முகை, வெண்மலர்,
நறை கொள் கொன்றை(ந்), நயந்து ஓங்கு நாதற்கு இடம்ஆவது--
கறை கொள் ஓதம் கழி சூழ் கடல் நாகைக்காரோணமே.

He, our God, is entempled in Nākaikkāroṇam
upon the dark and extensive sea whence flow creeks.
He is adorned with the flowers of gnāzal to which
are attached tendrils of shoots, the flowers
of bent punnai, the argent mullai buds as well as
melliferous kondrais, very much coveted by Him.
His delubrum is dight with flowery and stretching
gardens of fragrant-screw-pine and neytal flowers. 3

1273. வண்டு பாட(வ்) வளர் கொன்றை, மாலை(ம்) மதியோடு உடன்-
கொண்ட கோலம், குளிர்கங்கை தங்கும் குருள்குஞ்சியுள்
உண்டுபோலும் என வைத்து உகந்த(வ்) ஒருவற்கு இடம்--
கண்டல் வேலி கழி சூழ் கடல் நாகைக்காரோணமே.

He, our God, wears in delight great the well-grown
flowers of Konṟai buzzed by bees, the crpuscular moon
and the cool Ganga that lies concealed in the tresses of His matted hair.
Such, indeed, is His splendour. He is, indeed enshrined
in Nākaikkāroṇam upon the sea dight with
creeks, fenced as it were by the fragrant-screw-pine. 4

1274. வார் கொள் கோலம் முலை மங்கைநல்லார் மகிழ்ந்து ஏத்தவே,
நீர் கொள் கோலச் சடை நெடு வெண்திங்கள் நிகழ்வு எய்தவே,
போர் கொள் சூலப்படை புல்கு கையார்க்கு இடம்ஆவது--
கார் கொள் ஓதம் கழி சூழ் கடல் நாகைக்காரோணமே.

Hailed in joy by the goodly ones, He is beauteously
concorporate with Uma whose breasts are covered by a breast-band.
His long, lovely and moist matted hair, sports the white crescent
of splendorous rays. His hand wields the trident--a martial weapon.
He is entempled in Nākaikkāroṇam upon the sea
dight with dark-watered creeks. 5

1275. விடைஅது ஏறி(வ்) விடஅரவு அசைத்த விகிர்தர்அவர்,
படை கொள் பூதம்பல ஆடும் பரம்ஆயவர்,
உடை கொள் வேங்கைஉரி-தோல் உடையார்க்கு இடம்ஆவது--
கடை கொள் செல்வம் கழி சூழ் கடல் நாகைக்காரோணமே.
Our God rides the Bull; His waist is cinctured with
a venomous viper; He is a Vikirta.
He is the supreme God that dances while His Bhūta-Hosts sing.
He is clad in the peeled off skin of a tiger.
He is entempled in Nākaikkāroṇam upon the sea abounding in shops
that vend commercial goods. Eke is this polis dight with creeks. 6

1276. பொய்து வாழ்வு ஆர் மனம் பாழ்படுக்கும் மலர்ப் பூசனை
செய்து வாழ்வார், சிவன் சேவடிக்கே செலும் சிந்தையார்,
எய்த வாழ்வார்; எழில் நக்கர்; எம்மாற்கு இடம்ஆவது--
எந்தையிரும் 397
எந்தையிவ 696
எந்தையீசன் 984
எந்தைபெம்மா 1291
எம்பிரான் 431
எம்மான்சேர் 816
எயிலதுஅட் 723
எய்தவொண்ணா 1346
எய்ப்பானார்க் 169
எரிகிளர் மதியொடு 1218
எரித்தமயிர் 438
எரியார்கணை 229
எரியார்சடை 197
எரியொருவண் 950
எளியாயரியாய் 225
எறியார்பூங் 171
எற்றுதெண்டிரை 2
என்பினார்கனல் 843
என்பினால்கழி 870
என்பொடு 930
என்பொனென் 290
என்போடரவ 688
என்றனுள 237
என்னபுண்ணியம் 1160

ஏ

ஏடுமலி 354
ஏணழிந்த 1089
ஏதமிக்க 1101
ஏதனைஏத 136
ஏந்துதிணி 780
ஏய்ந்தசீரெழில் 166
ஏவமிக்க 1088
ஏவிலாருஞ் 1340
ஏவும்படை 185
ஏழுமூன்று 1035
ஏழைமார் 413
ஏழைவெண் 998
ஏறுபேணிய 1040
ஏறுமால் 869
ஏனமருப்பினோ 1223
ஏனையோர்புக 419

ஒ

ஒப்பரியபூம் 595
ஒருக்கும்மனத் 394
ஒருத்தியுமை 336
ஒருவரால் 1165
ஒலிநீர்சடை 192
ஒளிகொள்மேனி 667
ஒளிகொள்வாள் 1200

ஒளிரிளம்பிறை 852
ஒளிரும்பிறை 183
ஒளிர்தருகின்ற 957
ஒன்றொன்றொ 965

ஓ

ஓடுநதியும் 234
ஓதிமண்டலத் 897
ஓதியாரண 546
ஓதியாருமறிவா 62
ஓதியெல்லா 836
ஓயாத அரக்க 262

க

கங்குல்கொண் 1074
கங்கைதிங்கள் 1295
கங்கைசேர் 887
கங்கைநீர்சடை 1041
கங்கைபொங்கு 1111
கடலேறிய 212
கடல்வரை 928
கடிகொள்கூவிளம் 269, 976
கடிபடுகூவிள 755
கடிபடுகொன் 1221
கடியஏற்றினர் 1186
கடுக்கள்தின்று 1257
கடுத்தவாளரக் 306
கடுத்தானே 163
கடுத்துவந்த 1299
கடுத்துவருங் 473
கடுத்துவல்லரக் 361
கடுவாய்மலி 243
கட்டர்குண் 297
கட்டலர்த்த 445
கட்டிணைபுதுமலர் 1222
கட்டுவட 345
கணிகையொர் 956
கணிச்சியம்ப 1078
கண்கள்காண் 1065
கண்காட்டுநுத 519
கண்டார்நா 682
கண்ணன்கடி 186
கண்ணன்வண்ண 53
கண்ணாருங்காழி 177
கண்ணார்நுத 502
கண்ணினயலே 657
கண்ணுதலான் 435
கண்ணுமூன் 829
கண்ணுலாவிய 1132
கண்பாவுவே 503
கந்தம்நாறும் 1313
கந்தமரவுந்து 344
கந்தமாமலர்ச் 18
கந்தமார்பொழில்காழியுள் 89
கந்தமார்பொழில்சூழ்ந்த 298
கந்தமார்பொழில்காழி 309
கந்தமுந்தக் 82
கயில் ஆர்ந்த 588
கரவிடைமனத் 272
கரியகண்டத்தர் 1184
கரியமாலும் 1311
கரியானும் 439

கரியானோடு 670
கரியின்மாமுக 1052
கருகுமுந்நீர் 1247
கருகுமுடலார் 704
கருங்கழி 331
கருங்கையானை 103
கருதிவந் 571
கருத்தினாலோர் 1075
கருத்துடைய 808
கருந்தடங்கண் 563
கரையினார் 994
கரையுலாங் 34
கலங்கொள் 405
கலமார்கடல்சூழ் 265
கலமார்கடல் 188
கலமல்குதண் 760
கலவமா மயிலா 569
கலியின்வல்ல 99
கலைமான் 259
கலையானே 160
கலையான் 235
கலைவாழும் 629
கல்லால்நிழல்மேய 257
கல்லால்நிழல்மேவி 499
கல்லின்மணி 617
கல்வித்தகத்தா 794
கழலார்பூம் 631
கழிகாடலனே 213
கழியார்சீரோத 122
கழியார்பதிகா 232
கழியுலாங் 851
கழியொடுலவு 1104
களங்குளிர்ந் 1080
களங்கொள் 1183
களிபுல்கு 591
களையும்வல் 90
கள்ளநெஞ்ச 1110
கள்ளமதித்த 730
கள்ளார்செங் 527
கள்ளார்ந்த 464
கறுத்தநஞ் 1107
கறைகொள் 1163
கறையணிவேல் 706
கறையார்மணி 501
கறையினார் 994
கற்றதுறப்பணி 733
கற்றமணருற் 319
கற்றுமுற்றி 1082
கனத்தார் 209
கனிதனைக்கனி 147
கனைகொளிரு 956, 1097
கன்னெடிய 460

கா

காசக்கடலில் 181
காச்சிலாத 91
காண இனியது 720
காதமரும் 625
காதின்மிளி 681
காயச்செல்வி 673
காய்ந்ததுவு 833

காய்ந்தானைக் 151
காய்ந்துவரு 812
காரனைக்கடி 138
காரினார்கொன் 282
காருலாங்கடல் 26
காரைகள் 918
கார்கொள்மே 1057
கார்மருவுபூங் 623
காலகாலர் 69
காலனைக்கழ 573
காலாலுயிர் 246
காலினோடு 1069
காலெடுத்ததி 31
கால் நின்று அதிர 656
கால்விளங் 855
காவலாளர் 1095
காவிமலர் 772
காழிநகரான் 408
காளமேகந் 1308
கானமர்சோலை 518
கானயங்கிய 36
கானலுலாவி 961
கானார்களிற் 790
கானின்றதிர 656

கி

கிண்ணவண் 14

கீ

கீண்டுபுக்கார் 1344
கீதத்தைமிகப் 468

கு

குணங்கள் 1129
குண்டமண் 286
குண்டருங் 154
குண்டர்தம் 1147
குண்டர்வண் 982
குண்டிகைக் 726
குத்தங்குடி 429
குயினினோர் 1167
குரவங்குருக்க 400
குரவநாண் 63
குருண்டவார் 1159
குருளையெய்தி 1048
குரையார் 260
குலமலர் 959
குலவராகக் 1264
குலவுகோலத் 1144
குலவுபாரிடம் 288
குலாவுதிங் 427
குளிருஞ்சடை 678
குளிர்தருகங் 921
குறங்காட்டு 451
குறவர்கொல் 1305
குறிகொளாழி 1103
குறியமாணுரு 1047
குறைநிரம்பா 620
குறைவதாய 1286
குறைவிலார் 289
குற்றமில்லார் 1240
குன்றடுத்தநன் 559

குன்றவார்சிலை 541
குன்றானைக் 119
குன்றியூர்குட 1166
குன்றேயமர் 249
குன்றேய்க்கு 126

கூ

கூசம்நோக்கா 1306
கூரம்பதுவிலர் 707
கூர்விலங்குந் 1239
கூறுபெண் 58
கூனமரும் 621
கூனற்றிங்கள் 1270
கூனிளம்பிறை 996

கே

கேடுமூப்புச் 1099

கை

கைம்மாவின் 476
கையரிவையர் 580
கையார் சோறு 693
கையால்தொ 653
கையிலங்கிய 860
கையிலங்குமறி 72
கையிலுண்டு 1015
கையிலுண்டுழல் 66
கையில்மழு 787
கையினிலுண்டு 916

கொ

கொக்கரவர் 357
கொங்கரவப் 1331
கொங்கார்ந்த 636
கொங்குசேர்த்த 456
கொங்குலாமலர் 556
கொச்சைவயம் 771
கொடிகொளேற் 294
கொத்தலர் 938
கொத்திரைத்த 30
கொத்துலாவிய 1154
கொந்தணவும் 628
கொந்தணிகுளிர் 1093
கொந்தணிபொழில் 983
கொம்பன்ன 966
கொம்பார்பூஞ் 783
கொய்யணிம்மலர் 1230
கொலையார்கரி 245
கொல்லைவேனல் 16
கொள்ளிநக்க 1326

கோ

கோங்கன்ன 446
கோங்குசெண்பகம் 1208
கோடடுத்த 29
கோடலொடுகூன் 318
கோடலொடு 366
கோடல்கோங்கம் 56
கோடுதேன்சொரி 1206
கோடெலாநிறை 15
கோணல்வெண் 1202
கோணாகப்பே 478
கோலத்தார் 500
கோலமாகரி 1117
கோலமாமயி 557

கோள்வித் 668
கோனென்று 406

ச

சக்கரமாற் 525
சங்கந்தரள 399
சங்கவெண்கு 1053
சங்குசெம்பவ 3
சங்குலாவு 1109
சடங்கொள் 1026
சடையமர் 752
சடையாயெனு 189
சடையானைச் 145
சடையானைத்தலை 127
சடையானைத்தண் 137
சடையிடைபுக் 919
சண்பைபிரம 769
சதுரம்மறை 398
சந்தவார்குழ 96
சந்துயர்ந்தெழு 35
சலந்தாங்கு 593
சலமல்குசெ 612
சற்றேயுந் 176

சா

சாகையாயிர 1028
சாக்கியப்படு 993
சாதல்புரி 369
சாநாளின்றி 434
சாந்தம்வெண் 1314
சாந்தாகநீறணி 447
சாமவரை 480
சாமவேத 1013
சாயல்நல் 954
சாவாயும் 120

சி

சிந்தந்தன்னடி 1018
சித்தவடிவிலர் 708
சிந்தாயெனு 190
சிந்தைதிரு 363
சிந்தையிடை 651
சிரமும்நல்ல 838
சிலையதுவே 437
சிலையுய்த்த 614
சிறவார் 256
சின்போர்வை 616

சீ

சீரணங்குற 1014
சீரார்கழலே 387
சீரார்சிரபுரமுங் 767
சீரினார்மணியும் 101
சீருடையாரடி 736
சீர்கொண்ட 598
சீர்கொள்மா 981
சீறுலாவிய 1158

சு

சுடப்பொடிந் 1079
சுடுகாடுமேவி 886
சுண்ணத்தர் 974
சுண்ணநீறணி 1229
சுரும்புசேர் 1142
சுலவுஞ்சடை 236

சுழித்தவார் 1021
சுழியிலங்கு 824
சுறவக்கொடி 247
சுற்றமொடு 332
சுற்றலாம்நற் 821
சுற்றார்ந்தடி 391

தூ

தூடகமுன் 953
தூடல்வெண்பிறை 1224
தூடும்பிறைச் 498
தூலஞ்சேர் 600
தூலமுண்டு 46
தூலமேந்தி 71

செ

செங்கட்பெயர் 248
செங்கண்மாலொடு 1190
செங்கயல் 578
செடிகொள்நோயின் 76
செடிகொள்நோய் 868
செடியாடிய 474
செடியாரும் 165
செந்தமிழ் 320
செந்துவராடை 839
செந்நெலங்கழ 1
செப்பானமென் 117
செப்பிளமுலை 935
செம்பினாரு 47
செம்பொனார் 1204
செய்யதாமரை 549
செழுந்தண் 991
செழுமலிய 770
செறுத்ததுவுந் 837
செற்றஅரக் 881

சே

சேடுலாவிய 1152
சேமவன்மதில் 4
சேர்த்தானே 162
சேலின்நேரன 544

சொ

சொல்லானைச் 140
சொல்லானைத்தோற்றம் 175
சொற்றரும் 858

சோ

சோதியை 146
சோறுகூறை 1063

ஞா

ஞாலம்புகழ் 507
ஞாலமல்குந் 840
ஞாலமுன் 109
ஞானமுணர் 661

த

தகைமலி 924
தக்கனார் தலை 1071
தக்கனார் பெரு 848
தக்கன்வேள்வியை 1002
தக்கன்வேள்வி 1341
தக்கில்வந்த 41
தடுக்குடுத்து 1345
தடுமாறுவல் 217
தட்டிடுக்கி 1312

தட்டொடு 1092
தண்டுந்தாளமு 1033
தண்ணந்தராய் 766
தண்ணாரரக்க 515
தண்புனலோங்கு 144
தண்புனல்நீள் 744
தண்பொழில் 529
தண்மதியும் 524
தண்முத்தரும்ப 664
தண்வயல் 496
தந்தத்திந்தத் 48
தந்தைதாய் 871
தந்தையார் 864
தம்பலம்மறி 558
தரித்தமறை 810
தருவுயர்ந்த 903
தரைத்தேவர் 799
தலைதானது 203
தலைவாண் 777
தவந்தான் 204
தவர்கொண்ட 231
தவளவெண் 28
தழல்தாமரை 208
தழைகொள் 1303
தளிரிளவளரென 1215
தளிரிளங் 1011
தனமலிபுகழ் 1148
தனம்வரு 946
தனைக்கணி 751
தன்மையாரு 57
தன்னடைந் 441

தா

தாமென்று 432
தாயானே 159
தாளாலரக்கன் 482
தானலம்புரை 536

தி

திகழுந்திருமா 233
திகழ்மாடமலி 813
திக்குலாம் 33
திங்களொடரு 1225
திரியுமூன்று 1339
திருத்திகழ் 343
திருந்தமதி 773
திருந்தலார் 1162
திருமகள்கா 758
திருமருமார் 747
திருவளரும் 796
திருவார்தரு 252
திரையார்ந்த 603
திறங்கொண்ட 469

தீ

தீயினார்திகழ் 845
தீயுறவாய 943
தீயோம்பு 893
தீர்த்தநீர்வந் 20
தீவிரியக் 743

து

துக்கமிக்க 1085
துங்கவானவர் 414

துணிநீலவண் 193
துணிமல்கு 597
துணைநன் 396
துணையாக 223
துயராயின 395
துலங்குவெண் 1232
துவராடையர் 385
துவருறுகின்ற 960
துளிமண்டி 962
துறக்குமா 1076
துன்பாய 506
துன்பானைத் 118
துன்றுவார்சடைச்சுடர் 1153
துன்றுவார்சடை 1198
துன்னஆடை 987
துன்னங்கொண்ட 831
துன்னம்பெய் 475
துன்னுகடற் 729
துன்னுகுழல் 349

தூ

தூசார்ந்த 638
தூசுதானரைத் 1133
தூநயங்கொள் 823
தூயவிடை 883
தூயவெயில் 660
தூயானைத்தூ 130
தூவியஞ்சிறை 581

தெ

தெரிந்தவடியார் 698
தெரிந்ததுவும் 835
தெரிந்தவன் 95
தெற்றலாகிய 86
தென்சொல் 1012
தென்றல்துன்று 78
தென்னிலங் 1178

தே

தேசுகுன்றாத் 658
தேடித்தான் 1025
தேய்ந்துமலி 490
தேவரும்மரர் 857
தேவர்தான 1051
தேவர்திங்க 304
தேவாசிறியோம் 695
தேனமர்பொழி 939
தேனுமாயமு 106
தேனுலாமலர் 94
தேனுற்றநறு 19
தேனையேறு 50

தை

தையலாளொரு 465
தையலோர் 486

தொ

தொடலரிய 449
தொண்டரஞ்சு 1248
தொண்டர்தண் 1008
தொண்டர்மிண்டி 1293
தொண்டர்வந்து 545
தொண்டெலாம் 299
தொலைவிலாத 1343

தொல்லையூழிப் 55
தொல்லைவல் 1022
தொழலார் 388
தொழுமாறு 211
தொன்னீரிற் 765

தோ

தோடார்மலர் 392
தோடிலங்குங் 1242
தோடுசெவிக் 710
தோடுடையார் 732
தோடொருகா 922
தோளின்மே 553

ந

நகுவாய்மலர் 659
நகுவான் 258
நச்சரவாட்டி 709
நச்சித் தொழு 390
நச்சிநீர்பிறன் 1064
நஞ்சணி 933
நஞ்சுகண்டத் 1284
நடம்மதாடிய 1056
நடம்நண்ணி 226
நட்டத்தோடு 1288
நண்ணியொர் 346
நம்பனார்நல 1195
நம்பொருள் 1061
நம்மானமாற்றி 113
நரையார்வந்து 665
நலங்கொள்பூம் 1038
நலங்கொள்முத் 640
நலச்சங்க 596
நலநாரணன் 230
நலந்தருபுனற் 342
நலந்தானவன் 202
நல்குரவுமின் 316
நல்லபோதி 1278
நல்லராற்ற 1175
நல்லார்பயில் 386
நல்லானை 112
நளிரும்புனற் 606
நளிரும்மலர்க் 381
நளிர்பூந்திரை 639
நறவங்கமழ் 694
நறவமல்லிகை 1210
நறவார்தலையி 216
நறைவளர் 753
நற்றாமரைமலர் 516
நன்மையால் 461
நன்றாங்கிசை 786
நன்றியொன்று 828
நன்னெஞ்சே 433

நா

நாகந்தான் 1001
நாகம்பூணேற 131
நாசமாம் 291
நாடினார்மணி 285
நாடெலா 532
நாட்டம்பொ 785
நாட்பலவுஞ் 774

நாதன்நம்மை	663
நாமருவுபுன்	462
நாவார்ந்த	589
நாறுகூவிளநாகு	411
நாறுகூவிளம்	1055

நி

நிச்சலேத்து	279
நிணங்கவரும்	622
நிணங்குடர்	865
நித்தலுந்நியமம்	409
நிலந்தண்ணீரோடு	690
நிலநீரொடா	601
நிலவும்புனலும்	178
நிலையார்ந்த	894
நிலைவெறுத்த	1070
நிறவுருவொன்	926
நிறைவில்	378
நின்றடர்த்திடு	548
நின்றநெடு	373
நின்றமதில்	814
நின்றுணுஞ்	1213
நின்றுதுய்ப்பவர்	275
நின்றுமேய்ந்	564

நீ

நீடல்கோடல்	575
நீடல்மேவு	45
நீடுமலரும்	697
நீணமார்முரு	583
நீண்டவார்	543
நீதியர்நெடுந்	360
நீதியார்நினைந்	300
நீதியால்வாழ்	866
நீநாளும்நன்	444
நீராரவார்சடை	454
நீரார்ந்தசெஞ்...நிரை	586
நீரார்ந்தசெஞ்...நெற்றி	608
நீரானேநீள்	156
நீரானைநிறை	149
நீரினாற்கடற்	1146
நீரினார்வரை	579
நீருலாவிய	1150
நீருளாரும்	1322
நீருளார்கயல்	552
நீர்கொண்ட	888
நீர்கொள்நீள்	1141
நீலஞ்சேர்	891
நீலநன்மா	907
நீலமாமணிநித்	1212
நீலமாமணிமிட	990
நீலமார்தரு	1193
நீலநெய்தல்நிலவி	81
நீலவடிவர்	679
நீறார்தருமேனி	380
நீறுபூசிநிலத்	1253
நீற்றானைநீள்	134
நீற்றேர்துதைந்	778

நு

நுணங்குநூல்	992
நுண்ணியதாய்	997

நெ

நெஞ்சமிது 358
நெஞ்சார 968
நெடியதாய 594
நெடியமால் 872
நெடியாய் 224
நெடியானொடு 263
நெடியானொடுநான் 384
நெடியானோடயன் 142
நெண்பயங்கு 287
நெதிபடுமெய் 955
நெதியமென்னு 1131
நெதியானை 116
நெறிகொள் 1023
நெற்குன்றம் 428

நே

நேமியானும் 1267
நேரியனாகு 951

நொ

நொச்சியே 124
நொடியோரா 1030
நொய்ம்பந்து 452

ப

பக்கம்நுந்தமை 27
பங்கயம்மலர்ச் 1194
பங்கயம்மலர்ப் 303
பஞ்சிநுண் 1031
பஞ்சின்மெல் 568
படஅரவாடு 909
படங்கொள் 1300
படர்செம்பவ 401
படர்தருஞ் 859
படைகொள் 1094
பட்டம்பால் 1006
பட்டைநல் 88
பணங்கொளாடு 102
பண்டமரர் 489
பண்டலை 410
பண்டாலின் 139
பண்டுசெய்த 1086
பண்டுநால் 1177
பண்டுநாம் 1020
பண்ணவண் 1009
பண்ணியாழ் 560
பண்ணியாள் 267
பண்ணிலாவிய 896
பண்ணிற்பொலிந்த 1217
பண்ணினார்பாடி 305
பண்ணினல்ல 59
பண்ணினோர் 530
பண்ணொளி 458
பண்ணொன்ற 471
பண்மொய்த்த 526
பதிதானிடு 201
பத்திரட்டி 1277
பத்துத்தலையோ 504
பந்தார்விரன் 784
பந்துலாவிரற் 1203
பரசுதரித் 713

பரசுபாணியை 1126
பரந்துநிரந்து 340
பரந்தோங்கு 592
பரப்புறு 317
பரவக்கெடும் 376
பரவிவானவர் 542
பரவுவாரை 1032
பரியமாசுணம் 1044
பருக்கையானை 1105
பருதியியங்கும் 644
பருத்துருவது 351
பருமராமொடு 538
பருவத்தில் 963
பலகாலங்கள் 403
பலபலவேட 937
பலரும்பரவப் 194
பலவுநீள் 1196
பலிகெழு 745
பலிதிரிந்து 67
பல்லயங்கு 822
பல்லார்தலை 686
பல்லிதழ் 873
பல்லிலோடுகை 1000
பவனமாய்ச் 863
பவ்வமார்கடல் 1134
பழகும்வினை 382
பழையதம்மடி 567
பள்ளமார் 93
பள்ளமீனிரை 5
பறித்தபுன் 1125
பறித்தவெண் 1114
பறையினோடு 104
பறையொடு 742
பற்றினானரக்கன் 284
பனிவளர் 911
பனைமல்கு 971
பன்றியின் 712

பா

பாக்கியமதோ 352
பாக்கியம்பல 561
பாசமான 880
பாடலார்நான் 488
பாடலார்வாய் 635
பாடல்நெறி 479
பாடல்வண்டு 1039
பாடல்வீணை 1172
பாடவல்லநன் 554
பாடியாடுமெய்ப் 1201
பாடுமடியார் 671
பாடுவாரிசை 900
பாதத்தாரொலி 270
பாதம்விண் 1249
பாம்பரைச் 477
பாயோங்கு 604
பாரல்வெண் 13
பாராரும் 125
பாருநீரொடு 1120
பாலனடி 359
பாலூருமலைப் 497
பாலையன்ன 975

பால்வெண் 776
பாவணவு 312
பாவமேவு 1062
பாறுபுத்த 905

பி

பிச்சைபிறர் 484
பிணிகலந்த 986
பிண்டமுண்டுதிரி 77
பிண்டமுண்டு...பிரிதுவர் 1191
பிண்டமுண்டுழல்வார் 539
பிண்டிபாலரு 1136
பிரமனூர் 761
பிள்ளைப்பிறை 666
பிறவியால் 867
பிறைதான் 206
பிறைநிலாவிய 1155
பிறையார்சடை 227
பிறையானே 164
பிறையுமாசில் 49
பிறைவளரும் 738

பீ

பீடினாற்பெரி 841

பு

புகரேதுமிலா 210
புகலிசிரபுரம் 763
புடையினாற் 277
புண்டரிகத்தார் 800
புத்தராய் 1180
புத்தருந்தோகை 143
புத்தரும்புந்தி 759
புத்தர்தத்து 1081
புத்தர்தேரர் 1301
புத்தர்பலரோட 253
புத்தர்புன்சம 308, 550
புத்தர்பொய் 1059
புந்தியார்ந்த 1269
புயலார் 646
புரந்தரன் 757
புரவியேழும் 1296
புரைசெய் 1017
புலியதள் 912
புலியினுரிதோ 680
புல்குபொன் 1127
புல்லமேறி 276
புள்ளுங்கமல 483
புறவஞ்சிரபுர 768
புற்றானைப் 115
புனமல்கு 613
புனலாடிய 222

பூ

பூசஇனியது 721
பூசநீர் பொழி 17
பூசுமாசில் 1285
பூதஞ்சேர்ந்திசை 1185
பூதத்தின் 885
பூதமொடுபேய் 348
பூமகனூர் 807
பூம்படுகிற் 746
பூவலர்ந்தன 23
பூவார்சடை 674

பூவினானும்வி 1245
பூவினானொடு 296
பூவுந்நீரும் 1262
பூவுளானு 1179

பெ

பெண்ணமருந் 618
பெண்ணமர் 750
பெண்ணுரு 716
பெண்ணொர்பாகத்தர் 1173
பெண்ணொர்பாகம் 1304
பெண்ணொர்கூறினர் 1187
பெயரெனும்மி 540
பெரியவாகிய 1004
பெரியாய் 218
பெருகுசந்தனம் 1209
பெரும்பிணி 325
பெறுமலர் 920

பே

பேயடையா 520
பேய்கள்பாடப் 1122
பேரும்பொ 652
பேழைவார் 1176

பொ

பொங்காடரவு 654
பொங்குசெங் 1287
பொங்குதண் 1016
பொங்குநற் 1140
பொங்குபூண் 901
பொங்குநூல் 607
பொங்குவெண் 995
பொங்குவெண்புரி 1050
பொடிகள்பூசி 1292
பொடிகொள் 1174
பொடிகொள்மேனி 1138
பொடியிலங்குந் 1237
பொய்துவாழ் 1276
பொய்மிகுந்த 1068
பொருதுவார் 42
பொலியுமால் 108
பொல்லாத 627
பொல்லாப் 610
பொன்தாது 879
பொன்தொத்த 779
பொன்னேர்கோன் 675
பொன்னேர்தரு 255
பொன்னொப்ப 241

போ

போகமுமின் 754
போகம்மறி 187
போதியர்கள் 528
போதியார்பிண்டி 132
போதினாலும் 1328
போதின்மே 626
போதுலவு 493
போதுலாவிய 39
போய்க்காடே 443
போர்த்ததுவும் 834

ம

மகரவார்கடல் 11
மங்குநோ 1091

மங்குல்தங்கு 83
மங்குல்தோய் 448
மங்கைகூறமர் 1054
மங்கைகூறினன் 1228
மங்கைமணந்த 875
மங்கையோர்கூறு 491
மங்கைவாணுத 547
மஞ்சுலாவியகடல் 1157
மஞ்சுலாவியமாட 37
மடங்கொள்வாளை 80
மடந்தை 1254
மடம்படுமலை 335
மடலார்ந்த 513
மடுத்தவாள 1145
மடையினெய் 1261
மட்டிட்ட 508
மணிநீள்முடி 219
மணிமல்கு 890
மண்டுகங்கை 1281
மண்டுகங்கையும் 978
மண்டை 1037
மண்ணார்நீரர் 1164
மண்ணார்ந்த 590
மண்ணினிற் 38
மண்ணினைமுன் 494
மண்ணினைவான 153
மண்ணுமோர் 728
மண்ணொடு 521
மண்நீர் இலங்கையர் 791
மண்புகார் 442
மதிநுதல் 932
மதியமொய்த்த 1330
மதியானே 157
மந்தணமிரு 371
மந்தமாம் 111
மந்தமார்பொழின் 1211
மந்தமாரும் 1302
மந்தமருவும் 645
மந்திரந்தரு 32
மந்திரமாவது 717
மயலிலிங்குந் 1238
மரவம்பொழில் 884
மருவலார்தம் 1316
மருவாரு 155
மருவுமான் 292
மருவுநான் 827
மருளினல்லார் 1327
மலம்பாவிய 264
மலிகடுந்திரை 534
மலியுமாளிகை 100
மலிவிழாவீதி 514
மலைநிலாவிய 1156
மலையன்றெ 251
மலையிலங்குஞ் 1243
மல்குதண் 1280
மல்லையார்மும் 1324
மழுவாளோடு 128
மழைமுகில் 914
மழையார்மிட 244
மறத்துறை 327

மறம்பயமலிந் 321
மறியாருங் 632
மறுத்தானை 152
மறைகளான் 898
மறைத்தான் 207
மறைமல்கு 615
மறையானை 123
மறையினார்மழு 280
மறையினானொலி 271
மறையுடையார் 734
மறைவலா 1234
மற்றிவாழ்க் 1090
மற்றுமிவ்வுல 535
மனவஞ்ச 425
மனைக்கேயேற 643
மன்னினார் 856
மன்னீரலங் 791

மா

மாகாயம் 467
மாடம்நீடு 75
மாடமாளிகை 1199
மாடெலாமண 1181
மாட்டூர்மடப் 426
மாணாயுலகங் 648
மாணிதன் 1119
மாதிலங்கியபா 1143
மாதிலங்கியமங் 6
மாதொர்கூறனை 1170
மாதொர்கூறுடை 44
மாதோர்கூறுகந்து 1226
மாபதம்அறி 54
மாமலையாள் 798
மாயனும்மல 1235
மாலினோடயன் 417
மாலினோடரு 87
மாலுஞ்சோதி 65
மாலுநான்முக 274
மாலுமாமல 1058
மாலோடயனறி 725
மாலோடுநான் 505
மாறாதவெங் 481
மாறுதன்னொடு 1137
மானஞ்சும் 1043
மானத்திண் 1118
மானவாழ்க்கை 1034

மி

மிக்கமலத் 815
மிக்ககாலனை 1042
மிடைபடு 949
மின்னுஞ்சடை 684
மின்னுலாவிய 1149

மு

முடியர்மும் 302
முடியார்சடை 220
முடியிலங்கு 825
முடையார்தரு 261
முதிருஞ்சடை 228
முத்தன்சில் 899
முத்தன்மிகு 365
முத்திதருவது 719.

முத்தினைமுழு 150
முத்தேர்நகை 788
முந்திக்கண் 904
முந்திவந்து 1250
முயல்வளாவிய 1007
முழுதிலங்கும் 1244
முள்ளார்கமலத் 692
முன்னமிரு 314
முன்னநின்ற 1325
முன்னியகலைப் 310
முன்னுமாடம் 85
முன்னைநீர் 1087

மூ

மூடியசீ 782
மூத்தானை 148

மெ

மெய்யின்மாசினர் 110
மென்சிறை 862

மே

மேகமொடோடு 923
மேய்ந்திளஞ் 577
மேலோடிநீடு 970
மேலோதுங் 804
மேவயருமும் 370
மேவா அசுரர் 685
மேவிலொன்றர் 70

மை

மைதவழு 313
மைதழைத் 43
மைத்தவண்டெழு 537
மைப்பயந்த 509
மைப்பூசு 512
மையார்மணி 792
மையான 135
மையினார்பொ 533
மையினார்மணி 584
மையுலாம் 1005

மொ

மொட்டைய 374
மொண்டலம்பி 531
மொழியானை 172

மோ

மோடிபுறங் 802

வ

வங்கமலியுங் 315
வசையபராத 944
வடங்கெட 329
வடிகொள்பொ 642
வடிகொள்மே 1182
வண்டணை 333
வண்டமர் 915
வண்டலங் 10
வண்டலார் 570
வண்டிரைத்த 40
வண்டிரைத்து 84
வண்டிறைமதி 311
வண்டுசென்று 1124
வண்டுபாடல் 1273
வண்டுவாழுங் 1338
வண்ணமால் 1046

வண்மைவளர் 801
வம்படுத்த 25
வம்பார்கொன் 700
வம்புநாறும் 1307
வயஞானம் 199
வரங்கள் 412
வரிகொள் 9
வரியமறை 874
வரியரவே 492
வரியேர்வளை 687
வருக்கமார்தரு 8
வருந்திய 611
வருமாகரியின் 882
வரைத்தலம் 1112
வரைத்தலைப் 1072
வரையார்திரள் 240
வரையார்த்து 383
வரைவந்தெடு 969
வரைவளங்கவர் 1214
வலமிகுவா 925
வலியகால 820
வல்லரக்கன் 826
வல்லிசோலை 1115
வழுவாள் 195
வளங்கெழு 324
வளைக்கைமட 510
வளையார் 669
வள்ளிமுலை 689
வன்புயத்த 902
வன்னி கொன்றை 68

வா

வாக்கியஞ் 850
வாங்கினார்மதின் 278
வாசங்கமழும் 702
வாசநலஞ் 466
வாசமலியும் 353
வாடல்வெண்டலைமாலை 551
வாடல்வெண்டலைய 1227
வாடற்றலைமா 775
வாடியவெண் 830
வாய்ந்தசெந்நெல் 1258
வாய்ந்தபுகழ்ம 797
வாய்ந்தபுகழ்வின் 339
வாராதநாடன் 964
வார்கொள்கோ 1274
வாலியபுரத் 367
வாழ்ந்தநாளும் 1260
வாளார்கண் 455
வாளிசேரடங் 854
வாளையுங்கயலு 576
வாள்வரி 934
வானமர்திங்களும் 739
வானிளம்மதி 1231
வானுலாவும் 79
வானேமலையே 214
வானோர்மறை 402

வி

விடக்கொரு 330
விடமுண்ட 522
விடமுனாரவ் 1318

விடமல்கு 487
விடைநவிலுங் 749
விடையதேறி 1275
விடையதேறி 1336
விடையார் 672
விடையார்கொடி 677
விடையானை 170
விடையுடையப்பன் 908
விண்களார் 1139
விண்டமாமல 1003
விண்டவெள் 1106
விண்டார்புர 377
விண்டெலாமல 12
விண்டொழிந்தன 1161
விண்ணமர்ந்தன 574
விண்ணவர்வேதம் 1297
விண்ணவர்கண் 711
விண்ணவர்கள் 337
விண்ணானே 158
விண்ணியங்கும் 819
விண்ணியல்பிறை 355
விண்ணிலான 74
விண்ணுலாமதி 301
விண்ணுளார் 129
விதியானை 168
விரவிநாளும் 565
விரவுநீறுபொன் 844
விரித்தனை 322
விரிந்தனை 323
விருதிலங்குஞ் 1241
விருதுகுன்ற 1171
விருத்தனாகிவெண் 281
விரையினார் 846
விலங்கலேசிலை 1192
விலங்கலொன் 1271
வில்லார்வரை 789
விழிக்குந்நுதன் 379
விளங்கயனூர் 811
விளங்கியசீர்ப் 795
விளங்கிழை 356
விளவுதேனொடு 1205
விளைக்கும் 24
விற்றானை 141

வீ

வீக்கமெழும் 1332
வீக்கினான் 457
வீங்கினார் 459
வீசுமின்புரை 268
வீடினார்மலி 1236
வீடும்ஞானமும் 22
வீரமாகிய 847

வெ

வெங்கள்விம்மு 1259
வெங்குருத் 764
வெண்ணிலாமதி 293
வெணணிலாமிகு 1151
வெண்டலையோர் 1315
வெண்ணாவலமர் 254
வெண்புலான் 1323
வெந்தநீறணி 1233

வெந்தநீறுமெய் 1319
வெந்தநீறும் 1283
வெந்தநீற்றினர் 1027
வெந்தழல்வடிவினர் 1216
வெயிலின் 242
வெயிற்கெ 1077
வெய்யநோய் 849
வெருகுரிஞ்சு 988
வெருவிவேழ 51
வெள்ளையெ 878
வெறிகொளா 1272
வெறியார்மலர்க் 205
வெற்றரைச் 715
வென்றிமாமல 1036
வென்றிமிகு 347

வே

வேகமதநல் 676
வேடஞ்சூழ் 599
வேடமுடைய 683
வேணுபுரம் 762
வேதத்திலுள் 718
வேதநாவினர் 415
வேதமொடு 334
வேதம்பலவோ 407
வேதவித்தாய் 1282
வேதித்தார் 472
வேயுதிர்முத் 1309
வேயுறுதோளி 929
வேர்த்தமெய்ய 1268
வேலாவலயத் 404
வேலைதன்னின் 1337
வேலைமலிதண் 523
வேள்பட 936
வேள்படுத்திடு 107
வேறுயர் 948
வேனலானை 60

வை

வைத்தநிதியே 699
வையநீரேற் 450

கல்லிலும் செம்பிலும்
கழுமலத்தார் பதிகங்களும் பதிவுகளும்

கல்லிலும் செம்பிலும்
கழுமலத்தார் பதிகங்களும் பதிவுகளும்

கல்லிலும் செம்பிலும் கழுமலத்தார் பதிகங்களும் பதிவுகளும்

முதுமுனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் எனப்பெறும் மூவர் முதலிகளும் தலங்கள் தோறும் பாடிய பாடல்கள் ஏட்டுச்சுவடிகள் வாயிலாகக் கிடைக்கப்பெற்று அவற்றை ஏழுதிருமுறைகளாகத் தொகுத்துள்ளனர். மூவர் தம் பாடல்களை ஆழ்ந்து நோக்கும் போது அவர்கள் பெற்ற அநுபூதி அப்படியே அவர்கள்தம் பாடல்களில் பதிவு பெற்றுள்ளமையைக் காணலாம். எனவே அவர்கள் பண்ணோடு பாடும்போது உடனிருந்த அடியார்களில் சிலரே அவற்றை ஏட்டில் எழுதியுள்ளனர். இதனைச் சேக்கிழார் பெருமானின் வாக்கால் அறியலாம். அடியார்களால் எழுதப்பெற்ற திருப்பதிகச் சுவடிக்கட்டுக்களை அவர்களோடு சென்ற அவ்வடியார்களே உடன் எடுத்துச் சென்றனர் என்பதும் திருத்தொண்டர் புராணம் பகரும் செய்தியாகும்.

திருத்தெளிச்சேரியில் திருஞானக் குழந்தையார் முன்பு புத்தர்கள் கூட்டங்கூடித் தம் தலைவர் புத்த நந்தியுடன் சேர்ந்து பிள்ளையாரின் வரவைத் தடுத்தபோது, திருஞானசம்பந்தர் பாடியருளும் திருப்பதிகங்களை ஏட்டில் எழுதிவரும் அடியாரொருவர் சம்பந்தரின் திருவாக்கால் (புத்தர் சமண் கழுக்கையர் எனத் தொடங்கும் பஞ்சாக்கரத் திருப்பாடலைப்பாடி) புத்தநந்தியின் மேல் இடிவிழச்செய்தார் என்பது பெரியபுராணம் கூறும் செய்தியாகும். "அருமறைச்சொல் திருப்பதிகம் எழுதும் அன்பர்" என்ற சேக்கிழார் பெருமானின் வாக்கு திருஞானசம்பந்தர் தம்பதிகத்தினை அடியவர் ஒருவர் உடனிருந்து எழுதிவந்தார் என்பதனை வலியுறுத்துகின்றது.

மதுரையில் அமணரோடு நிகழ்ந்த அனல் வாதத்தின் போது ஆளுடைய பிள்ளையார் தாம் கையோடு எடுத்துச்சென்ற பதிகங்கள் எழுதப்பெற்ற திருமுறையாம் ஏட்டுச்சுவடியினை எடுத்து, தம் கையாலேயே கட்டவிழ்த்து கயிறு சார்த்தி நள்ளாற்றுப்பதிகப்பாடல் அடங்கிய ஏட்டினை எடுத்து தீயில் இட்டார் என்பதும் சேக்கிழார் பெருமானார் திருவாக்கேயாகும். பின்பு புனல் வாதின்போது தாமே பாடி எழுதிய திருப்பதிக ஏட்டினை ஆற்றிலிட்டார் என்பதும் பெரியபுராணம் பகரும் செய்தியாகும்.

திருஞானசம்பந்தர் நல்லூர்ப்பெருமணத்தில் சிவசோதியில் கலந்து சிவப்பேறு பெற்ற நிகழ்வுக்குப் பின்னை நாளில் சீகாழிப்பதியில் பிறந்த கணநாதர் எனும் மறையவர் சிவப்பணிகளோடு திருமுறை எழுதுதல், வாசித்தல் முதலிய திருத்தொண்டுகளில் சிவனடியார்களைப் பயிற்றுவித்து திருத்தொண்டு செய்து வந்தார் எனப் பெரியபுராணம் கூறும். "நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரையனும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி யேத்துகப்பானை" என்ற சுந்தரரின் வாக்கு திருமுறைகளை வழிவழி ஏட்டில் எழுதிக் காத்து, பாடும் மரபை உணர்த்துவதாகும். சில நூற்றாண்டுகளே காப்பாற்ற

வல்ல ஏட்டுச் சுவடிகளை மீட்டும் மீட்டும் புதிய ஓலைகளில் எழுதியே பாதுகாத்து வந்துள்ளனர். திருக்கோயில்களில் இருந்த நூலகங்களிலும் ஏடு பெயர்த்து எழுதும் பணிகள் தொடர்ந்து நிகழ்ந்தமையை தில்லைக்கோயிலில் உள்ள சுந்தரபாண்டியனின் கல்வெட்டுக்கள் விவரிக்கின்றன.

சீகாழி திருக்கோயிலில் உள்ள ஆளுடைய பிள்ளையார் கோயிலில் காணப்பெறும் அனபாயன் எனும் இரண்டாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுச் சாசனங்களில் ஒன்றில் ஆளுடைய பிள்ளையார்கோயிலில் முன்பு நிறுவப்பெற்ற திருவுருவங்கள் சிதைவு பெற்றமையால் புதிய உருவங்கள் எடுப்பதற்கும், மேலும் அத்திருக்கோயிலில் ஏட்டில் எழுதிவைக்கப் பெற்றிருந்த திருமுறைச் சுவடிகளைப் பூசித்துக் கண்காணிக்கத் **"தமிழ் விரகர்"** ஒருவர் நியமிக்கப் பெற்றதாகவும், அவர் திருமுறை ஏடுகளை பழுதடையாமல் பாதுகாத்துக்கொள்ளவும், பழுதடையின் அவற்றை எழுதிப் புதுப்பிக்கவும், அவற்றைப் பூசிப்பதுமாகிய கடமைகளைச் செய்ய நிலம் அளிக்கப்பெற்றமை குறிக்கப்பெற்றுள்ளது. எனவே திருக்கோயில்களில் திருமுறை ஏடுகளை காப்பதும், பூசிப்பதும், புதுப்பிப்பதுமாகிய பணிகளை மேற்கொண்டொழுகினர் என்பதறிகிறோம்.

திருமுறைச் சுவடிகளைப் பாதுகாப்புடன் மரபுவழி காத்துவந்த போதும் ஒரு சில திருக்கோயில்களில் பாடப் பெற்ற சில பதிகங்களோ அல்லது அப்பதிகங்களின் சில பாடல்களோ காலவெள்ளத்தில் மறைந்தன. சேக்கிழார்காலத்திற்கு முன்பே அவ்வாறு சில பதிகங்கள் கிடைக்காமற்போயின்.

திருத்தவத்துறை எனப்பெறும் இலால்குடி சிவாலயத்தில் திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பாடினார் எனச் சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டிருந்தும் பின்னாளில் அப்பதிகம் நமக்குக் கிடைக்கவில்லை. சேக்கிழார் பெருமான் காலத்துக்கு முன்பே மறைந்தவை திருவிடைவாயில் மற்றும் திருக்கினியன்னவூர் தலத்துத் திருஞானசம்பந்தரின் பதிகங்களாகும். அவை கிடைக்காததால்தான் சேக்கிழார் அவை பற்றிக் குறிப்பிடவில்லை.

பனை ஓலையில் எழுதப்பெறும் சாசனங்களோ அல்லது பிறவகையான எழுத்துப் படைப்புக்களோ செல்லரித்து, மடித்து அழிந்துவிடும் என்பதால், பண்டு சோழப் பெருவேந்தர்கள் முக்கிய ஆவணங்களைப் படியாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டுக எனத்திருவாய்மொழிந்து ஆணையிட்டதைக் குறிப்பிடும் பல சான்றுகள் உள்ளன.

அரும்பாக்கிழான் மணவிற்கூத்தன் செய்த அரும்பணிகள்

முதற் குலோத்துங்கனின் படைத்தலைவனாய் விளங்கிய அரும்பாக்கிழான் மணவிற்கூத்தன் காளிங்கராயன் என்பான் தொண்டை மண்டலத்து மணவில் என்ற ஊரினன். பொன்னம்பலக்கூத்தன் நரலோகவீரன் என்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றவன். இவன் தில்லைப் பெருங்கோயிலுக்கு ஆற்றிய பணிகளை முப்பத்தேழு பாடல்களில் கூறி அவற்றை

அக்கோயிலில் கல்வெட்டாகப் பதிவு செய்துள்ளான். அவற்றுள் மூன்று பாடல்களில் திருஞானசம்பந்தப் பெருமானுக்காகவும் மூவர் திருப்பதிகங்களை நிலையாகக் காப்பதற்காகவும் செய்த அருள் தொண்டுகளை எடுத்துரைத்துள்ளான்.

தில்லைப் பெருங்கோயிலில் திகழ்ந்த திருஞானசம்பந்தப் பெருமானின் திருக்கோயிலுக்குப் பொற்றகடுகளை வேய்ந்து அவர்தம் கோயிலைப் பொற்கோயிலாக மாற்றி அமைத்தான் என்று கூறப் பெற்றுள்ளது.

தென்வேந்தன் கூனிமிர்த்த செந்தமிழர் தென் கோயில்
பொன் மேய்ந்து திக்கைப் புகழ் வேய்ந்தான் – ஒன்னார்க்குங்
குற்றம் பல கண்டோன் கோளிழைக்கும் வேற் கூத்தன்
சிற்றம் பலத்திலே சென்று

என்பதே கல்வெட்டில் காணப்பெறும் மூன்றாம் பாடலாகும்.

தேவாரப் பதிகங்களைத் தில்லைப் பெருங்கோயிலில் அடியார்கள் தடைபடாமல் கேட்பதற்காக மண்டபம் ஒன்றினையும் இப்பெருமகனே கட்டுவித்தான். இதனை,

நட்டப்பெருமான் ஞானங் குழைத்தளித்த
சிட்டப்பெருமான் திருப்பதிய – முட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான்றெவ் வேந்தர்கெட
வாட்போக்கும் தொண்டையர்கோன் மன்.

என்று பதிநான்காம் கல்வெட்டுப்பாடல் கூறா நிற்கின்றது. முப்பத்தொன்றாம் பாடலோ,

முத்திறத்தாரீசன் முதற்றிறத்தைப் பாடியவா
றொத்தமைத்த செப்பேட்டி னுள் எழுதி – இத்தலத்தி
னெல்லைக் கிரிவா யிசையெழுதினான் கூத்தன்
தில்லைச் சிற்றம் பலத்தே சென்று

என்று கூறி மணவிற் கூத்தன் மூவர் தேவாரப்பாடல்களான முதலேழு திருமுறைகளையும் செப்பேடுகளில் எழுதிவைத்ததோடு, அத்தலத்தின் பதிகங்களுக்குரிய இசையமைதியையும் பதிவு செய்தான் என்ற அரிய தகவலைப் பதிவு செய்துள்ளது.

செப்பேட்டில் திருஞானசம்பந்தரின் திருமுறை

கி.பி 1190 – 1218 வரை தென்பாண்டி நாட்டில் அரசோச்சியவன் சடையவர்மன் குலசேகர பாண்டியனாவான். 'பூவின் கிழத்தி' என்ற மெய்க் கீர்த்தியோடு இப்பாண்டியனின் கல்லெழுத்துச் சாசனங்கள் காணப் பெறுகின்றன. திருச்செந்தூருக்கு அருகே திகழும் ஆற்றூரில் உள்ள இம்மன்னவனின் கல்வெட்டு கி.பி 1206ஆம் ஆண்டு எழுதப்பெற்றதாகும். அக்கல்வெட்டு சாசனத்தில் ஏழாம் வரி பின்வருமாறு உள்ளது.

"ஸ்ரீ கோச் சடைபன்மரான திரிபுவனச் சக்ரவர்த்திகள் குலசேகர தேவர்க்கு யாண்டு 13வதின் எதிர் மூவாமாண்டு குடநாட்டு பிரமதேயம் ஆற்றூர் சேந்தமங்கலமான அவனிப சேகரமங்கலத்து மகா சபையோமும் இவ்வூர் காரண்மை குடிகளோம் உடையார் ஸ்ரீ

சோமநாத தேவர்க்கு திருமடைவிளாகமாக பிள்ளை பஞ்சவன் பிரமாதிராஜன் பிள்ளையார் திருமுறை செப்பேடு கண்டபெருமாள் திருநாமத்தால் திருவிழா வீதி ஆக்கித்தர வேண்டுமென்று அருளிச் செய்தபடி…" (ARE 431 of 1930)

இக்கல்வெட்டுச் சாசனத்தை வைத்து நோக்கும் போது சடையவர்மன் குலசேகர பாண்டியனின் பதினாறாம் ஆட்சியாண்டில் பிள்ளை பஞ்சவன் பிரமாதிராஜன் எனும் அந்தண அலுவலர் ஒருவர் திருஞானசம்பந்தரின் (பிள்ளையார்) திருப்பதிகங்கள் அடங்கிய முதல் மூன்று திருமுறைகளையும் செப்பேட்டில் எழுதி ஆற்றூர் திருக்கோயிலில் காத்தவர் என்பது அறிய முடிகிறது. பஞ்சவன் பிரமாதிராஜன் பெற்ற சிறப்புப்பெயரான **"பிள்ளையார் திருமுறை செப்பேடுகண்ட பெருமாள்"** என்ற பெயரில் ஆற்றூரில் திருவிழா எடுக்கும் திருவீதி அமைப்பதற்காக ஊர்சபையோரும், வேளாண்மை செய்யும் வேளாளர்களும் நிலம் அளித்தனர் என்பது இச்சாசனச் செய்தியாகும்.

கல்வெட்டுகளில் பிள்ளையார் தேவாரம்

திருக்களர் மு. சுவாமிநாத மாதவராயர் என்பார் திருவிடைவாய் சிவாலயத்தில் திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகமொன்று கல்வெட்டு வடிவில் இருப்பதை 1911ஆம் ஆண்டில் கண்டு உலகுக்கு வெளிப்படுத்தினார். பின்பு 1918ஆம் ஆண்டில் இந்தியத் தொல்லியல் துறையினர் அச்சாசனத்தை படி எடுத்து 1918ஆம் ஆண்டுக்குரிய 8ஆம் எண் சாசனமாகப் பதிவு செய்தனர். அது கி.பி 12ஆம் நூற்றாண்டுக்குரிய சோழர்கால சாசனம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். அப்பதிகத்தினை 1968ஆம் ஆண்டில் காசிமடம் தேவாரம் தலமுறை (அடங்கன் முறை) எனும் நூலிலும், பாண்டிச்சேரி பிரஞ்சுக்கழகம் தி.வை. கோபாலய்யரை பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிட்ட தேவாரம் எனும் நூலிலும் வெளியிட்டுள்ளன.

சோழர் கல்வெட்டின் மூலம் புதிதாக அறியப்பட்ட திருஞானசம்பந்தரின் ஒரு பதிகத்தினைத் தன்னகத்தே கொண்டுள்ள திருவிடைவாய் எனும் தலம் திருவாரூர் மாவட்டம் பாண்டவாய் ஆற்றங்கரையில் (கொரடாச்சேரி அருகில்) அமைந்துள்ளது. இத்தலம் ஐயடிகள் காடவர் கோன் நாயனாரால் பாடப் பெற்ற பெருஞ்சிறப்புடைய ஒன்றாம். பதினொன்றாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள அவர்தம் க்ஷேத்திரத் திருவெண்பாவின் ஏழாம் பாடல்,

மாண்டுவாய் அங்காவா முன்னம் மடநெஞ்சே
வேண்டுவாய் ஆகி விரைந்தொல்லைப் - பாண்டவாய்த்
தென்னிடைவாய் மேய சிவனார் திருநாமம்
நின்னிடைவாய் வைத்து நினை,

என்று அப்பதியின் ஈசனாரை போற்றுகின்றது. கல்வெட்டில் உள்ள காழிப்பிள்ளையின் பதிகத்தினை இனிக் காண்போம்.



திருஞானசம்பந்தர் செப்புப் பிரதிமம்



திருவிடைவாயில் கல்வெட்டில் தேவாரம்

கல்வெட்டில் காணப்பெறும் பதிகம்

திருஞானசம்பந்தர் அருளியது

மறியார் கரத்து எந்தை அம்மாது உமையோடும்
பிறியாத பெம்மான் உறையும் இடம் என்பர்
பொறிவாய் வரிவண்டு தன்பூம்பெடை புல்கி
வெறியாரி மலரில் துயிலும் விடைவாயே. 1

ஒவ்வாத என்பே இழையா ஒளிமௌலிச்
செவ்வான் மதிவைத்தவர் சேர்வுஇடம் என்பர்
எவ்வாயிலும் ஏடு அலர் கோடல் அம் போது
வெவ்வாய் அரவம் மலரும் விடைவாயே. 2

கரையார் கடல்நஞ்சு அமுது உண்டவர் கங்கைத்
திரையார் சடைத் தீ வண்ணர் சேர்விடம் என்பரி
குரையார் மணியும் குளிர்சந்தமும்கொண்டு
விரையார் புனல்வந்து இழியும் விடைவாயே. 3

கூசத் தழல் போல் விழியா வருகூற்றைப்
பாசத்தொடும் வீழ உதைத்தவர் பற்றாம்
வாசக்கதிர்ச் சாலி வெண்சாமரையே போல்
வீசக் களிஅன்னம் மல்கும் விடைவாயே. 4

திரியும் புரம்மூன்னளயும் செந்தழல் உண்ண
எரிஅம்பு எய்தகுன்ற வில்லி இடம்என்பர்
கிரியும் தருமாளிகைச் சூளிகை தன்மேல்
விரியும் கொடிவான் விளி செய் விடைவாயே. 5

கிள்ளை மொழியாளை இகழ்ந்தவன் முத்தீத்
தள்ளித் தலை தக்கனைக் கொண்டு அவர் சார்வாம்
வள்ளி மருங்குல நெருங்கும் முலைச் செவ்வாய்
வெள்ளை நகையார் நடம்செய் விடைவாயே. 6

பாதத்து ஒலிபார் இடம்பாடநடம்செய்
நாதத்து ஒலியார் நவிலும் இடம்என்பர்

கீதத்து ஒலியும் கெழுமும் முழவோடு
வேதத்து ஒலியும் பயிலும் விடைவாயே. 7

எண்ணாத அரக்கன் உரத்தைநெரித்துப்
பண்ணார் தருபாடல் உகந்தவர் பற்றாம்
கண்ணார் விழவிற் கடிவீதிகள்தோறும்
விண்ணோர்களும் வந்து இறைஞ்சும் விடைவாயே 8

புள்வாய் பிளந்தான் அயன் பூமுடி பாதம்
ஒள்வான் நிலம் தேடும் ஒருவர்க்கு இடமாம்
தெள்வார் புனல்செங்கழுநீர் முகைதன்னில்
விள்வாய் நறவு உண்டு வண்டுஆர் விடைவாயே. 9

உடைஏதும்இலார் துவர்ஆடை உடுப்போர்
கிடையா நெறியான் கெழுமும் இடம்என்பர்
அடையார் புரம்வேவ மூவர்க்கு அருள்செய்த
விடையார் கொடியான் அழகுஆர் விடைவாயே. 10

ஆறும் மதியும் பொதிவேணியன் ஊராம்
மாறில் பெரும்செல்வம்மலி விடைவாயே
நாறும் பொழில் காழியர் ஞானசம்பந்தன்
கூறும் தமிழ்வல்லவர் குற்றம் அற்றோரே. 11

கோவிந்தபுத்தூர் கல்வெட்டில் பிள்ளையாரின் பதிகப்பாடல்

அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் கோவிந்தபுத்தூர் சிவாலயத்தின் இரண்டாம் திருச்சுற்றின் தென்புறசுவரில் மூன்றாம் இராஜேந்திர சோழனின் இரண்டாம் ஆண்டு கல்வெட்டுச் சாசனம் ஒன்றுள்ளது. அச்சாசனத்தின் தொடக்கமாக

ஸ்வஸ்தி ஸ்ரீ வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமும் துயர்தீர்கவே

என்ற திருஞானசம்பந்தரின் திருப்பாசுர பதிகத்தின் முதற்பாடல் ஸ்வஸ்தி ஸ்ரீ என்ற மங்கலச் சொல்லோடு கூறப்பெற்று கொடை பற்றி விவரிக்கின்றது. இடையாற்றுக்குடி கந்தாபரணனின் பெயரன் சுப்பிரமணிய சிவன் என்பான் கோலிந்த புத்தூரில் இருந்து

திருத்தொண்டத்தொகையான் திருமடம் என்ற மடத்தின் மேம்பாட்டிற்காக சில மனைகளை வாங்கிக் கொடையாக அளித்தமையை இச்சாசனம் கூறுகின்றது.

காழிப்பிள்ளையார் வழிபாடு பற்றிய கல்வெட்டுக்கள்

சோழப் பெருமன்னன் பராந்தக சோழன் காலந்தொட்டு திருக்கோயில்களில் மூவர் முதலிகளுக்கு கல்லிலோ அல்லது செம்பிலோ பிரதிமங்கள் எடுக்கப்பெற்று அவைகளுக்கு நித்திய வழிபாடுகள் செய்வதற்கும், விழாக்கால வழிபாடுகள் செய்வதற்கும் கொடையாளர் பலர் செய்த அறச்செயல்கள்பற்றி பல கல்வெட்டுக்கள் பேசுகின்றன. திருவிடைமருதூர் திருக்கோயிலில் பராந்தக சோழனின் 38ஆம் ஆண்டு (கி.பி. 945) கல்வெட்டுச்சாசனத்தில் மூவர் செப்புப்பிரதிமங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. தஞ்சாவூர் பெரிய கோயில் எனும் இராஜராஜேச்சரத்தில் மாமன்னன் இராஜராஜசோழன் காலத்தில் அக்கோயிலின் ஸ்ரீகாரியமாகத் திகழ்ந்த பொய்கை நாடுகிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் எடுத்த பிரதிமங்களில் ஒன்றாக திருஞானசம்பந்தரின் திருவுருவம் இருந்துள்ளது. அதுபற்றி கூறும் இராஜராஜேச்சரத்துக் கல்வெட்டு, "பாதாதி கேசாந்தம் இருபத்திருவிரலே இரண்டுதோரை உசரத்து இரண்டு திருக்கையுடையாராகக் கனமாக எழுந்தருளுவித்த திருஞானசம்பந்தடிகள் பிரதிமம் ஒன்று. இவர் எழுந்தருளி நின்ற இருவிரலே இரண்டு தோரை உசரத்து பத்மம் ஒன்று. இதனோடுங்கூடச் செய்த ஒன்பதிற்று விரலே இரண்டு தோரை சமசதுரத்து நால்விரல் உசரத்து பீடம் ஒன்று" – என்று விவரிக்கின்றது.

இருபத்தெட்டு விரலே நான்கு தோரை உயரத்தில் அமைந்த திருஞானசம்பந்தடிகளின் பிரதிமத்துக்கு ஆதித்தன் தென்னவன் மூவேந்த வேளானே பொன்னாலான அணிகலன்கள் அணிவித்தமையை அதே கல்வெட்டு கூறுகின்றது.

திருஞானசம்பந்தடிகளுக்கு ஒன்றரைகாசு விலையுடையதும் அரைகழஞ்சே இரண்டு மஞ்சாடி நிறையுடையதுமான உருத்திராக்ஷ சூரி ஒன்றும், இதேபோன்று ஒன்றரைகாசு விலையுடைய அரைகழஞ்சே மஞ்சாடி குன்றி எடையுடைய மற்றொரு உருத்திராக்ஷ சூரி ஒன்றும், பொன்னின் சூரி ஐம்பத்தாறும் உருத்திராக்ஷம் ஐம்பத்தாறும் உள்ள எண் கழஞ்சநாலுமஞ்சாடி குன்றி எடையுடைய இருபத்தைந்து காசு (பொன்) அணிகலன் ஒன்றும், ஒரு கழஞ்சே குன்றி எடையுடைய பொற் பூ ஒன்றும், இரு கழஞ்சே குன்றி எடையுடைய திருக்கைகாறை ஒன்றும், ஒரு கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடி எடையுடைய திருக்கைக்காறை ஒன்றும், இரு கழஞ்சு எடையுடைய திருப்பட்டிகை ஒன்றும் அளித்தான் என்பது அக்கல்வெட்டால் அறியப்பெறும் தகவல்களாகும்.

இதே திருஞானசம்பந்தர் பிரதிமத்திற்கு இராஜேந்திரசிங்க வளநாட்டு திருவாலிநாட்டு குறுவாணியக்குடியாகிய பரகேசரிபுரத்து நகரத்தார்கள் மூன்றேகால்காசு விலையுடைய ஒருகழஞ்சே ஏழுமஞ்சாடி எடையுடைய பொன்னால் செய்யப்பெற்ற படுகண்ணும் கொக்கு

வாயும் உடைய உருத்திராக்ஷ சூரி ஒன்றினை அளித்தனர் என்பதைத் தஞ்சைக் கல்வெட்டுக்களே கூறுகின்றன. மேற்குறித்த திருஞானசம்பந்தடிகளின் பிரதிமத்தைத்தான் மாமன்னர் இராஜராஜன் அந்த பெருங்கோயிலில் வைத்து வழிபட்டான் என்பது குறிபிடத் தக்கதாகும்.

திருவாரூர் திருக்கோயிலில் அனபாயன் எனும் இரண்டாம் குலோத்துங்கனால் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டு மூவர் முதலிகளுக்கு அப்பேரரசன் செய்த வழிபாடு மற்றும் நிவந்தங்கள்பற்றி எடுத்துரைக்கின்றது. ஆளுடைய பிள்ளையார்க்கு அப்பேரரசன் அளித்த நிவந்தங்கள் பற்றிய பட்டியல் மிக விரிவாகக் காணப் பெறுகின்றது. நாள் தோறும் மூன்று சந்திகளில் திருஞானசம்பந்தரின் வழிபாட்டுக்காக கேயமாணிக்கவளநாட்டு மருகல் நாட்டிலுள்ள கங்கைகொண்ட சோழ நல்லூரான சிவபாதசேகரநல்லூரை இரண்டாம் குலோத்துங்கன் அளித்தமை முதலில் கூறப்பெற்றுள்ளது. அடுத்து நாள்தோறும் மூன்று சந்திபூசைகளின் போது ஆளுடைய பிள்ளைக்கு அமுதுபடி செய்வதற்காக போனகப் பழவரிசி, பருப்பமுது, முளைப்பயிறு, கறியமுது, உப்பமுது, மிளகமுது, சிரை தேங்காய், கருவாழைப் பழம், சற்கரை, நெய்யமுது, தயிர் அமுது, உப்பிஞ்சி, பால் அமுது, அடைக்காயமுது பாக்கு, இலையமுது, தயிலம், சிதாரி, சந்தனம், விளக்குக்கு எண்ணெய் ஆகியபொருள்களை கல்வெட்டு குறிப்பிடும் அளவுகளில் அளிக்க வேண்டும் என்று கூறுகின்றது.

சிறப்புத்திருநாள் திருப்புதிதமுதுக்கு பூரிச்சேரல், சற்கரை, சிரை தேங்காய், மிளகமுது, சீரகம், கரும்பு, அடைக்காயமுதுபாக்கு, இலையமுது, திருவமுதுக்கு போனகப் பழவரிசி, பருப்பமுது, கறியமுது, உப்பமுது, மிளகமுது, சீரகம், நாடன் மஞ்சள், நெய்யமுது, கருவாழைப்பழம், தயிரமுது, பலாப்பழம் ஆகியவை கூடுதலாக அளிக்க வேண்டும் என்றும், இது போன்றே கார்த்திகைத் திருநாள் ஐப்பிகைச் சதயத் திருநாளில் எழுந்தருளும் திருநாள், பங்குனி உத்திரத் திருநாளில் எழுந்தருளும் திருநாள், ஆடித் திருவாதிரைத் திருநாளில் எழுந்தருளும் திருநாள் ஆகிய நாள்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்த வேண்டும் என்றும் அக்கல்வெட்டு விவரிக்கின்றது.

ஐப்பசி சதயம், பங்குனி உத்திரம், திருவாடித் திருவாதிரை ஆகிய மூன்று நாட்கள் பற்றி குறிப்பிடும் இடத்து **"திருவீதி பார்க்க எழுந்தருளும் திருநாள்"** – என்ற வாசகம் காணப் பெறுகின்றது. இராஜராஜ சோழனின் பிறந்த நாளான ஐப்பசி சதயநாள் தியாகேச பெருமானின் திருவடி தரிசனம் நிகழும் நாளான பங்குனி உத்திரம், இராஜேந்திர சோழனின் பிறந்தநாளான ஆடித் திருவாதிரை ஆகிய மூன்று நாள்களிலும் திருஞானசம்பந்தரின் சிறப்பு வீதியுலா ஆரூரில் நிகழ்ந்தது என்பது அக்கல்வெட்டு குறிப்பிடும் அரிய தகவலாகும்.

சீகாழியில் சம்பந்தர் வழிபாடு

அநபாயன் எனும் இரண்டாம் குலோத்துங்க சோழனின் மூன்று கல்வெட்டுக்கள் ஆளுடையபிள்ளையார் கோயிலுக்கு அளிக்கப் பெற்ற கொடைகள் பற்றிக் கூறுகின்றன. மூன்றாம் ஆட்சியாண்டு (கி.பி. 1136) கல்வெட்டில் ஆளுடைய பிள்ளையாருக்கு அளிக்கப்பெற்ற நிலக் கொடை பற்றி விவரிக்கப்பெற்றுள்ளது. நான்காம் ஆட்சியாண்டுக் (கி.பி.1137) கல்வெட்டில் ஆளுடையார் கோயிலில் முன்பு நிறுவப் பெற்ற திருவுருவங்கள் சிதைவு பெற்றமையால் புதியவை எடுக்கப் பெறுவதற்காக அளிக்கப்பட்ட நிலங்கள் பற்றிப் பேசுகின்றது. மேலும் அத்திருக்கோயிலில் எழுதிவைக்கப் பெற்றிருந்த திருமுறைகளைப் பூசித்துக் கண்காணிக்கத் **"தமிழ் விரகர்"** ஒருவர் நியமிக்கப் பெற்றதாகவும், அவர் திருமுறை ஏடுகள் பழுதடையாமல் பாதுகாத்துக் கொள்ளுதலும், பழுதடையின் அவற்றை எழுதிப் புதுப்பிப்பதும், அவற்றை பூசிப்பதுமாகிய கடமைகளைச் செய்ய வேண்டும் என்றும் அவரது வேண்டுகோளுக்காக நிலம் அளிக்கப்பட்டதாகவும் கூறுகின்றது. ஆளுடையார் பிள்ளையார் கோயிலிலேயே காணப்பெறும் பத்தாம் ஆட்சியாண்டு (கி.பி.1144) கல்வெட்டில் ஜயங் கொண்ட சோழ வளநாட்டு ஆக்கூர் நாட்டுத் தலைச்சங்காட்டில் மும்முடிச் சோழன் பேரம்பலம் எனும் பொது மன்றத்தில் சபையார் கூடி திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாற்போனகத்திற்கு நிலம் விட்ட செய்தி சாசனமாக காணப்பெறுகின்றது.

சம்பந்தர் கோயிலில் காணப்பெறும் இரண்டாம் இராஜராஜ சோழனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டு (கி.பி. 1158)க் கல்வெட்டில் திருக்கழுமலத்து ஆளுடைய பிள்ளையார் கோயிலில் உள்ள மங்கையர்க்கரசி நாச்சியார் கோயில் வழிபாட்டிற்காக வீரசோழநல்லூர் பரிகிரஹத்து உறுப்பினர்கள் விற்றுக் கொடுத்த நிலம் பற்றி கூறப் பெற்றுள்ளது. தற்போது இக்கோயிலில் மங்கையற்கரசியார் சன்னதி காணப் பெறவில்லை எனினும் இரண்டாம் இராஜராஜன் காலத்தில் ஆளுடைய பிள்ளையார் வழிபாட்டோடு சோழ அரச குலத்தோன்றுலும், பாண்டியரின் பெருந்தேவியுமான மங்கையர்க்கரசியாருக்குச் சிறப்பு வழிபாடு நடைபெற்றது என்பது இச்சாசனத்தால் அறியப்பெறும் செய்தியாகும்.

மூன்றாம் குலோத்துங்கனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1181) குறிக்கப் பெற்றுள்ள சம்பந்தர் திருக்கோயிலில் காணப்பெறும் கல்வெட்டில் திருப்பதிக இசை பாடுவார்க்கும், பயிற்றுவார்க்குமாக அளிக்கப்பெற்ற நிலக் கொடை பற்றிக் கூறப் பெற்றுள்ளது. இக் கல்வெட்டின் மூலம் இசையோடு பதிகம் பாடுதல், பயிற்றுவித்தல் ஆகிய இருபணிகளுக்கும் அறக்கொடைகள் நல்கப் பெற்றதை அறிகிறோம்.

இம்மன்னவனின் ஆறாம் ஆட்சியாண்டினைக் (கி.பி. 1184) குறிப்பிடும் கல்வெட்டொன்று பிரமபுரீசர் கருவறையின் வழிபாட்டிற்காக உய்யகொண்டார் வளநாட்டு மாத்தூர் நாட்டு மாத்தூரில் நிலம் அளிக்கப் பெற்றதாகவும், குலோத்துங்க சோழனின் அடுக்களைப் பெண்டுகளில் ஒருத்தியான உய்யவந்தான் ராஜி விச்சாதரி என்பாள் ஆளுடைய

பிள்ளையின் திருவுருவத்தினை எடுப்பித்ததாகவும் கூறுகின்றது. அத்திருவுருவம் இத்திருக் கோயிலின் வழிபாட்டில் உள்ள ஆளுடைய பிள்ளையின் இரண்டு செப்புத் திருமேனிகளில் ஒன்றான கையில் பால்கிண்ணம் ஏந்திய திருமேனியாக இருக்கலாம். சாதாரண சமையல் பணிபுரிந்த ஒரு பெண் செய்த இந்த அறப்பணி போற்றுதற்குரிய ஒன்றாம்.

திருஞானசம்பந்தருக்கு தில்லையில் பொன் பிரதிமம்

தில்லைப் பெருங்கோயிலில் முதலாம் குலோத்துங்கனின் உயர்நிலைத் தலைவர்களுள் ஒருவனான நரலோக வீரன் எனும் மணவிற்கூத்தனான காலிங்கராயன் பலதிருப்பணிகளைச் செய்வித்து அவற்றை அத்திருக்கோயிலில் கல்வெட்டுப் பாடல்களாக எழுதி வைத்துள்ளான் என்பதை முற்பகுதியில் கண்டோம். அவ்வாறு காணப்பெறும் கல்வெட்டுப் பாடல்கள் வரிசையில் உள்ள வடமொழிப் பாடல்களில் ஒன்று,

"மலைமகளின் ஸ்தனத்திலிருந்து பாலைப் பருகிக் கலைமகளின் அருளைப் பெற்று ஆனந்தக் கூத்தாடி ஸ்ரீகண்டன் புகழைப் பாடிய ஆளுடைய பிள்ளையாரான திருஞான சம்பந்தப் பெருமானுடைய பொன் பிரதிமத்தை நிறுவி அதற்குப் பாயசம் நிவேதிக்க (நரலோக வீரன்) ஏற்பாடு செய்தான்" என்று கூறுகிறது.

"யத்வாணீ கிரிஜாகுசப் பிரகளிதம்
பித்வா ப்ரந்ருத்தம் பயோ
மாதுர்யாத திகாம் ததோ விகலித
ஸ்ரீகண்ட கீர்த்திக் கிரமா
மூர்த்திம் தஸ்ய த்ருசாம் மஹத்சவகரீம்
காந்யா குமாரஸ்ய தாம்
க்ருத்வா யாம்ச சாதகும்ப கழதம்
தஸ்யாதி சத் பாயசம்டட"

என்பது அச்சாசனப் பாடலாகும்.

பொன்னால் பிரதிமம் எடுத்தும் திருஞானசம்பந்தரின் கோயிலை பொற்றகடுகளால் மேய்ந்தும், அவருக்குப் பாயசம் நிவேதனம் செய்தும், ஞானக்குழந்தையின் திருப்பதிகம் முட்டாமல் கேட்கச் செய்தும் வழிபாடு செய்த நரலோக வீரனின் புகழ் தில்லைக் கோயில் உள்ளளவும் நிலைத்து நிற்கும்.

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் காணப்பெறும் விக்கிரம சோழரின் நான்காம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1122) கல்வெட்டில் பல்லவதிரையர் என்பவர் திருவேகம்ப முடையாரின் அர்த்தசாம பூசைக்காகவும், பாலாற்றிலிருந்து திருமஞ்சன நீர்கொண்டு வருவதற்காகவும், அவரே எடுப்பித்தச் சீகாழி ஆளுடையபிள்ளையாரின் அமுதுபடிக்காகவும்

குலோத்துங்க சோழர் ஆட்சிக்காலத்தில் அளித்திருந்த நிலத்தின் வருவாயை அதனை அனுபவித்த இருவர் அளிக்காததால், குலோத்துங்க சோழதேவரின் 45ஆம் ஆண்டு (கி.பி. 1115) முதல் செயங்கொண்ட சோழமண்டலத்துத் தாமற்கோட்டத்துத் திருக்காமணி சதுர்வேதி மங்கலத்து மகாசபையோர் தாங்கள் அந்நிலத்தை வாங்கி அவ்வறக்கொடையைச் செயல் படுத்த ஒப்புக்கொண்ட சாசனம் விவரிக்கப்பெற்றுள்ளது. இக்கல்வெட்டுச் சாசனத்தால் காஞ்சி ஏகாம்பர நாதர் கோயிலில் முதலாம் குலோத்துங்க சோழனின் காலத்தில் (கி.பி. 1070 – 1125) சீகாழி ஆளுடைய பிள்ளையாரான திருஞானசம்பந்தப் பெருமானுக்குச் சோழமண்டலத்தைச் சார்ந்த பல்லவதிரையர் என்பவர் உருவச்சிலை எடுத்து வழிபட்டதோடு, நாட்பூஜைகளுக்காகவும், பாலாற்று நீரால் திருமஞ்சனம் செய்யவும் நிலக்கொடை அளித்தது பற்றி அறியமுடிகிறது.

திருக்கோட்டியூர்

சிவகங்கை மாவட்டம் திருக்கோட்டியூர் சர்வேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள திருபுவன சக்கரவர்த்தி ஜடாவர்மன் முதலாம் குலசேகர பாண்டியனின் மூன்றாம் ஆண்டுக் (கி.பி. 1193) கல்வெட்டில் அம்மன்னனின் அரசாணை குறிக்கப்பெற்றுள்ளது. அதன்படி சூரதேவநல்லூரான திருஞானசம்பந்த நல்லூர் எனும் ஊரினை வடகளவழிநாட்டு அழகை மாநகர் சூரதேவ ஈஸ்வரமுடைய நாயனாருக்கு முற்றூட்டுத் தேவதானமாக வழங்கப்பட்டது என்றும் அவ்வருவாய் கொண்டு அக்கோயிலில் மங்கையர்க்கரசியார் எனும் பெண் ஒருத்தி எடுப்பித்த ஆளுடைய பிள்ளையார் திருமேனிக்குப் பூஜைகளும், நிவேதனங்களும் செய்தல் வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றது.

திருவிடைமருதூர்

திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி திருக்கோயிலில் முதலாம் பராந்தகசோழன் காலத்திலேயே மூவர் முதலிகளுக்கு பிரதிமங்கள் எடுக்கப் பெற்றிருந்ததையும் பின்பு மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் ஆளுடைய பிள்ளையார்க்கும் (திருஞானசம்பந்தர்) ஆளுடைய நம்பிக்கும் (சுந்தரர்) அர்சனாபோக இறையிலி நிலம் அளித்ததையும் கூறும் கல்வெட்டுக்கள் உள்ளன. மூன்றாம் குலோத்துங்கனின் 28 ஆவது ஆட்சியாண்டின் 114 ஆம் நாளில் வரையப்பெற்ற மற்றொரு கல்வெட்டு அப்பேரரசனின் உயர்நிலை அலுவலனான வாணாதிராஜன் என்பவன் எழுந்தருளுவித்த ஆளுடைய பிள்ளையாரின் பூஜைகளுக்காகவும், வைகாசிமாதத்துத் திருநாளில் எழுந்தருளுவிப்பதற்கும் குலோத்துங்க சோழனே அளித்த அறக்கொடை பற்றி விவரிக்கின்றது.

அர்ச்சனாபோகமாக 10 வேலி நிலத்தை இறையிலியாக (வரி இல்லாமல்) மூன்றாம் குலோத்துங்கன் வழங்கியமையும், அந்நிலங்கள் முறையே ஜெயங்கொண்ட சோழவள நாட்டில் விக்கிரம சோழன் சூரலூர் எனும் குலோத்துங்க சோழன் பூண்டியில் நான்குவேலியும் விளைநாட்டு விருதராஜ பயங்கரநல்லூரில் இருவேலியும், அதே நாட்டிலுள்ள அரிந்தவ

நல்லூரில் நான்கு வேலி நிலமும் உள்ளன என்றும், அதில் விளையும் நெல்கொண்டு நாட் பூசைகளும், வைகாசி மாதத்துத் திருநாளும் நிகழ்த்த வேண்டும் என்றும் கூறப்பெற்றுள்ளது.

திருமலை

சிவகங்கை மாவட்டம் திருமலை எனும் ஊரில் உள்ள சிவாலயத்து கல்வெட்டுக்கள் இரண்டில் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஜடாவர்மன் குலசேகர பாண்டியனின் ஐந்தாம் ஆட்சியாண்டு (கி.பி. 1195) குறிக்கப்பெற்றுள்ளது. முதல் கல்வெட்டில் திருவெண் காட்டு நங்கை எனும் தேவரடியார் பெண்ணொருத்தி தனது ஊரான அழகை மாநகரில் உள்ள குன்றத்தூர் நாயனார் கோயிலில் திருஞானசம்பந்தப் பெருமானுக்குத் திருவெடுத்துக்கட்டி எனப் பிரகார மண்டபம் எடுத்த செய்தி கூறப்பெற்றுள்ளது.

இரண்டாம் கல்வெட்டில் திருமறை நாச்சியார் எனும் திருஞானசம்பந்த நங்கை என்பாள் அத்திருக்கோயில் எடுப்பித்த திருஞானசம்பந்தரின் பூசனை, நிவேதனங்களுக்காகத் தென்பரப்பு நாட்டு இராஜேந்திர சோழச் சதுர்வேதி மங்கலம் எனும் ஊரின் நிலம் அளித்த செய்தி கூறப் பெற்றள்ளது.

தலைஞாயிறு

மயிலாடுதுறை வட்டம் தலைஞாயிறு எனும் ஊரில் உள்ள குற்றம் பொறுத்தீஸ்வரர் திருக்கோயிலிலுள்ள மூன்றாம் இராஜராஜசோழனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1221) பார்வதி பாகர் கோயிலான அத்திருக்கோயிலிலுள்ள திருஞானசம்பந்தப் பெருமான் திருமேனிக்கு நாள்தோறும் காலை சந்தியில் பூசனை செய்ய மாதேவபட்டன் என்பான் வைத்த பொன் பற்றி கூறுகின்றது.

ஆச்சாள்புரம் (நல்லூர்ப்பெருமணம்) கல்வெட்டில் சொக்கியார்

ஸ்ரீகைலாசம் என அழைக்கப்பெறும் சீகாழி வட்டம் நல்லூர்பெருமணம் திருக் கோயிலில் காணப்பெறும் மூன்றாம் இராஜராஜசோழன் காலத்துக் (கி.பி. 1218) கல்வெட்டில் இராஜாதிராஜ வளநாட்டு வன்னையூர் நாட்டு பஞ்சவன்மாதேவி எனும் குலோத்துங்க சோழச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோர் ஸ்ரீகைலாசம் எனும் அத்திருக்கோயிலில் உள்ள ஆளுடைய பிள்ளையார் மற்றும் அவரது துணைவியார் சொக்கியார் ஆகியோர் திருமேனி களுக்கு அமுது நிவேதனத்திற்காகவும், ஆயிரத்தெண்ணூற்றுவன் சந்தி பூஜையின் போது அபூர்விகளுக்கு உணவிடுவதற்காகவும் வைத்த நிலக்கொடை பற்றிக் குறிப்பிடுகின்றது.

நல்லூர்ப் பெருமணத்தில்தான் திருஞானசம்பந்தருக்குத் திருமணம் நிகழ்ந்த வரலாறு கூறப்பெறுகின்றது. ஞானப்பிள்ளையார் கைத்தலம் பற்றிய மங்கையின் பெயர் "சொக்கி" என்பது இக்கல்வெட்டால் மட்டுமே அறியப்படுகின்ற செய்தியாகும்.

கோட்டூர்

கும்பகோணம் வட்டம் கோட்டூர் திருக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள மூன்றாம் இராஜராஜ சோழன்காலத்துக் கல்வெட்டில் (கி.பி. 1225) நாகமங்கலமுடையார் அம்பலன் கோயில் கொண்டான் கொழுந்தாண்டார் என்பவர் எடுப்பித்த திருஞானம் பெற்ற பிள்ளையார் திருக்கோயில் பூசைகளுக்காகச் சிலர் அளித்த பொற்காசுகள் பற்றிக் கூறப்பெற்றுள்ளது.

இதே திருக்கோயிலில் காணப்பெறும் மூன்றாம் இராஜராஜ சோழனின் பதினெட்டாம் ஆட்சியாண்டு (கி.பி. 1234) கல்வெட்டில் அத்திருக்கோயிலில் கொழுந்தாண்டார் என்பவர் எடுப்பித்த திருஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளையார் திருக்கோயிலுக்கு அளிக்கப் பெற்ற நிலக்கொடை பற்றி விவரிக்கின்றது.

அவளிவநல்லூரில் தம்பரிசுடையார்

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் அவளிவநல்லூர் சாட்சிநாதர் திருக்கோயிலில் உள்ள மூன்றாம் இராஜராஜ சோழனின் பத்தாம் ஆட்சியாண்டு (கி.பி. 1226) குறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுச் சாசனத்தில் தம்பரிசுடையான் ஆதிச்சதேவன் எனும் அமரகோன் என்பான் தன்னுடைய கொடையாக நித்தவிநோத வளநாட்டு, ஆவூர்க்கூற்றத்து அவளிவநல்லூர் தம்பரிசுடைய நாயனார் திருக்கோயிலில் விநாயகர், நாச்சியார், ஆட்கொண்ட நாயகர், திருபள்ளியறைநாச்சியார், ஆளுடையபிள்ளையார் ஆகிய செப்புத்திருமேனிகளை எடுப்பித்தான் என்று கூறப்பெற்றுள்ளது.

தெய்வத்திருமேனிகளோடு திருஞானசம்பந்தரின் பிரதிமத்தையும் எடுத்து அத்திருக்கோயிலுக்குப் பதிகம் பாடியருளிய அவரைச் சிறப்பித்து வழிபட்டான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் திருஞானசம்பந்தரின் திருஅவளிவநல்லூர் பதிகத்தின்

"கொம்பு இரிய வண்டு உலவுகொன்றை, புரிநூலொடு குலாவித்
தம்பரிசினோடு சுடுநீறு தடவந்து இடபம் ஏறி,"

என்ற அடிகளில் காணப்பெறும் "தம்பரிசு" என்ற சொல்லாட்சியைக் கொண்டு இச்சாசனத்தின் கொடையாளர், தம்பரிசுடையார் என்று தம் பெயரையும், தம்பரிசுடைய நாயனார் என்று இறைவன் பெயரையும் குறிப்பிட்டிருப்பது அவ்வூர் திருப்பதிகத்தின் மேலுள்ள ஈடுபாடே என்பதில் ஐயமில்லை.

திருவடத்துறை

தென்ஆர்க்காடு மாவட்டம் விருத்தாசலம் வட்டத்திலுள்ள திருநெல்வாயில் அரத்துறை எனும் தலம் தற்காலத்தில் திருவடத்துறை என்றும் திருவட்டுத்துறை என்றும் அழைக்கப் பெறுகின்றது. அங்குள்ள திருக்கோயிலில் காணப்பெறும் மூன்றாம் இராஜராஜசோழன் காலத்துக் (1235 கி.பி.) கல்வெட்டில் சேக்கிழான் பாலறாவாயன் எனும் களப்பாளராயன்

என்பார் அத்திருக்கோயிலில் உள்ள ஆளுடைய பிள்ளையாரின் பிரதிமத்தை வைகாசி, மாசி மாதங்களில் நிகழும் திருவிழாக்களின் போது திருமாறன் பாடிக்கு எடுத்துச் செல்லும் போது நிவேதனங்கள் படைப்பதற்காக அளித்த கொடை பற்றி விவரிக்கின்றது.

திருவாய்மூர்

மூன்றாம் இராஜராஜ சோழரின் 29ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1244) வெட்டப்பெற்ற கல்லெழுத்துச் சாசனம் ஒன்று நாகை மாவட்டத்துத் திருவாய்மூர்த்திருக்கோயிலில் காணப் பெறுகின்றது. அக்கல்வெட்டு நெய்தல்வாயில் எனும் ஊரினனாகிய பத்தரைப் பணிவார் எனும் ஆட்கொண்டவல்லி என்பான் தான் அத்திருக்கோயிலில் எடுப்பித்த திருஞானம் பெற்ற பிள்ளையாருக்கு பூசனைகளும் அமுதுபடிகளும் செய்ய நிலக்கொடை அளித்தார் என்று கூறுகின்றது. அதற்கான நிலத்தை 4000 அன்றாடு நற்காசுக் கொடுத்துத் திருவாய் மூருடையார் திருக்கோயில் நிர்வாகிகளிடமிருந்து பெற்றார் என்பதும், அவருக்குப் பரமேஸ்வர சதுர்வேதிமங்கலம் எனும் ஈசனூரில் காணியாக நிலம் இருந்தது என்றும் விவரிக்கப்பெற்றுள்ளது.

திருவிடைவாய்

திருவாரூர் மாவட்டம் திருவிடைவாய் (திருவிடைவாசல்) திருக்கோயிலில் திருஞானசம்பந்தப் பெருமானாரின் திருப்பதிகம் கல்வெட்டாகப் பொறிக்கப் பெற்றுள்ளது. அதே திருக்கோயிலில் மூன்றாம் இராஜேந்திர சோழனின் 7ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1253) கல்வெட்டொன்று காணப்பெறுகின்றது. அக்கல்வெட்டில் விடையபுரம் எனும் விருதராஜ பயங்கரபுரத்து வணிகர்கள் இராஜேந்திர சோழனின் 6ஆம் ஆட்சியாண்டில் எடுப்பித்தச் சொக்கக்கூத்தர் (நடராஜர்), நாச்சியார், திருஞானம் பெற்ற பிள்ளையார் ஆகிய திருமேனிகளின் வழிபாடு மற்றும் அமுதுபடிகளுக்காக அத்திருக்கோயில் பண்டாரத்தில் முதலீடு செய்த காசுகள் பற்றிக் கூறுகின்றது.

திருஞானசம்பந்தப் பெருமானை திருஞானம் பெற்ற பிள்ளை என்றழைக்கும் மரபு சோழர்களின் இறுதிக் காலத்தில் நிலவியதை திருவிடைவாய் கல்வெட்டு மட்டுமின்றி திருவுசாத்தானம் (கோயிலூர்) தலைஞாயிறு கல்வெட்டுக்களும் எடுத்துரைக்கின்றன.

கோயிலூர்

திருஞானம் பெற்ற பிள்ளையார் என்றும், கூத்தாடுநாயனார் என்றும் கோயிலூர் கல்வெட்டுக்கள் தமிழாகரரைக் குறிப்பிடுகின்றன.

திருநள்ளாறில் கடலாடுதலும் பண் இசைத்தலும்

திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோயிலிலுள்ள சடையவர்மன் ஸ்ரீவல்லபனின் மூன்றாம் ஆண்டு (கி.பி. 1311) கல்வெட்டில் திருஞானசம்பந்தப் பெருமான் திருமேனியைக் கடலில் (காரைக்கால்) தீர்த்தமாட எழுந்தருளுவித்த செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. அபிமுக்த

நாயனார்க் கோயிலில் நடைபெறும் விழாநாட்களில் அக்கோயில் பெருமானை உலாவாக எழுந்தருளுச் செய்வது போலவே சுந்தரபாண்டிய பிரமாதிராயர் எழுந்தருளுவித்த திருஞானசம்பந்தரையும் உலாவாக எழுந்தருள செய்யவும், கடலுக்குத் தீர்த்தமாட எழுந்தருளச் செய்யவும், திருநள்ளாற்றைச் சேர்ந்த நாடுடைய நாயகப் பேரிளமையார் என்னும் குழுவினர் ஏற்பாடு செய்தனர். திருஞானசம்பந்தப் பெருமானை உலாவாக எழுந்தருளச் செய்யும் போது ஸ்ரீபாதம் தாங்கிச் செல்வதற்கு எட்டு ஆட்களையும் பண் இசைப்பார் இருவரையும் திருவிளக்கு எடுத்துச் செல்வதற்கு தேவையான ஆட்களையும் குறைவில்லாமல் தாங்களே கொடுத்துத் திருஉலா எழுந்தருளச் செய்வதாக சமய பண்டாரத்தார்க்கு அப்பேரிளமையார் உறுதி அளித்ததைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

இக்கல்வெட்டு திருஞானசம்பந்தரை "நாயனார் சம்பந்தப்பெருமான் நாயனார்" – என்று குறிப்பிடுகின்றது. திருவுலா போகும்போது இருவர் தேவாரம் பாட நியமிக்கவேண்டும் என்பதனை "பண் எடுக்கப்பேர் இரண்டும்" என்றும் கூறுகின்றது.

இதே கோயிலிலுள்ள நான்காம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1322) கல்வெட்டு அபிமுக்தேஸ்வரமுடைய நாயனார்க்கு வேண்டும் அமுதுபடி, சாத்துபடி உள்ளிட்ட தேவைகளுக்கும், மாசித் திருநாளில் நாயனார் சம்பந்தப் பெருமான் நாயனாரைத் திருக்கடலுக்குத் தீர்த்தமாட எழுந்தருளச் செய்யவும் தெளிச்சேரியில் நிலக்கொடை வழங்கப் பெற்றதை விவரிக்கின்றது.

பாண்டியப் பேரரசர் காலக்கொடையால் திருநள்ளாற்றிலிருந்து புறப்பட்டு காரைக்கால் அருகே கடற்றுறையில் திருஞானசம்பந்தப் பெருமானுக்குக் கடல் நீராட்டல் நிகழ்ந்தது போன்றே திருவெண்காடு கோயிலிலிருந்து நாயன்மார் மூவருடைய திருமேனிகளுக்கும் காவிரி கடலோடு சங்கமிக்கும் துறையில் (பூம்புகாரில்) கடல் நீராட்டல் நிகழ்ந்தது என்ற செய்தி மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டால் அறிய முடிகிறது.

திருவாலவாயில் வாது செய்த வாரணமுடையார் கோயில்

பாண்டி நாட்டை கி.பி. 1297 முதல் 1342 வரை ஆட்சி செய்தவன் மூன்றாம் சடையவர்மன் வீரபாண்டியன் என்பானாவான். இவனுடைய 21ஆம் ஆட்சியாண்டான கி.பி. 1318ஆம் ஆண்டில் (ஜனவரி 20ஆம் நாள்) மதுரையில் திகழ்ந்த வாதுசெய்த வாரண முடையார் கோயில் எனும் திருஞானசம்பந்தப் பெருமானாரின் கோயிலுக்காக அளிக்கப் பெற்ற நிவந்தம் பற்றி மதுரைக் கோயிலிலுள்ள கல்வெட்டொன்று விவரிக்கின்றது.

வாதுசெய்த வாரணீஸ்வரமுடைய நாயனார் கோயில் கைக்கோளரில் மாதேவர் அழகிய சொக்கனாரான சுந்தரபாண்டிய சோழ கோனார் என்பவருக்கு மதுரோதய வளநாட்டு மாடக்குளக்கீழ்ப் பிரமதேயம் கொடிமங்கலமான முடித்தலை கொண்ட பாண்டிய சதுர்வேதி மங்கலத்து மகாசபையார் துவரன் மாத்தூர் நீர் நக்கலுக்கு மேற்கும், நாகமலைக்கு வடக்கும்,

வையையாற்றுக்குத் தெற்கும் வல்லபப்பிலாற்றுக்கு கிழக்கும் அமைந்த மாத்தூர் எனும் ஊரினை விலைபேசி விற்றதைக் குறிக்கின்றது.

இதே கோயிலிலுள்ள மூன்றாம் சடையவர்மனின் 21 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் (கி.பி. 1318) வாது செய்த வாரணமுடையார் கோயிலுக்காக கைக்கோளன் ஒருவனிடமிருந்து நூறு புதுக்குளிகை பணம் பெற்றுக் கொண்டு மதுரோதய வளநாட்டு மாடக்குளக்கீழ்ப் பிரமதேயம் கொடிமங்கலத்து மகாசபையார் நிலம் விற்றுக் கொடுத்தது கூறப் பெற்றுள்ளது.

இவ்விரு கல்வெட்டுக்களும் திருஞானசம்பந்தப் பெருமானருக்காக எடுக்கப் பெற்றிருந்த திருக்கோயிலை 'வாது செய்த வாரணீஸ்வரமுடைய நாயனார் கோயில்' வாது செய்த வாரணமுடைய நாயனார் கோயில் என்றும் குறிப்பிடுகின்றன. சங்கற்ப நிராகரணம் எனும் சாத்திர நூல் திருஞானசம்பந்தரின் திருப்பெயராக " வாது வென்ற பூசுரன்" என்ற பெயரினைக் குறிப்பிடுகின்றது. ஒட்டக்கூத்தரோ தக்கயாகப் பரணியில் ஞானசம்பந்தருக்கு சுட்டியுள்ள பதினைந்து திருநாமங்களில் ஒன்றாக "வைதீகவாரணம்" என்ற பெயரினைக் கூறியுள்ளார். இவ்விரண்டு பெயர்களில் காணப்பெறும் சொற்களின் கூட்டாக "வாது செய்த வாரணமுடையார்" என்ற பெயர் பாண்டி நாட்டு மதுரையம்பதி கல்வெட்டில் காணப்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். இக்கல்வெட்டுக்களால் மதுரையில் சமணர்களை வாதில் வென்ற ஞானப்பிள்ளையாருக்கு பாண்டியர்கள் இப்பெயரினைச் சூட்டி மகிழ்ந்ததோடு கோயில் எடுத்தும் போற்றினர் என்பதறியலாம்.

மதுரையில் அமணர்களுடன் ஞானசம்பந்தர் வாது செய்த போது அனலில் இட்ட ஏடு திருநள்ளாற்றுப் பதிகமாகும் (பச்சைப் பதிகம்). அது போலவே ஏட்டைத் தீயிலிடும் முன்பு திருநள்ளாற்று ஈசனைப் போற்றும் பதிகத்தினையே பாடினார். திருநள்ளாற்றுக் கோயிலில் உள்ள கி.பி. 12 ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த சோழர்கால கல்வெட்டொன்றில் அங்கு திகழ்ந்த வாது செய்வாரணன் திருநந்தவனம் பற்றிய குறிப்பு காணப் பெறுகின்றது.

இவ்வாறு தமிழகம் முழுதுமுள்ள பல சிவாலயங்களில் காணப்பெறும் எண்ணற்ற கல்வெட்டுக்கள் திருஞானசம்பந்தப் பெருமானாருக்குப் பல்வேறு காலகட்டங்களில் பலராலும் செய்யப் பெற்ற கொடைகளை எடுத்துரைக்கின்றன. விரிவு அஞ்சி அவை முழுதும் உரைக்கப்பெறவில்லை.

தேவாரம் எனும் சொல் வழக்கு

அண்மைக்காலமாக திருஞானசம்பந்தர் பாடிய பனுவல்களை திருக்கடைக்காப்பு என்றும், நாவுக்கரசரின் பாடல்களை தேவாரம் என்றும், ஆரூரரின் இன் தமிழ்ப்பாக்களை திருப்பாட்டு என்றும் கூறுவதை மேடைப் பேச்சாளர்கள் வழக்கமாகக் கொண்டு வருகின்றனர். இக்கூற்று ஆதாரமற்ற ஒன்றாம். மூவர் முதலிகள் தாம் யாத்த பாடல்களை எந்த ஒரு இடத்தும் தேவாரம் என்ற பெயரால் குறிக்கவில்லை. அவர்களின் வரலாற்றை

எடுத்துரைத்த சேக்கிழார் பெருமான் கூட திருத்தொண்டர் புராணத்துள் எந்தவொரு இடத்தும் மூவர் தம் பாடல்களைத் தேவாரம் எனக் கூறவில்லை. மூவர் வாழ்ந்த பல்லவர்காலத்துப் பின்பு சோழப் பேரரசர்கள் காலத்தும் அப்பனுவல்களைத் திருப்பதிகம் என்றே குறிப்பிட்டனர் என்பதை இலக்கியங்களும், கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் செப்புகின்றன.

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் மலர்ந்த ஏகாம்பர நாதர் உலா எனும் நூலில்,

"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரம் செய்த திருப்பாட்டும்"

என இரட்டைப் புலவர்கள் கூறியுள்ளனர். அதே நூற்றாண்டில் மலர்ந்த குலசை உலா "நாவாரத் தேவாரம் நண்ணு திருவாசகமும் பாவணர் பண்ணில் படித்துவர" – என்று மூவர் திருமுறைகளையும் தேவாரம் எனக் குறிப்பிடுகின்றது. பதினாறாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற அருணைக்கலம்பகத்தில்

"வாய்மை வைத்த சீர்த் திருத்தேவாரமும் திருவாசகமும்
உய்வைத்தரச் செய்த நால்வர்"

– என சைவ எல்லப்பநாவலர் குறிப்பிட்டுள்ளார். இலக்கியங்களைப் பொறுத்தவரை திருப் பதிகங்களைத் தேவாரம் எனும் சொல்லால் குறிப்பதும், நால்வர் வழிபாடு பற்றிப் பேசுவதும் கி.பி. 15ஆம் நூற்றாண்டிலிருந்து தான் வழக்கிற்கு வந்தன என்பதறிய முடிகின்றது.

பண்டு தமிழகத்தின் மடாலயங்களிலும் மன்னர் தம் கோயில்களாம் அரண்மனைகளிலும் ஆன்மார்த்த மூர்த்திகளை வழிபாடு செய்ய அமைக்கப்பெற்ற சிறு கோயில்களைத் "தேவாரம்" என்ற சொல்லால் குறிப்பிட்டனர். இல்லங்களில் ஆன்மார்த்த மூர்த்தி பூசிக்கப்பெறுகின்ற சிறு அறையோ, அல்லது அம்மூர்த்தி திகழும் பூசைப் பெட்டியோ தேவாரம் என்ற சொல்லால் குறிக்கப்பெற்றமையை ஈடுபோன்ற வைணவ வியாக்கியான நூல்களால் அறியலாம். அத்தகு தேவாரங்களில் பணிபுரிந்த பிரம்மச்சாரிகளை தேவாரமாணி என்றும், நிருவாகிகளை "தேவார நாயகஞ் செய்வார்" என்றும் சோழர் கல்வெட்டுக்கள் கூறா நிற்கின்றன.

கருப்பங்குன்று எனும் இடத்தில் கி.பி. 7 – 8 ஆம் நூற்றாண்டுகளில் கற்பாறை ஒன்றில் அமைக்கப்பெற்ற சிறு கோயில் ஒன்றினை அங்குள்ள கல்வெட்டு "ஸ்ரீ சதுர்விம்சதி சதிஸ்தாவக வாசுதேவ சித்தாந்த படாரர் செய்வித்த தேவாரம்" எனக் குறிப்பிடுகின்றது. அதுபோன்றே திருவண்ணாமலை அருகிலுள்ள சோழபாண்டிபுரத்தில் காணப்பெறும் ஒரு சமண சிறு கோயிலில் "ஸ்வஸ்தி ஸ்ரீவேலி கொங்கரையர் புத்தடிகள் செய்வித்த தேவாரம்" – என்ற கல்வெட்டு காணப்பெறுகின்றது. இக்கல்வெட்டு கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். பல்லவர் காலத்தும் சோழர் காலத்தும் தனி நபர்களுக்காக எடுக்கப்பெற்ற சிறுகோயில்களே (ஆன்ம பூசை செய்யும் இடம்) தேவாரம் என்ற சொல்லால் குறிக்கப் பெற்றன.



திருக்கோளிலி திருக்கோயிலின் கல்வெட்டு உள்ள முன்மண்டபம்

கல்வெட்டில் தேவாரம் என்ற சொல் உள்ள இடம்

சோழர் கால கல்வெட்டுச் சாசனங்கள் பல அத்தகு தேவாரமாம் சைவ சிற்றாலயங்களில் நிகழும் பூசனைகளின் போது திருப்பதிகம் பாடுவதை சிறப்பாக மேற்கொண்டொழுகினர் என்பதைத் தெளிவுற உரைக்கின்றன. "நம்முடைய தேவாரத்தில் திருப்பதிகம் பாடும் பெரியான் மறைதேடும் பொருளான அகளங்கப்பிரியனுக்கு" என்பன போன்ற கல்லெழுத்து வரிகள் பலவற்றை நாம் காணமுடிகின்றது.

திருப்பதிகம் விண்ணப்பம் செய்வதைத் தேவாரம் பாடுதல் எனக் கூறும் வழக்கு பற்றி, தமிழகத்தில் காணப்பெறும் மூன்று கல்வெட்டுகள் துலக்கம் தருகின்றன. அவற்றுள் முதல் கல்வெட்டு திருவொற்றியூர் திருக்கோயிலிலுள்ளது. மூலவர் கருவறையின் மேற்கு திசையில் அமைந்த அந்த கல்வெட்டு கி.பி. 1063இல் முடிசூடிய சோழப் பெருவேந்தன் வீரராஜேந்திர சோழனின் சாசனமாகும். இவன் கங்கைகொண்ட இராஜேந்திர சோழனின் புதல்வனாவான். திருவொற்றியூர் கோயிலில் மாணிக்கவாசகரின் திருவெம்பாவையையும், தேவார திருப்பதிகங்களையும் பாடி ஆடும் நங்கையர்க்கும் என சிங்க விஷ்ணு சதுர் வேதிமங்கலம் (மணலி) எனும் ஊரில் 60 வேலி நிலம் அளித்து அதன் வருவாய் கொண்டு மேற்குறித்த பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டதை விவரிக்கின்றது. தமிழகத்தில் இக்கல்வெட்டுதான் மூவர்தம் திருப்பதிகங்களை முதன் முதலாக **"தேவார திருப்பதிகம்"** எனக் குறிக்கின்றது.

இரண்டாம் சாசனமாக விளங்குவது திருக்குவளை எனத் தற்காலத்தில் குறிக்கப்பெறும் திருக்கோளிலி சிவாலயத்துக் கல்வெட்டாகும். நாகை மாவட்டத்தில் திகழும் திருக்கோளிலி சிவாலயத்தின் மகா மண்டபத்து கிழக்கு நோக்கித்திகழும் சுவரில் நுழைவு வாயிலுக்குத் தென்புறம் சடையவர்மன் இரண்டாம் சுந்தரபாண்டியனின் சிலாசாசனமொன்றுள்ளது. அம்மன்னவனின் பத்தாம் ஆண்டின் எதிராமாண்டு (11 ஆம் ஆண்டு – கி.பி. 1286) பதிவு பெற்ற இக்கல்வெட்டில் மாங்குடி என்னும் ஊரினனாகிய வியாபாரி பிச்சன் கணபதி ஆண்டார் என்பார் 106 பனத்தை கோயிலில் முதலீடு செய்து அது கொண்டு வேலி 3 மா நிலம் வாங்கி அதன் வருவாயிலிருந்து மாதந்தோறும் திருவாதிரை நாளில் அக்கோயிலின் ஈசனாரையும், தேவியையும் திருவீதி உலா எழுந்தருளச் செய்யவும், ஆளுடைய பிள்ளையாரான திருஞானசம்பந்தருக்கு பாலமுது நிவேதனம் செய்து, திருவுலா எழுந்தருளச் செய்து அவர் முன்பு **தேவாரம் பாடவும்** செய்யவேண்டும் என அந்நிலக்கொடையை அளித்ததாகச் கூறப் பெற்றுள்ளது.

திருஞானசம்பந்தருக்குத் திருஞான அமுதான பாலமுது நிவேதனம் செய்தல், திருவீதி உலா எழுந்தருளச் செய்தல், அவர் முன்பு தேவாரம் பாடுதல் ஆகிய பணிகள் அங்கு நிகழ்ந்துள்ளன. தமிழ்நாட்டிலேயே தேவாரம் என மூவர்தமிழை அதிலும் சிறப்பாக இங்கு ஞானசம்பந்தர் தமிழை தேவாரம் என்ற சொல்லால் சுட்டும் முதற் கல்வெட்டுச் சான்று இதுவேயாகும். இச்சாசனம் பொறிக்கப்பெற்ற ஆண்டோ கி.பி. 1286 ஆகும்.

தேவாரம் எனும் சொல் வழக்கு குறித்துப் பேசும் மூன்றாவது சான்றாக விளங்குவது பிரான்மலை கல்வெட்டாகும். பாண்டி மண்டலத்து பிரான்மலை மங்கை நாதேஸ்வரர் திருக்கோயிலிலுள்ள தட்சிணாமூர்த்தி சன்னிதியின் மேற்குப்புறம் ஜடாவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி வீரபாண்டியனின் ஒன்பதாம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று காணப் பெறுகின்றது. இதன் காலம் கி.பி. 1306 ஆகும். கேரள சிங்கவள நாட்டு குலசேகரபட்டினம் எனும் அருவியூரினனாகிய திருக்கொடுங் குன்றமுடைய சிவநெறிகாட்டினார் என்பவருடன் அக்கோயில் நிருவாகிகள் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தமே இச்சாசனமாகும். சிவநெறி காட்டினார் அத்திருக்கோயிலுக்கென செய்தளித்த திருஞானம் பெற்ற பிள்ளையார் திருமேனிக்கு உரிய அமுது படிகளுக்காகவும், அவர் முன்பு **தேவாரம் பாடவும்**, சந்தி விளக்கு எரிக்கவும், திருவிழாக்களின் போது அத்திருமேனி உலாப் போவதற்காகவும் அவர் முதலீடு செய்த பத்து ஆணை அச்சு காசுகளை கோயிலார் பெற்றுக் கொண்டு அதன் வட்டியிலிருந்து மேற்குறித்த பணிகளைச் செய்வதாக ஒப்புக் கொண்டு இக்கல்லெழுத்துச் சாசனத்தைப் பதிவு செய்துள்ளனர். திருக்கொடுங்குன்றத்திலும் திருஞானக்குழந்தையார் முன்பு தேவாரம் பாடப்பெற்றது என்ற குறிப்பு அரிய வரலாற்றுத் தகவலாகும்.

தமிழகத் திருக்கோயில்களில் பல்லவர் காலந்தொட்டு இடம்பெற்றுத்திகழும் கல்வெட்டுச் சாசனங்களைத் தொகுத்து நோக்கும் போது திருஞான சம்பந்த பெருமானாரின் தேவாரப்பாடல்கள் பற்றியும், அவருக்காக எடுக்கப்பெற்று வழிபாடு இயற்றப்பெற்ற அவர்தம் பிரதிமங்கள் பற்றியும், அங்கு திகழும் அரிய செய்திகளையும் கண்ணுற்றோம். ஆளுடைய பிள்ளையாருடன் சென்ற அடியார்கள்தாம் அவர் பாடிய பாடல்களை ஏட்டில் பதிவுசெய்தனர் என்பதும், கணநாதர் போன்றோர் அவர்தம் பதிகங்களை ஏடுகளில் பதிவு செய்து பிறர்க்கு அளித்தனர் என்பதும், சோழப் பெருவேந்தர்கள் காலத்தில் சீகாழி கோயிலில் **"தமிழ் விரகர்"** ஒருவர் நியமிக்கப்பெற்று ஆளுடைய பிள்ளையின் பதிகங்கள் காப்பாற்றப் பெற்றன என்பது பற்றியும் கண்ணுற்றோம் தில்லையில் மணவிற் கூத்தன் பிள்ளையாருக்கு பொற்படிமம் சமைத்து, பொற் கோயில்செய்து, திருமுறைகளை செப்பேட்டில் எழுதிப் பாதுகாத்தான் என்பதும், தென்பாண்டி நாட்டில் பிள்ளை பஞ்சவன் பிரமாதி ராஜன் என்பார் முதல் மூன்று திருமுறைகளையும் செப்பேட்டில் எழுதி **"பிள்ளையார் திருமுறை செப்பேடுகண்டபெருமான்"** என்ற பட்டம் பெற்றமையையும் அறிந்தோம்.

திருவிடைவாயில் திருக்கோயிலில் சம்பந்தர் திருப்பதிகம் வெளிப்பட்டமை பற்றியும், கோவிந்த புத்தூரில் பிள்ளையாரின் திருப்பாடலொன்று கல்வெட்டில் இடம் பெற்றமை பற்றியும் கண்டோம். நல்லூர் பெருமணத்துக் கல்வெட்டொன்றின் மூலம் ஞானக் குழந்தையார் மணம் புரிந்து கொண்ட மங்கையின் திருநாமம் **சொக்கியார்** என்பதும் அறிந்தோம் சீகாழியில் உள்ள ஆளுடைபிள்ளையார் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் பகரும் செய்திகள் அனைத்தும் கண்டோம்.

தேவரடியார் பெண்களும், அடுக்களைச் சமையல் செய்யும் பெண் ஒருத்தியும் செய்த வழிபாடுகள் பற்றியும் பண் இசைத்தல், கடலாடுதல் போன்ற நிகழ்வுகள் பற்றியும் விரிவுற அறிந்தோம். திருப்பதிகங்களைத் தேவாரம் என்ற சொல்லால் அழைக்கும் மரபு உதித்த காலம் பற்றியும் கண்ணுற்றோம். கல்லெழுத்துச் சாசனங்களும், அவைகளைத் தாங்கி நிற்கும் தமிழக கோயில்களும் வரலாற்றுப் பெட்டகங்களாக, கலைக் கருவூலங்களாக, ஆன்மிகப் பயிர் வளரும் கழனிகளாக, பண்பாட்டை மலரச் செய்யும் தாமரைத் தடாகங்களாக என்றென்றும் விளங்குகின்றன என்பது புகழ்ச்சியன்று மெய்யுரையே. கழுமலத்தார் பாதம் பணிந்து சம்பந்தர் தமிழ் பாடுவோம்.

திருஞானசம்பந்தர் சுட்டியருளிய பழங்காவிரியும் அரிசிலாறும்

திருஞானசம்பந்தர் சுட்டியருளிய பழங்காவிரியும் அரிசிலாறும்

– முதுமுனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன்

‘கங்கையிற் புனிதமாய காவிரி’ – என்று தொண்டரடிப்பொடி ஆழ்வார் போற்றிடும் பொன்னிநதியின் நடுவு தன்னுள் ஈசனார் இருக்கும் திறத்தைத் திருநாவுக்கரசு பெருமானார், “கன்னியை ஒருபால் வைத்துக் கங்கையைச் சடையுள் வைத்துப் பொன்னியின் நடுவு தன்னுள் பூம்புனல் பொலிந்து தோன்றும் துன்னிய துருத்தியானை தொண்டனேன் கண்டவாறு” எனப் போற்றிப் பரவியுள்ளார். மூன்றாம் இராஜராஜசோழனின் முசிறிக் கால்வாய் மதகுக் கல்வெட்டு இப்புனித நதியை “கரிகாற் சோழப் பேராறு” எனக் குறிப்பிடுகின்றது. சோழ நாட்டிற்கு வளம் பயக்கும் காவிரி நதிக்கரையிலும், அதன் கிளை நதிகளின் கரைகளிலும் அமைந்துள்ள தேவாரத் தலங்களைப் பாடிய மூவர் முதலிகள் அவை எந்த நதியின் எந்தக் கரையில் அமைந்துள்ளன என்பன போன்ற குறிப்புகளையும் தம் பாடல்களில் வரைந்துள்ளனர். திருஞானசம்பந்தப் பெருமானார் சில தலங்களில் தாம் பாடிய திருப்பதிகங்களில் “பழங்காவிரி” என்ற குறிப்பினைத் தந்துள்ளார். பழங்காவிரி பற்றிய அவர்தம் பாடற் குறிப்புகள், சேக்கிழார் பெருமான் சுட்டும் திருஞானசம்பந்தர் வரலாறும் மேலும் திருஇடைமருது கல்வெட்டுக்கள் ஆகியவற்றைத் தொகுத்து நோக்கும்போது ஒரு காலகட்டத்தில் காவிரி நதி தன் போக்கில் மாற்றம் கொண்டமையும், அவ்வருளாளர்கள் காலத்தில் பழைய தடமொன்று எஞ்சியிருந்தமையும் அறிகிறோம். பழங்காவிரி என்ற பெயரில் இருந்த அத்தடமும் பின்னாளில் மறைந்தமையால் அந்நதியைத் தற்போது நாம் காண இயலவில்லை. ஞானக்குழந்தையார் சுட்டும் அந்நதி பற்றியும் அதன் கிளையான அரிசில் என்ற ஆற்றின் பெருஞ்சிறப்பும் அதன்போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் இனிக் காண்போம்.

திருவலஞ்சுழியும் பொன்னியும்

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவலஞ்சுழி என்னும் ஊருக்கு மேற்காக சில கி.மீ. தொலைவில் தற்போது காவிரி, அரிசில் என இரு ஆறுகள் பிரிகின்றன. அவை திருவலஞ்சுழிக்கும், திரவேரகம் எனும் சுவாமிமலைக்கும் இடையே அடுத்தடுத்து ஓடுகின்றன. தெற்கில் திருவலஞ்சுழி திருக்கோயிலை ஒட்டிச் செல்லுகின்ற ஆற்றினை அரிசிலாறு என்றும் வடக்கில் சுவாமிமலையை ஒட்டி ஓடும் ஆற்றினைக் காவிரி என்றும் அழைக்கின்றனர். காவிரி கும்பகோணம் நகருக்கு வடக்கிலும், அரிசிலாறு அந்நகருக்குத் தெற்கிலும் திகழ்கின்றன.

திருவலஞ்சுழி திருக்கோயிலில் பதிகங்கள் பாடிய திருஞானசம்பந்தர் விண்டு எலாம் மலர எனத் தொடங்கும் பதிகத்தில்,

“பூசம் நீர்பொழியும் புனல் பொன்னியில் பன்மலர்
வாசம் நீர் குடைவான் இடம் தீர்க்கும் வலம்சுழி” என்றும்,

“தீர்த்த நீர் வந்து இழிபுனல் பொன்னியில் பல்மலர்
வார்த்த நீர் குடைவார் இடர் தீர்க்கும் வலஞ்சுழி”

என்றும் இரு இடங்களில் வலஞ்சுழியில் ஓடும் பொன்னிநதி பற்றி குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தரே, “என்ன புண்ணியம்” எனும் இத்தலத்துப் பதிகத்தில்,

“மன்னு காவிரிசூழ் திருவலஞ்சுழி வாணனை” – என்றும்,

“மறி உலாம் திரைக்காவிரி வலஞ்சுழி மருவிய பெருமானை” – என்றும் போற்றிப் பரவியுள்ளார். “பள்ளம் அது ஆய” எனத் தொடங்கும் மற்றொரு பதிகத்தில்,

“வண்டு அமரும் பொழில் மல்கு பொன்னி வலம்சுழி வாணன்” – என்றும் குறிப்பிடும் பாங்கால் கோயிலருகே வலம் சுழித்தவாறு ஓடும் நதி பொன்னியாம் காவிரியே என்பது வெள்ளிடைமலை. தற்காலத்தில் கூறுமாபோல அது “அரிசில்” என்று பண்டு அழைக்கப் பெற்றிருப்பின் திருஞானசம்பந்தர் அதனை நிச்சயம் குறித்திருப்பார். ஏனெனில் கலயநல்லூரில் தொடங்கி திருசிவபுரம், அரிசிற்கரைப்புத்தூர், திருப்பேணுபெருந்துறை, திருப்பாம்புரம், திருதிலதைப்பதி, திருஅம்பர்மாகாளம், திருஅம்பர் பெருந்திருக்கோயில் ஈறாக அரிசிலாற்றின் கரையில் அமைந்த தலங்கள் அனைத்தையும் பாடும்போது அரிசிற்கரைத் திருவூர்களாகவே அவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

திருவலஞ்சுழியில் பதிகம் பாடிய திருநாவுக்கரசர்,

“மலைஆர் திரள் அருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கு இடமா மன்னினாரே”

என்றும், கொட்டையூர் பதிகத்தில், “உருமணி நீர்ப்பொன்னி வலஞ்சுழி”, “மலைப்பண்டம் கொண்டு வரும் நீர்ப்பொன்னி வலஞ்சுழி”, “மந்தாரம் உந்திவரும் நீர்ப்பொன்னி வலஞ்சுழி, மேலார் திரை புரளும் காவிரிவாய் வலஞ்சுழி, மைக்கொள் மயில் தழை கொண்டு வரும் நீர்ப் பொன்னி வலஞ்சுழி”, “மண்டுபுனல் பொன்னி வலஞ்சுழி”, மணல் வரும் நீர்ப்பொன்னி வலஞ்சுழி, வருதிரை நீர்ப் பொன்னி வலஞ்சுழி, வளம் கிளர் நீர்ப்பொன்னி வலஞ்சுழி என்றெல்லாம் போற்றிப் பரவியுள்ளார். திருவலஞ்சுழியில் வலம் சுழித்துச் செல்லும் ஆற்றினை எந்த ஒரு இடத்திலும் அரிசில் என அவரும் குறிப்பிடாதது நோக்குதற்குரியதாம். நக்கீர தேவர்

திருவலஞ்சுழி மும்மணிக் கோவையில் “காவிரி மடந்தை வார்புனல் உடுத்த மணி நீர் வலஞ்சுழி” எனப் பாடியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

திருவலஞ்சுழி மகாத்மியம் வலம் சுழித்த காவிரி இங்கு பிலத்துள் புகுந்து பாதாளம் நோக்கிப் பாயவே வலஞ்சுழிப் பெருமான் திருவருளால் மீண்டும் நிலமிசை ஓடியதாகக் குறிப்பிடுகின்றது. இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது திருவலஞ்சுழி கோயில் அருகே ஓடுவது பொன்னியேயன்றி அரிசில் அன்று என்பது நன்கு விளங்கும்.

திருக்குடமூக்கில் பழங்காவிரி

திருஞானசம்பந்தர் திருக்குடமூக்கில் (குடந்தை எனும் கும்பகோணத்தில்) பாடியுள்ள பதிகத்தின் முதல் மற்றும் இரண்டாம் பாடல்களில் காவிரியாற்றின் அயலே குடமூக்கு திகழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். மூன்றாம் பாடலாக,

“மயில் பெடைபுங்கி ஆய மணல்மேல் மட அன்னம் மல்கும்
பயில் பெடை வண்டு பண்செய் பழங்காவிரிப் பைம்பொழில்வாய்க்
குயில் பெடையோடு பாடல் உடையான் குடமூக்கு இடமா
இயலொடு வானம் ஏத்த இருந்தான் அவன் எம் இறையே”

என்ற பாடலைப்பாடி குடந்தையில் பழங்காவிரி ஓடியமையைப் பதிவு செய்துள்ளார். மீண்டும் ஆறாம் பாடலில் காவிரியாற்று அயலே குடமூக்குத் திகழ்ந்ததைக் கூறியுள்ளார். திருக்குடந்தைக் காரோணத்தில் பதிகம் பாடும்போது, “கரைஆர் பொன்னி சூழ்தண் குடந்தைக் காரோணம்” என்று குறிப்பிட்டுள்ளார். திருநாவுக்கரசரோ, “பொன்னி நன்னீர்க் குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம்கூத்தனாரே” என்று கூறி குடந்தை நகரை வளப்படுத்திய காவிரியின் பெருஞ்சிறப்பினை எடுத்துரைத்துள்ளார்.

திருச்சிவபுரத்தில் பழங்காவிரி

குடந்தை நகரில் பழங்காவிரி திகழ்ந்ததாகக் குறிப்பிடும் திருஞானசம்பந்தர் குடந்தை நகருக்குத் தென்கிழக்காக அமைந்துள்ள திருச்சிவபுரத்தில் வியாழக்குறிஞ்சிப் பண்ணில் பாடிய இன்குரல் இசைகெழும் எனத் தொடங்கும் பதிகத்தின் முதல் பாடலில்,

“பொன்கரை பொரு பழங்காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே”

என்று குறிப்பிட்டு சிவபுரம் பழங்காவிரியின் தென்கரையில் அமைந்திருந்த திருத்தலம் என்பதையும் நமக்குக் காட்சிப்படுத்தியுள்ளார்.

இரண்டாம் பாடலில் "அலை மல்கும் அரிசிலின் அதன் அயலே சிலை மல்கும் மதில் அணி சிவபுரமே" என்று குறிப்பிட்டு அவ்வூருக்கு அணித்தே அரிசில் ஆறு ஓடியது என்பதையும் காட்டியுள்ளார். மீண்டும் பத்தாம் பாடலில்,

"பண்டு அமர்தரு பழங்காவிரியின்
தெண்திரை பொருது எழு சிவபுரமே"

எனக் குறிப்பிட்டு பழங்காவிரி அவ்வூரில் ஓடிய திறம் செப்பியுள்ளார். திருஞான சம்பந்தரே திருச்சிவபுரத்தில் பாடிய "கலைமலி" எனத் தொடங்கும் பதிகத்தின் மூன்றாம் பாடலில்,

"திரைபொரு புனல் அரிசில் அது உடை சிவபுரம்"

எனக் கூறி அரிசிலாறு சிவபுரத்திற்கு உரிய ஒன்று என்பதையும் உரைத்துள்ளார். இதே திருத்தலத்தில் பதிகம் பாடிய நாவுக்கரசு பெருமானார், "அரிசில் பெருந்துறை ஆட்சி கொண்ட சித்தன்காண்" – எனவும் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றுகளை ஆழ்ந்து நோக்கும்போது சிவபுரத்திற்கு வடக்கே பழங்காவிரியும் தெற்கே அரிசிலாறும் திகழ்ந்தன என்பதறிகிறோம்.

திருநாகேச்சரத்தில் பழங்காவிரி

திருநாகேச்சரத்துச் சிவாலயத்தில் பதிகம் பாடிய திருஞானசம்பந்தர் பழங்காவிரியின் தென்கரையில் திருநாகேச்சரம் திகழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர்தம் பாடலில்,

"பழமும் உந்திப் புனல்பாய் பழங்காவிரித் தென்கரை
நழுவு இல் வானோர் தொழநல்கு சீர்மல்கு நாகேச்சரத்து ..."

"பறவை ஆலப்பரக்கும் பழங்காவிரித் தென்கரை
நறவம் நாறும் பொழில் சூழ்ந்து அழகாய நாகேச்சரத்து..."

"பைம்பொன் வாரிக் கொழிக்கும் பழங்காவிரித் தென்கரை
நம்பன் நாளும் அமர்கின்ற நாகேச்சுரம்"

"பாய்புனல் வந்து அலைக்கும் பழங்காவிரித் தென்கரை
ஞாயிறும் திங்களும் கூடிவந்து ஆகும் நாகேச்சரம்"

"(கா)விரியின் நீர்வந்து அலைக்கும் கரைமேல் மேவும் நாகேச்சரம்"

"கந்தம் நாறும் புனல் காவிரித் தென்கரைக் கண்ணுதல்
நந்தி சேரும் திருநாகேச்சரத்தின்..."

என்றெல்லாம் குறிப்பிட்டு பழங்காவிரியின் தென்கரையில் திருநாகேச்சரம் திகழ்ந்தது என்பதை உறுதிபட இயம்பியுள்ளார்.

குடந்தை நகரத்துக்குத் தெற்காகவும், திருச்சிவபுரத்திற்கும், திருநாகேச்சரத்திற்கும் வடக்காகவும் தடம் பதித்துச் சென்ற இப்பழங்காவிரியின் கரைவழியே திருஞானசம்பந்தர் திருவிடைமருது சென்றார் என்பதைச் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் திருஞானசம்பந்த சுவாமிகளின் புராணம் உரைக்கும் போது விரித்துரைத்துள்ளார். நறையூர் தென்திருபுத்தூர் ஆகிய தலங்களுக்குச் சென்ற ஞானக் குழந்தையார் திருசிவபுரம் வழிபட்டு பின்னர் குடமூக்கு, திருநாகேச்சரம் ஆகிய ஊர்களுக்குச் சென்று வழிபட்ட பிறகு பொன்னி நதிக்கரை வழியே திருஇடைமருது சென்றார் என்பதை,

"மாநாகம் அருச்சித்த மலர்க்கமலத்தாள் வணங்கி
நாணாளும் பரவுவார் பிணி தீர்க்கும் நலம் போற்றிப்
பாணாறும் மணிவாயர் பரமர் திருவிடை மருதில்
பூநாறும் புனற் பொன்னித் தடங்கரைப்போய்ப் புகுகின்றார்" (412)

என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அவர் சென்றது பழங்காவிரியின் கரையேயாகும். தற்போது திருநாகேச்சரத்திலோ, திருச்சிவபுரத்திலோ இப்படி ஒரு ஆறு (பழங்காவிரி) காணப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குடந்தைக் கல்வெட்டில் பழங்காவிரி

கும்பகோணம் நாகேசுவரன்கோயில் எனப்பெறும் குடந்தைக் கீழ்க் கோட்டத்து கருவறை வடபுற சுவரில் காணப்பெறும் பராந்தக சோழனின் கல்வெட்டுச் சாசனத்தில் **பழங்காவிரி திருக்கீழ்க்கோட்டத்து பரமசாமிக்காக வடகரை பாம்பூர்நாட்டுத் தேவதானம் திருக்குடமூக்கின்** மூல பருஷயினர் (சபையினர்) தஞ்சாவூர் வெள்ளாளன் அரயன் கலங்காமலை என்பானுக்கு விற்றுக்கொடுத்த நிலம் பற்றி கூறப்பெற்றுள்ளது. ஆதித்தன் பராந்தகன் போன்ற முற்காலச் சோழ மன்னர்கள் காலந்தொட்டு முதலாம் இராஜேந்திரன் காலத்திற்கு முன்புவரை குடந்தைக் கீழ்க்கோட்டத்து கல்வெட்டுக்களில் அவ்வூர் வடகரை பாம்பூர் நாட்டு திருக்குடமூக்கு என்றும், முதலாம் இராஜேந்திர சோழன் காலந்தொட்டு உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டுத் திருக்குடமூக்கு என்றும் குறிக்கப்பெற்றுள்ளதைக் காணலாம். எனவே, இங்கு முதலில் குறிக்கப்பெறும் வடகரை என்பது பழங்காவிரியின் வடகரையில் குடமூக்கு அமைந்துள்ளமையைச் சுட்டுவதாகும்.

திருவிடைமருதூர் கல்வெட்டுக்களில் பழங்காவிரி

திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோயிலின் கருவறையின் மேற்குச் சுவரில் திகழ்ந்து 1895 ஆம் ஆண்டு கல்வெட்டுத்துறையினர் படி எடுத்த முதற் பராந்தக சோழனின் முப்பத்தைந்தாம் ஆண்டு (கி.பி. 942) கல்வெட்டுச் சாசனத்தில் (S.I.I. Vol. V No. 713) பதினான்கு வேலி நிலத்தினைத் திருவிடைமருதூர் நகரத்தார் மற்றும் திரைமூர் சபையோர் ஆகியோரிடமிருந்து இருமுடிச் சோழ பல்லவரையர் என்பார் விலைகொடுத்து வாங்கி அதனைத் திருவிடைமருதூர் கோயிலுக்கு வழங்கியது குறிக்கப்பெற்றுள்ளது. அந்த நிலத்தின் நான்கெல்லை கூறுமிடத்து, “கீழ்பாற் கெல்லை வண்ணக்குடியார் பிணம் போகும் பெருவழிக்கு மேற்கும், தென்பாற்கெல்லை பெருவழிக்கு வடக்கு, மெக்குன்னும் வணக்குடியார் வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை பழங்காவிரிக்குக் கிழக்கும், வடபாற்கெல்லை பழங்காவிரிக்குத் தெற்கும், ஸ்ரீ குடந்தையார் நிலத்துக்குத் தெற்கும், மானாபரணபுரத்தாரெல்லைக்குத் தெற்கும் இவ்விசைந்த பெருநான்கெல்லை” – என்று கூறப்பெற்றுள்ளது.

இந்த நான்கெல்லையில் குறிக்கப்பெற்றுள்ள நிலக்குறிப்பை கூர்ந்து நோக்கும்போது இங்கு குறிக்கப்பெற்றுள்ள பதினான்கு வேலி நிலத்திற்கு மேற்கிலும் வடக்கிலும் பழங்காவிரி ஒரு திருப்பம் பெற்று ஓடியுள்ளது என்பதறிய முடிகிறது. இப்பகுதி திருவிடைமருதூரினை ஒட்டி அமைந்த பகுதி என்பதும் தெளிவாகின்றது.

மதுரை கொண்ட பரகேசரி வர்மனான முதற்பராந்தக சோழனின் முப்பத்தெட்டாம் ஆண்டு (கி.பி. 944 – 945) பொறிக்கப்பெற்ற மேலும் ஒரு சாசனம் (S.I.I. Vol. XXIII, No. 195) திருவிடைமருதூர் திருக்கோயிலிலேயே திகழ்ந்து படி எடுக்கப்பெற்றுள்ளது. அச்சாசனத்திலும் முந்தைய கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ள இருமுடி சோழ பல்லவரையருக்காக அவர்தம் அலுவலர் ஒருவர் இரண்டே முக்கால் வேலி நிலத்தினைப் பழங்காவிரிக்கு அருகிலேயே வாங்கினார் என்பது குறிக்கப் பெற்றுள்ளது. வண்ணக்குடி வாய்க்காலும் பழங்காவிரியிலிருந்து பிரிந்த ஒன்று என்பதையும் வலியுறுத்துகின்றது. இச்சான்றுகொண்டும் திருவிடைமருதூர் பகுதியில் பழங்காவிரி ஓடியமை மேலும் உறுதி பெறுகின்றது. திருநாகேச்சவரம் திருக்கோயிலில் உள்ள மூன்றாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டில் ஒரு பெருவெள்ளம் காரணமாக வயல்களும், கால்வாய்களும் அழிவு பெற்றன என விவரிக்கப்பெற்றுள்ளது.

தேவாரக் குறிப்புகள், சேக்கிழார் பெருமானின் கூற்று, திருவிடைமருதூர் கல்வெட்டுச் செய்திகள் ஆகியவை அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது கும்பகோணத்திற்குத் தெற்காகவும், சிவபுரத்திற்கு வடக்காகவும் ஓடிய இந்த பழங்காவிரி மீண்டும் வடக்குநோக்கித் திரும்பி பின்னர் கிழக்கு நோக்கி திருநாகேஸ்வரத்திற்கு வடக்காகப் பாய்ந்து திருவிடைமருதூர் வழியே சென்று தற்காலத்திய

வீரசோழனாற்றோடு இணைந்து ஆடுதுறை வரை ஓடியிருந்திருக்க வேண்டும். திருவலஞ்சுழியில் வலம் சுழித்து ஓடிய காவிரி அவ்வூருக்குக் கிழக்காக ஒரு திருப்பம் பெற்று, பின்பே தென்திசையில் பழங்காவிரியாக ஓடியிருக்க வேண்டும். அதனால் தான் குடந்தையின் மேற்கு திசையில் மேலக்காவிரி என்ற பகுதி அழைக்கப் பெறுகின்றது. மேல் காவிரி என்ற கல்வெட்டுக் குறிப்பும் உள்ளது.


காவிரி
திருவிடைமருதூர்
கும்பகோணம்
திருநாகேஸ்வரம்
திருவலஞ்சுழி
பழங்காவிரி
சிவபுரம்
கலயநல்லூர்
அரிசிற்கரைப்புத்தூர்

திருஞானசம்பந்தர் சுட்டும் பழங்காவிரி ஓடியதடம்

அரிசிலாறு

அரிசிலாறு பற்றிய முதற்குறிப்பு திருக்கலயநல்லூரிலிருந்துதான் தொடங்கு கின்றது. அத்தலத்தில் பதிகம் பாடிய சுந்தரர்,

"அகிலொடு சந்தி உந்தி வரும் அரிசிலின் தென்கரைமேல்
கலை அடைந்து கலிகடி அந்தணர் ஓமப்புகையால்
கணமுகில் போன்றணி கிளரும் கலையநல்லூர் காணே"

என்று பாடியுள்ளதால் இத்திருக்கோயிலுக்கு வடக்காகத்தான் அரிசிலாறு ஓடியது என்பதறிகிறோம். கோயிலுக்கு வடக்கே ஓடிய இந்த ஆறு திருச்சிவபுரத்திற்குத்

தெற்காகவும், அரிசிற்கரைப்புத்தூர் எனும் அழகாபுத்தூருக்கு வடக்காகவும் அவ்வூர்த் திருக்கோயில்களுக்கு அருகிலேயே ஓடியிருக்க வேண்டும். தற்போது அரிசில் எனப்பெறும் ஆறு சிவபுரத்துக்கு வடக்காகச் செல்வதோடு அரிசிற்கரை புத்தூருக்கு வடகிழக்கே சற்று தொலைவிலேயே செல்கின்றது. எனவே, பழங்காவிரியில் கும்பகோணத்திற்குத் தெற்காக பிரிந்து கிழக்கு நோக்கிச் சென்ற ஆறுதான் அரிசிலாறாகும். அரிசிலாறு காலப்போக்கில் பெருவெள்ளங்கள் காரணமாகத் தன் போக்கை மாற்றி கொண்டது என்பது தெளிவு.

பழங்காவிரியின் கிளை நதியாகப் பண்டு திகழ்ந்த அரிசிலாற்றின் சிறப்பையும் அதன் கரைப்புத்தூரின் சிறப்புகளையும் மூவர் முதலிகளும் பரக்கப் பேசியுள்ளனர்.

"அன்னம் படியும் புனல் ஆர் அரிசில் அலை கொண்டு
பொன்னும் மணியும் பொரு தென்கரை மேல்புத்தூரே"

"நாவால் நாதன் நாமம் ஓதி நாள்தோறும்
பூவால் நீரால் பூசுரர் போற்றும் புத்தூரே"

"தெள்ளி வருநீர் அரிசில் தென்பால் சிறைவண்டும்
புள்ளும் மலிபூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே"

என்பது ஆளுடைய பிள்ளையார் தம் திருவாக்காகும்.

திருநாவுக்கரசு பெருமானாரோ,

"முத்து ஊரும் புனல் மொய் அரிசிற்கரைப்
புத்தூரான் அடிபோற்றி" – என்றும்,

"அரிசிலின் கரைமேல் அணி ஆர்தரு
புரிசை நம் புத்தூர்"

என்றும் பாடிப் பரவியுள்ளார். சுந்தரரோ,

"அலைக்கும் புனல்சேர் அரிசில் தென்கரை
அழகார் திருப்புத்தூர்" – என்றும்

"புனல்சேர் அரிசில் தென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே"

என்றும் பாடி அரிசிலாற்றின் புகழ்தனை எடுத்துரைத்துள்ளனர்.

வேண்டுவார்க்கு வேண்டுபவை அனைத்தையும் அருளவல்ல பிரானாகிய ஈசனார் தாம் காசு கொடுத்து பெற்றவை இரண்டாகும். திருவீழிமிழலையில் தமிழோடு இசை கேட்கும் இச்சையால் நித்தமும் ஆளுடைய பிள்ளைக்கும், ஆளுடைய அரசுக்கும் காசு நல்கினார். அதுபோன்றே நித்தமும் அரிசில் புனல் ஆடவேண்டும் என்பதற்காகப் புகழ்ந்துணை கைப்புக காசு நல்கினார். இதனை திருஞானசம்பந்தர்,

"அலர்ந்த அடியான் அற்றைக்கு அன்று ஓர் காசு எய்திப்
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே"

என்று குறிப்பிட்டுள்ளார்.

"அகத்து அடிமை செயும் அந்தணன் தான்
அரிசில் புனல் கொண்டு வந்து ஆட்டுகின்றான்
மிகத் தளர்வு எய்திக் குடத்தையும் நும்
முடிமேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்து அவனுக்கு நித்தல் படியும்
வரும் என்று ஒரு காசினை நின்ற நன்றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்து உகந்தீர்
பொழிலார் திருப்புத்தூர் புனிதனீரே"

என்பது சுந்தரரின் திருவாக்காகும்.

கயிலைநாதன் உவந்து ஏற்ற திருமஞ்சனத்துக்கு நாளும் நீர் தந்த அரிசிலும் அதன் மூலநதியான பழங்காவிரியும் காலப்போக்கில் மாற்றங்கள் பல பெற்றாலும் சமயக்குரவர் தம் திருப்பாடல்களின் துணைகொண்டு அவை தம் தடம் அறிந்து கொள்ள முடியும்.



நாயனார் திருமஞ்சனம் செய்து பலிபீடத்திலிருந்து காசு பெறும் காட்சி – தாராசுரம் திருக்கோயிலில் உள்ளது.

அரிசிற்கரை போர்

கி.பி. 862ஆம் ஆண்டில் அரிசிலாற்றங்கரையில் நடைபெற்ற போரில் பல்லவ மன்னனான நிருபதுங்கவர்மனும் இலங்கை வேந்தனாகிய இரண்டாம் சேனனும் ஒருங்குசேர்ந்து மாறவர்மன் பரசக்கர கோலகலனைத் தோற்றோடச் செய்தனர் என பல்லவர் செப்பேடு (Epigraphia Indica, Vol XVIII, No. 2) குறிப்பிடுகின்றது. இப்போர் நிகழ்ந்த இடம் பழங்காவிரிக்குத் தெற்காக அரிசிலாற்றங்கரையில்தான் நிகழ்ந்திருக்க வேண்டும்.

திருப்பாடல்களும் தலங்களும்

திருவலஞ்சுழியினையும் திருக்கொட்டையூரினையும் இணைத்து ஒரே பதிகத்தில் பாடிய நாவுக்கரசர் வலஞ்சுழியை மட்டுமே காவிரியுடன் இணைத்துப் பேசுகின்றாரேயன்றி கொட்டையூருடன் காவிரியை அவர் தொடர்புபடுத்தவில்லை. திருஞான சம்பந்தரோ திருவியலூர், திருந்துதேவன்குடி ஆகிய தலங்களில் பதிகம் பாடும்போது அவ்வூர்கள் காவிரிக்கரையிலிருந்தும் அந்த நதி பற்றி அவர் பாடல்களில் குறிப்புகள் இல்லை. பின்னர் திருவிடைமருதூர், தென்குரங்காடுதுறை, திருமங்கலக்குடி போன்ற தலங்களைப் பாடும்போது பொன்னியின் சிறப்பினைக் கூறியுள்ளார்.

இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது திருவலஞ்சுழிக்குத் தென்கிழக்கில் பழங்காவிரியின் தடம் பிரிந்து குடந்தை நகருக்குத் தெற்கில் ஓடி பின்பு அரிசிலாறு எனும் கிளை நதியை தன் போக்கிலிருந்து பிரிந்து ஓடச் செய்ததோடு, தன் தடத்தை சிவபுரம், திருநாகேச்சரம் வழியே பதித்து திருவிடைமருதூரினை ஒட்டி வடக்கு நோக்கிச் சென்று மீண்டும் கிழக்கில் பாய்ந்து திருமங்கலக்குடிக்கும், ஆடுதுறைக்கும் இடையே பயணம் செய்தது என்பதனை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்ற சமயகுரவர்தம் பாடல்களாலும், கல்வெட்டுச் செய்திகளாலும் உய்த்துணரலாம். திருஞானசம்பந்தர் கூறும் பழங்காவிரி இன்று தன் தடத்தை இழந்து வாய்க்கால்களாக மாறிக் காட்சியளிக்கின்றது.

தடம் மாறிய தமிழக நதிகளைப் பற்றி செயற்கைக்கோள் எடுத்த படங்களை ஆராய்ந்த வல்லுநர்கள் கும்பகோணத்திற்குத் தெற்கே தொடங்கி திருவிடைமருதூர் வரை காவிரி ஒருகாலத்தில் ஓடியதாகவும் தற்போது புதையுண்ட அந்த பழங்காவிரியின் தடயங்கள் செயற்கைக்கோள் ஆய்வில் தெரியவருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். திருஞானசம்பந்தர் பேசும் பழங்காவிரியின் தடம் அதுதான் என்பதில் எந்த ஐயத்திற்கும் இடமில்லை.

சம்பந்தர் சுட்டும் மலையாளரும் பாடிய கொடிமாடச் செங்குன்றூரும்

சம்பந்தர் சுட்டும் மலையாளரும்
பாடிய கொடிமாடச் செங்குன்றூரும்

முதுமுனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன்

திருநெல்வாயில் அரத்துறை எனும் நடுநாட்டுத் திருத்தலத்திற்கு திருஞானக் குழந்தையார் சென்றபோது,

திங்கள் நீர்மைச் செழுந்திரள் முத்தினால்
துங்க வெண் குடை தூய சிவிகையும்
பொங்க ஊதும் பொருவருஞ் சின்னமும்
அங்கண்நாதர் அருளினார் (201)

என்பார் சேக்கிழார் பெருமான். முத்து வெண்குடையும் சிவிகையும், திருச்சின்னம் எனும் ஊதுகருவியும் ஆகிய வரிசைகளைப் பெற்ற திருஞானசம்பந்தர் அண்ணலார் திரு அரத்துறை அடிகளை வணங்கி, பின் அங்கிருந்து புறப்பட்டு எதிர்கொளும் பதிகளில் அமைந்த கோயில்களை மேவிப் புனையும் வண்டமிழ் பாடியவாறு பனை நெடுங்கை மாஉரித்தவர் மகிழ்பெரும் பழுவூர் வந்தணைந்தார் எனக் கூறும் சேக்கிழார் பெருமான் பழுவூரில் ஞானக் குழந்தையார் பாடிய திறமும் உரைத்துள்ளார்.

"அங்கணைந்து இளம்பிறை அணிந்த சென்னியார்
பொங்கெழிற் கோபுரம் தொழுது புக்கபின்
துங்கநீள் விமானத்தை சூழ்ந்து வந்துமுன்
பங்கயச் சேவடி பணிந்து பாடுவார்" (236)

"மண்ணில் பொலிகுல மலையர் தாம் தொழுது
எண்ணில் சீர்ப் பணிகள் செய்து ஏத்தும் தன்மையில்
நண்ணிய வகை சிறப்பித்து நாதரைப்
பண்ணில் திகழ் திருப்பதிகம் பாடினார் " (237)

என்பதே சேக்கிழார் அருளிய திருவாக்காகும். மண்ணில் பொலிகுல **மலையர்** தொழுது ஏத்தும் பழுவூர் நாதரைப் பண்ணில் திகழ் திருப்பதிகம் பாடினார் என்று பெருமானார் கூறியதை அடிப்படையாகக் கொண்டு திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய அத்திருப்பதிகத்தில் அக்கருத்துகூறும் இரண்டு பாடல்களை நோக்குவோம்.

சோழநாட்டு காவிரியின் வடகரைத் தேவாரத்தலங்களில் ஒன்றான திருப்பழுவூர் எனப்பெறும் சிறு பழுவூரான கீழப் பழுவூர் திரு ஆலந்துறையார் கோயிலில் ஞானக் குழந்தையார் பாடிய பதிகத்தின் நான்காம் பாடலில்;

என்னும் ஓர் எழுத்தும் இசையின் கிளவி தேர்வார்
கன்னும் முதல் ஆய கடவுட்கு இடம் அது என்பர்

மண்ணின் மிசை ஆடி மலையாளர் தொழுது ஏத்திப்
பண்ணின் ஒலி கொண்டு பயில்கின்ற பழுவூரே

என்றும், மீண்டும் கடைப் பாடலான பதினோராம் பாடலில்;

"அந்தணர்கள் ஆன மலையாளர் அவர் ஏத்தும்
பந்தம் மலிகின்ற பழுவூர் அரனை ஆரச்
சந்தம்மிகு ஞானம் உணர் பந்தன் உரை பேணி
வந்த வணம் ஏத்தும் அவர் வானம் உடையாரே"

என்றும் பாடி மலையாள அந்தணர்கள் பூசித்து வழிபாடு செய்கின்ற திருக்கோயில்தான் பழுவூர் ஆலயம் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

ஞானக் குழந்ததையார் **மலையாளர்** என்றும், **மலையாள அந்தணர்** என்றும் கூறும் குறிப்பினை மீட்டும் சேக்கிழார் பெருமான் கூறும்போது "மண்ணில் பொலி குல **மலையர்** தாம்தொழுது எண்ணில் சீர்ப் பணிகள் செய்து ஏத்தும் நண்ணிய வகை" – என்பார்.

"மலையாளர்", "அந்தணர்கள் ஆன மலையாளர்", "மலையர்" என இங்கு இருவராலும் கூறப்பெற்றுள்ள சொற்களை ஆழ்ந்து நோக்குதல் வேண்டும்.

மலையாள அந்தணர்

"அந்தணர்கள் ஆன மலையாளர் ஏத்தும்" – என்று திருஞானசம்பந்தப் பெருமான் கூறுவதைக் கொண்டு கேரள தேசத்து அந்தணர்களால் பூஜிக்கப் பெறுகின்ற திருக்கோயிலாக அது பண்டு விளங்கியது எனப் பலரும் கூறிவந்துள்ளனர். இதற்குக் காரணம் சிறு பழுவூர் எனப்பெறும் கீழப்பழுவூர், மன்னுபெரும் பழுவூரான மேலப் பழுவூரைத் தலைநகரமாகக் கொண்ட பழுவேட்டரையர்களின் ஆளுகைக்கு உட்பட்ட ஓரூர் என்பதால் இக்கோயிலைப் பழுவேட்டரையர்கள்தாம் எடுப்பித்தனர் என்றும், பழுவேட்டரையர்கள் கேரள தேசத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்பதால் அந்த தேசத்து அந்தணர்களால் ஆலந்துறையார் கோயிலில் வழிபாடு நிகழ்த்தப் பெற்றது என்றும் ஆய்வாளர்கள் சிலர் கருதினர்.

பழுவேட்டரையர்கள் கேரள தேசத்தைச் சார்ந்தவர்கள் என்பதைச் சுந்தர சோழனின் அன்பில் செப்பேட்டுச் சாசனத்தால் அறியமுடிகிறது. அந்த செப்பேட்டுச் சாசனத்தின் வடமொழிப் பகுதியில் இடம்பெற்றுள்ள இருபத்திரண்டாம் சுலோகம் பின்வருமாறு உள்ளது.

பழுவேட்டரையர் பராஹவயஸ்ய க்ஷிதிபர்த்து கில கேரளேஸ்வரஸ்ய
தனயா முத்தவாஹ ராஜலக்ஷ்மீமிவ மூர்தாமவனீ பதிஸ ஏஷ:

இதன் தமிழாக்கமாவது:

கேரளமன்னனும் பழுவேட்டரையர் என்னும் மற்றொரு பெயருடையவனுமான மன்னவனின் மகளை அவனிபதியான (பராந்தக சோழனான) இவன் மணந்தான். அவள் திருமகளே ஓருருக் கொண்டது போலவிளங்கியவள் – என்பதாகும்.

பழுவேட்டரையர்கள் மன்னு பெரும் பழுவூரைத் தலைநகரமாகக் கொண்டு சோழர்களின் சிற்றரசர்களாக ஆதித்த சோழனின் காலந் தொட்டே திகழ்ந்தனர் என்பது வரலாற்றுச் சான்றுகள் கொண்டு அறிய இயலுகின்றது. பராந்தகன், சுந்தர சோழன், இராஜராஜன் மற்றும் இராஜேந்திர சோழன் ஆகிய சோழப் பெருவேந்தர்கள் காலத்தில் தான் பழுவேட்டரையர்களின் ஆட்சி பற்றி அறிய முடிகிறது. விஜயாலய சோழன் காலத்தோ அதற்கு முன்பு பல்லவர் காலத்தோ பழுவூர் பகுதியில் பழுவேட்டரையர்கள் இருந்ததற்கான எந்த ஒரு சான்றும் இல்லை. சிறுபழுவூரான கீழப்பழுவூர் ஆலந்துறையார் திருக்கோயில் பழுவேட்டரையர்களால் எடுக்கப் பெற்ற திருக்கோயிலன்று. திருஞானசம்பந்தர் வாழ்ந்த கி.பி 7ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் காலத்தில் திகழ்ந்த கோயிலாக இருந்த காரணத்தால்தான் சம்பந்தரின் திருப்பாடல் இக்கோயிலுக்குக் கிடைத்தது. எனவே பழுவூர் ஆலந்துறையார் திருக்கோயிலினைப் பழுவேட்டரையர்களோடு தொடர்புபடுத்தி அவர்கள் கேரள நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்பதால் கேரளநாட்டு அந்தணர்கள் இக்கோயிலினைப் பூசித்தார்கள் என்று கூறுவது ஏற்புடையதாகாது. மேலும் அன்பில் செப்பேடு "கேரளேஸ்வர" என்க் குறிப்பிடுகின்றதேயன்றி மலையாள அரசர் என்று குறிப்பிடாமையையும் நோக்குதல் வேண்டும். மன்னுபெரும் பழுவூரில் உள்ள அவநிகந்தர்வ ஈஸ்வரகிருஹம், திருத்தோற்றமுடைய மகாதேவர் கோயில், கீழப்பழுவூரில் ஆலந்துறையார் கோயிலினை ஒட்டி அமைந்துள்ள பசுபதீஸ்வரம் ஆகிய கோயில்களில் மட்டுமே பழுவேட்டரையர் தம் முழு கலைப்பாணி படைப்புக்களையும் கட்டட அமைப்புகளையும் காணமுடிகிறது. ஆனால் ஆலந்துறையார் கோயில் அவற்றிலிருந்து வேறுபட்டு காணப்பெறுவதால் பல்லவர்கால கோயிலைப் பின்னாளில் சோழர்களே புதுப்பித்துள்ளனர் என்பதைத் தெளிவாக அறியலாம். எனவே திருஞானசம்பந்தர் பதிகம் பாடும்போது திருஆலந்துறையார் கோயிலில் கேரள தேசத்து அந்தணர்கள் பூசித்ததற்கான எந்த ஒரு சான்றும் இல்லை.

மழநாட்டு மலையாளர்

திருஞானசம்பந்தப் பெருமானார் கொள்ளிடக்கரையமைந்த திருக்கானூர், அன்பில் ஆலந்துறை, வடகரை மாந்துறை ஆகிய பதிகளைப் பாடிப் பரவிய பிறகு திருப்பாச்சிலாச்சிராமம் சென்றடைந்தார் எனக் கூறவிழைந்த போது, "பொங்கொலி நீர் மழநாட்டுப் பொன்னி வடகரை மிசைப் போய்ப் புகலி வேந்தர் நங்கள் பிரான்

திருப்பாச்சிலாச்சிராமம் பணிய..." என்று கூறியுள்ளார். மேலும் கொல்லி மழவனின் மகளுக்கு முயலகன் எனும் நோய் பற்றியதையும் விளக்கியுள்ளார். மழவர் கோமானின் துயர்தனைக் காழிப்பிள்ளையார் போக்கிய பாங்கும் விரித்துரைத்துள்ளார். பொன்னியாகிய கொள்ளிட ஆற்றின் வடகரையில் கொல்லி மலையைத் தலைமையிடமாகக் கொண்ட மழநாடு இருந்தது என்பதும் அந்நாடு கொல்லிமழவனின் ஆட்சிக்கு உட்பட்டது என்பதும் சேக்கிழார் தம் வாக்கால் அறியப்படும் வரலாற்றுத் தகவல்களாகும்.

கல்வெட்டுக்கள் கொல்லி மழநாடு என்றும், கொல்லிமலை நாடு என்றும் அம்மழநாட்டைக் குறிப்பிடுகின்றன. மழ்நாட்டு பாடிவீடு அமைந்த காரணத்தால் கொள்ளிடத்தின் வடகரையில் திகழும் பேரூர் ஒன்று திருமழபாடி என்ற பெயரால் வழங்குகின்றது. இம்மழபாடிக்கு அருகமைந்த ஊர்தான் சிறுபழுவூர் என்னும் கீழப் பழுவூராகும். பின்னாளில் சோழர், பழுவேட்டரையர் கல்வெட்டுக்களில் சிறுபழுவூர் குன்றக் கூற்றம் என்ற உட்பிரிவின் கீழ் திகழ்ந்தது.

கொல்லிமலையில் வளப்பூர்நாடு என்னும் இடத்திலுள்ள அறப்பளீஸ்வரர் கோயிலில் காணப்பெறும் இரண்டு கல்வெட்டுக்கள் மலையாளர் பற்றி பேசுகின்றன. இரண்டாம் இராஜாதிராஜ சோழன் காலத்து (கி.பி. 1175) கல்வெட்டு சாசனமொன்றில் (ARE NO 501 of 1929 – 30) கொல்லிமலைநாட்டு மலையாளர்கள் அறப்பளீஸ்வரர் கோயிலுக்கு அளித்த அறக்கொடைகள் பற்றி குறிப்பிடுகின்றது.

இதே இரண்டாம் இராஜாதிராஜ சோழனின் மற்றொரு சாசனம் (ARE NO 499 of 1929 – 30) கொல்லிமலையில் உள்ள குற்றங்கநாட்டு மலையாள நாட்டார் இணைந்து வீற்றிருந்தான் செம்மாண்டார் எனும் பிள்ளை அகளங்கநாடாள்வானுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு அறப்பளீஸ்வரருக்குரிய அமுதுபடிக்கான ஏற்பாடுகளை செய்தமை விவரிக்கப்பெற்றுள்ளது.

இவ்விரு கல்வெட்டுச் சான்றுகளையும் வைத்து நோக்கும்போது கொல்லி மழநாட்டு மக்களை மலையாளர் என அழைக்கும் மரபு சோழராட்சிக்காலத்தில் திகழ்ந்தமையை அறிகிறோம், திருவரங்கம் திருக்கோயிலில் உள்ள விக்கிரம சோழனின் பதினாறாம் ஆட்சியாண்டு (கி.பி. 1134) கல்வெட்டு சாசனத்தின் (S.I.I. Vol XXIV No. 122) இறுதிப்பகுதியில் பின் வருமாறு கூறப்பெற்றுள்ளது.

“இவ்விருவர் பக்கலும் விலை கொண்டு அமாவாசி ஸ்ரீ வைஷ்ணவர்களாய் அபூர்விகளாய் இருக்கும் பிராமணரை அமுது செய்விக்கக்கடவதாகவும், ‚ பங்குனித் திருநாள் அழகிய மணவாளப் பெருமாள் எழுந்தருளும்போது பரதேசிகளாய் இருக்கும் மலையாள பிராமணர் நித்தம் பத்து ஸ்ரீவைஷ்ணவர் அமுது செய்யக்கடவதாகவும்..." –

என்று குறிக்கப்பெற்றுள்ளது. இங்கு குறிப்பிடப்பெறும் பரதேசத்து மலையாள பிராமணர் என்பது கொல்லி மழநாட்டு வைணவ பிராமணர்களைக் குறிப்பதாகும்.

பண்டு கொல்லி மழநாடு என்று திகழ்ந்தநாடு தற்போதைய திருச்சிராப்பபள்ளி, பெரம்பலூர், அரியலூர், நாமக்கல் மாவட்டங்களின் பகுதிகளைக் கொண்ட ஒன்றாகும். கொங்குநாட்டுப்பிரிவில் கொல்லி மலைப்பகுதி மழகொங்கம் என்ற பெயரால் குறிக்கப்பெற்றது. இம்மழநாட்டு மக்களை மலையாளர் எனக் குறிப்பிடும் மரபு பல்லவர் சோழர் காலத்து வழக்கில் இருந்துள்ளது. இம்மழநாட்டு தமிழ் மரபினைச் சார்ந்த பிராமணர்கள் தான் அந்தணர்களான மலையாளர் ஆவர். அவர்களால் கீழப்பழுவூர் ஆலயம் பூசிக்கப்பெற்றமையால் தான் திருஞானசம்பந்தப் பெருமானார்,

"மண்ணின் மிசை ஆடி மலையாளர் தொழுதேத்தி
பண்ணின் ஒலிகொண்டு பயில்கின்ற பழுவூரே"

என்றும்,

"அந்தணர்களான மலையாளவர் அவர் ஏத்தும்
பந்தம் மலிகின்ற பழுவூர்"

என்றும் பாடியுள்ளார். சேக்கிழார் பெருமான் சம்பந்தர் பழுரில் பாடியதிறம் உரைக்கும் போது "மலையர் தாம் தொழுது" எனக் குறிப்பிடுவதால் மலையர் என்ற சொல்லைத் தான் பயன்படுத்தியுள்ளார். கேரள தேசத்து அந்தணர்களாய் இருப்பின் மலைநாட்டு அந்தணர் எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்திருப்பார். கொல்லி மழநாட்டு அந்தணர்களை கேரள தேசத்து மலையாளர் என்று கூறுவது ஏற்புடையதாகாது. தமிழ் நாட்டில் குறிப்பாக திருச்சி தஞ்சாவூர் உள்ளிட்ட சோழநாட்டில் "மழநாட்டு பிரகசரணம்" என்ற கோத்திரப் பிரிவுடன் இன்றும் அந்தணர்கள் வாழ்கின்றனர். அவர்கள் தாம் நம் கௌணியர் கோமான் குறிப்பிடும் அந்தணர்களான மலையாளர்கள் எனக்கொள்ளல் சாலப் பொருந்தும். சோழப் பேரரசி செம்பியன் மாதேவியார் மழநாட்டு மழவரையன் மகளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். கொல்லிமலையை அடுத்து பெரம்பலூர் மாவட்டத்து பச்சைமலைத் தொடரில் வாழ்பவர்களை இன்றும் "மலையாளி" என்றே அழைக்கின்றனர்.

கீழப்பழுவூர் ஆலந்துறையார் திருக்கோயில்



திருச்செங்கோடு மலைக்கோயில்

கொடிமாடச் செங்குன்றூர்

திருஈங்கோய் மலையில் மேவும் சிவபெருமானை வணங்கிப் பதிகம்பாடிய திருஞானசம்பந்தர் காவிரியின் தென்கரை வழியே குட புலமாகிய கொங்குநாடு சென்று நெடும் புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர் சென்றணைந்தார் என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டுள்ளார். செங்குன்றூரிலிருந்து திருநணா எனப் பெறும் பவானி கூடல் ஈசனை (சங்கமேஸ்வரரை)த் தரிசித்துப் போற்றிய பின்பு மீண்டும் செங்குன்றூருக்கே வந்து சில நாள்கள் அங்கு தங்கியிருந்ததாகவும் கூறியுள்ளார். அப்போது அவருடன் வந்த அடியார்களுக்குப் பனிப்பிணித் தாக்கம் ஏற்பட்டு வருந்த ஈசனைப் போற்றி பதிகம் பாடி அடியார்களுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் ஏற்பட்ட அந்நோய் நீங்குமாறு அருள் புரிந்தார் என்றும் தாம் பாடியுள்ள திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தில் பதிவுசெய்துள்ளார்.

கொடிமாடச்செங்குன்றூர் என்பது திருச்செங்கோடு எனப்பெறும் நாமக்கல் மாவட்டத்துத் திருத்தலமாகும். செங்கோடு, நாகாசலம், செங்குன்றம் என அழைக்கப் பெறும் உயரமான திருமலை அரணாகத்திகழ திருச்செங்குன்றூர் அமைந்துள்ளது. திருச்செங்கோடு எனப்பெறும் அம்மலையின் உச்சியில் தற்போது அர்தநாரீஸ்வரரும், செங்கோட்டுவேலவனும் உறையும் சிவாலயம் ஒன்றும், வந்தீஸ்வரர் என்ற திருநாமத் தோடு கோயில் கொண்டருளும் பாண்டீசுரர் திருக்கோயிலும் உள்ளன. செங்கோட்டு மலையின் அடிவாரத்தில் உள்ள செங்குன்றூரில் ஊரின் நடுவே தேரோடும் நான்கு இராஜவீதிகள் அணி செய்ய நடுவண் கைலாச நாதர் திருக்கோயில் எனப்பெறும் சிவாலயம் ஒன்று உள்ளது. தற்போது ஊரினை யாரும் செங்குன்றூர் எனக் குறிப்ப தில்லை ஊரின் பெயரே திருச்செங்கோடு என வழங்குகின்றது.

மலைமீது இரண்டு சிவாலயங்களும் ஊரின் நடுவண் ஒரு சிவாலயமும் என மூன்று திருக்கோயில்கள் இவ்வூரில் திகழ மலை மீதுள்ள அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில்தான் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தேவாரக் கோயில் என அனைவரும் போற்றிவருகின்றனர். தேவாரக்கோயில்களின் மரபு, திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பெருமான் கூறியுள்ள தகவல்கள் ஆகியவை அடிப்படையில் நோக்கும் போது அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் தேவாரப்பாடல் பெற்ற கோயில் அன்று என்பதும், செங்குன்றூரின் நடுவே திகழும் கைலாசநாதர் கோயில் எனும் பழைய சிவாலயமே திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற தேவாரத்தலம் என்பதும் பெரிய புராணத்தை ஆழ்ந்து நோக்கும் போது புலப்படும் செய்திகளாகும்.

வெந்த வெண்நீறு அணிந்து எனத் தொடங்கும் திருப்பதிகம் திருஞான சம்பந்தரால் அத்தலத்தில் பாடப்பெற்ற தேவாரப்பதிகமாகும். அப்பதிகத்தின் முதல் மூன்று பாடல்களில்,

“பந்து அணவும் விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளி”
“மலைமகள் கூறு உடையான் மலையார்”
“ஏலமலர்க் குழலாள் ஒருபாகம் அமர்ந்து அருளி”

என்ற அடிகளில் ஈசனின் உமையொருபாகத் தோற்றம் குறிக்கப்பெறுவதால் அர்த்தநாரீஸ்வரர் கோலம் தான் இத்தலத்து மூலவர் தோற்றம் எனக் கொண்டு மலைமேல் திகழும் அர்த்தநாரீஸ்வரர் கோயிலைத் தான் திருஞானசம்பந்தர் பாடினார் எனக் குறிப்பிடுகின்றனர் பல தலங்களில் இதுபோன்று சில வடிவங்கள் தேவாரப்பாடல்களில் குறிப்பிடப் பெற்றிருப்பினும் அவை மூலட்டான மூர்த்திகள் ஆகா.

தேவாரப் பாடல்பெற்ற தலங்கள் அனைத்திலும் தேவார மூவர் காலத்தில் ஒவ்வொரு சிவாலயத்திலும் சிவலிங்க மூர்த்தமே மூலவராகத் திகழ்ந்துள்ளன. தில்லைப் பெருங்கோயிலில் பொன்னம்பலமே ஆகாச மூர்த்தி திகழும் இடமாக விளங்கிய போதும் அங்கு திருமூலட்டானம் பிரதான இடம்பெற்றுத் திகழ்கிறது. அவ்வகையில் அர்த்தநாரீ திருக்கோலத்தை மூலமூர்த்தியாகக் கொள்ளல் ஏற்புடையதன்று.

தமிழகம் முழுதும் பல்லவர் காலம் தொட்டு பல்வேறு திருக்கோயில்களில் பலமரபு மன்னர்களால் உருவாக்கப் பெற்ற அர்த்தநாரீ திருவடிவங்கள் கல்லிலும் செம்பிலும் காணப்பெறுகின்றன. பல்லவர் காலத் திருமேனிகள் சில உமையொரு பாகனாரை நான்கு திருக்கரங்கள் உடைய வடிவில் காட்டுகின்றன. சோழப் பெரு வேந்தர்களும் மற்ற மரபு அரசர்களும் படைத்த அர்த்தநாரீஸ்வரர் திருவடிவங்கள் ஆண்பாகத்தில் இருகரங்களும், பெண் பாகத்தில் ஒரு திருக்கரம் மட்டுமே காணப் பெறும். ஆனால் திருச்செங்கோடு மலைமீது திகழும் அர்த்தநாரீஸ்வரர் திருவுருவில் இரண்டு கரங்கள் மட்டுமே காணப்பெறுகின்றன. மேலும் எந்த ஒரு குறிப்பிட்ட கலைப்பாணி வடிவிலும் அது அமையவில்லை. மாறாகத்தெளிவான வடிவின்றி செவ்வியல் படைப்பிற்கு மாறாக அமைந்துள்ளதால் அவ்வடிவம் குறித்து மாறுபட்ட கருத்துக்களை முன்வைப்பதற்கு ஏதுவாகக் காணப்பெறுகின்றது. அவ்வடிவினைப் பண்டைய கண்ணகி வடிவம் எனக் கருதவும் சில சிற்பவியல் கூறுகள் காரணமாக அமைந்துள்ளன. அவ்வடிவத்தினை உமையொருபங்கனாகவே நாம் கொண்டாலும் அத்திருமேனியுள்ள மலைக்கோயிலில் திருஞானசம்பந்தர் பதிகம் பாடவில்லை என்பது தெளிவு.



திருக்கழுக்குன்றத்து மலைக்கோயில்



திருக்கொடுங்குன்றத்து மலைக்கோயில்

பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் மலைமீது ஏறிவழிபட்ட திருக்கோயில்களைப் பற்றி சேக்கிழார் பெருமான் மிகத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். காழிப் பிள்ளையார் முதலாவதாக வழிபட்ட மலைக் கோயில் திருஈங்கோய் மலைதான். அதுபற்றி கூறும் சேக்கிழார் "திருஈங்கோய் மலையில் மேவும் கங்கைச் சடையார் கழல் பணிந்து கலந்த இசைப் பதிகம் புனைந்து பொங்கர்ப் பொழில் சூழ்மலையும் மற்றும் புறத்துள்ள தானங்கள் எல்லாம் போற்றி கொங்கிற் குடபுலம் சென்று அணைந்தார்" என்பார். அடுத்து அவர் சென்ற தலம் செங்குன்றூர் தான். அத்தலத்தில் அவர் மலைமீது ஏறி வழிபட்டதாக எந்தக் குறிப்பையும் தரவில்லை. அவர் செங்குன்றூர் வழிபட்ட திறம் பற்றி இறுதியில் காண்போம்.

ஈங்கோய் மலையை அடுத்து காழிப்பிள்ளையார் இரண்டாவதாக வழிபட்ட மலைத்தலம் திருகற்குடி எனப்பெறும் உய்யகொண்டான் திருமலையே. அதனைச் சேக்கிழார் "செழுமலைச் சோலைத் திருகற்குடி மலைசேர வந்தார்" என்பார். மூன்றாவதாக சம்பந்தர் வழிபட்ட மலைத்தலம் திருச்சிராப்பள்ளியாகும். அதனைச் சேக்கிழார் பெருமான் "நற்றமிழ் மாலை புனைந்தருளி ஞானசம்பந்தர் புலன்கள் ஐந்தும் செற்றவர் மூக்கீச்சரம் பணிந்து திருச்சிராப்பள்ளி சிலம்பணைந்தார்" என்பார்.

நான்காவதாக கவுணியர் கோமான் பணிந்து ஏத்திய மலைத்தலம் திருஎறும்பியூராகும். இதனைச் சேக்கிழார் "ஏறுயர்த் தார் திருபாற்றுரையும் எறும்பியூர் மாமலையே முதலா வேறு பதிகள் பலவும் போற்றி" என்பார். ஐந்தாவதாகப் பிள்ளையார் தரிசித்த மலைத்தலம் கொடுங்குன்றம் எனப் பெறும் பிரான் மலையேயாகும். அதனைப் பெரியபுராணம் "கொடுங்குன்றத் தினிதமர்ந்த கொழும் பவளச் செழுங் குன்றை அடுங்குன்றம் உரித்தானை வணங்கி அருந்தமிழ்பாடி" எனக் குறிக்கும். ஆறாவதாகச் சண்பையர் வேந்தர் பாடிய மலைத் தலம் திருக்காளத்தியாகும். இதனை,

> "இந்தமலை காளனோடு அத்தி தம்மில் இகலி வழிபாடு செய இறைவர் மேவும் அந்தயில் சீர்காளத்தி மலையாம் என்ன அவனிமேற் பணிந்து எழுந்து அஞ்சலி மேற்கொண்டு சிந்தைகளி மகிழ்ச்சி வரத் திருவிராகம் வானவர்கள் தானவர் என்றெடுத்துச் செல்வார்"

எனச் சேக்கிழாரின் பெரியபுராணம் பகர்கின்றது.

மேலும் "தாழ்ந்தெழுத்து திருமலையைத் தொழுது கொண்டே தடஞ்சிலா தலசோபானத்தில் ஏறி" – மலைக்கோயில் ஈசனை வழிபட்டதாகவும், பின்பு, "பங்கயக்கண் அருவிநீர் பாய நின்று பரவும் இசைத்திருப்பதிகம்பாடி ஆடித் தங்குபெருங்களி காதல் தகைத்து தட்பத் தம்பெருமான் கழல் போற்றும் தன்மை நீட, அங்கரிதிற் புறம் போந்து

அயன் மால் போற்ற அறியார்தந் திருமலைக் கீழ் அணைந்து இறைஞ்சிப் பொங்கு திருத்தொண்டர்மடம் காட்ட அங்குப் புக்கருளி இனிதமர்ந்தார் புகலிவேந்தர்" – என்று கூறப்பெற்றுள்ள சேக்கிழார் தம் வாக்கால் காளத்தி மலை ஏறி இறங்கிய திறம் அறிகிறோம்.

ஏழாவதாகவும் இறுதியாகவும் சம்பந்தர் மலை ஏறிவழிபட்ட திருத்தலம் திருக்கழுக்குன்றமாகும். இதனை விவரிக்கும் சேக்கிழார் பெருமான்,

"மன்றல் விரி நறுஞ்சோலைத் திருமலையை வலங்கொண்டு
மின்றயங்குஞ் சடையாரை விருப்புடன் பணிகின்றார்"

என்றும்,

"திருக்கழுக் குன்றத் தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைப்
பெருக்கவளர் காதலினால் பணிந்தெழுந்து பேராத
கருத்தினுடன் காதல் செயுங் கோயில் கழுக்குன்று என்று
திருப்பதிகம் புனைந்தருளிச் சிந்தை நிறை மகிழ்வுற்றார்"

என்றும் கூறி மலைக்கோயிலின் பெருஞ்சிறப்புரைத்துள்ளார்.

இத்தனைத் துல்லியமாகப் பிள்ளையார் செய்த மலைக்கோயில் வழிபாடுகளை விவரிக்கின்ற பெரியபுராணம் சண்பையர்கோன் திருச்செங்குன்றூரில் செய்த வழிபாடு பற்றி பின்வருமாறு உரைக்கின்றது,

"கொண்டல் பயில் நெடும்புரிசை கொடுமாடச் செங்குன்றூர்"

என்றும்,

"அந்நகரில் வாழ்வாரும் அடியவரும் மனமகிழ்ந்து
பன்னெடுந் தோரண முதலாப் பயில் அணிகள் பல அமைத்து
முன்னுற வந்தெதிர் கொண்டு பணிந்தேத்தி மொய் கரங்கள்
சென்னியுறக் கொண்டணைந்தார் சினவிடையார் செழுங்கோயில்"

என்றும்,

"தம் பெருமான் கோயிலினுள் எழுந்தருளித் தமிழ் விரகர்
நம்பரவர் திருமுன்பு தாழ்ந்து எழுந்து நலம் சிறக்க
இம்பரும் உம்பரும் ஏத்த இன்னிசை வண்டமிழ் பாடிக்
கும்பிடும் ஆதரவுடன் அக்கோநகரில் இனிதமர்ந்தார்"

என்றும் சேக்கிழார் தம்வாக்கால் விரித்துரைக்கின்றது.

இவை அனைத்தையும் ஆழ்ந்து நோக்கும்போது கொடுமாடச் செங்குன்றூர் நகரில் அமைந்திருந்த திருக்கோயில் ஈசனையே காழிப்பிள்ளையார் பாடினார் என்பதும், மலைக்கோயில் பற்றிய எந்த ஒரு குறிப்பையும் அவரோ அல்லது சேக்கிழார்

பெருமானாரோ பாடவில்லை என்பதால் நிச்சயம் பிள்ளையார் வழிபட்ட திருக் கோயில் செங்குன்றூர் நடுவே அமைந்துள்ள கயிலாசநாதர் கோயிலே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மலைமீது திகழும் அர்த்தநாரீஸ்வரர் பற்றி சேக்கிழார் பெருமான் எந்த ஒரு குறிப்பையும் சம்பந்தர் புராணத்தில் கூறாதது மேற்குறித்த முடிவிற்கு வலுவூட்டும் மேலும் ஒரு சான்றாகும்.

திருச்செங்கோட்டு மலைப்பாறைகளிலும், பிற இடங்களிலும் உள்ள இருபத் தாறு கல்வெட்டுக்களை இந்திய கல்வெட்டுத் துறையினர் படி எடுத்துப் பதிவு செய் துள்ளனர். எந்த ஒரு கல்வெட்டிலும் திருச்செங்குன்றூர் என்ற குறிப்பு காணப்பெற வில்லை திருச்செங்கோடு என்று குறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுகள் பலவுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை பிற்காலத்திய கல்வெட்டுக்களே. அவற்றில் ஒரு கல்வெட்டில் திருச்செங்கோடு ஆழ்வார் என இறைவன் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. ஒரு கல்வெட்டில் திருமலையில் எழுந்தருளின உடையார் என்றும், ஒரு கல்வெட்டில் மலைமீது திகழும் சுப்பிரமணியப் பிள்ளையார் என்றும் குறிப்பிடுகின்றன. எந்த ஒரு கல்வெட்டிலும் அர்த்தநாரீஸ்வரர் என்ற பெயர் கூறப்பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

திருச்செங்குன்றூர் கைலாசநாதர் கோயிலில் உள்ள விசுவநாத சொக்கலிங்க நாயக்கர் காலத்துக் கல்வெட்டில்

"நாணிய கைலாய னாதருக் குப்பூசை
அணிகிளருங் கோபுர முண்டாக்கிப் பனிமலைமேல்
காசி விசுவேசருக்குக் கற்கோயிலும் பணித்தான்
நேசருளைச் சேசாத்திரி"

என்ற பாடல் உள்ளதாக அர்த்தநாரீஸ்வரர் கோயில் தலபுராணம் என்றும் அண்மைக் காலத்து நூலில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

திருச்செங்கோட்டு மலைமேல் இரண்டும் செங்குன்றூரின் நடுவண் ஒன்றும் என மூன்று சிவாலயங்களைப் பெற்ற இவ்வூரின்கண் திருஞானசம்பந்தரால் பதிகம் பாடப் பெற்ற திருக்கோயில் கயிலாசநாதர் கோயில் எனப்பெறும் தரைக்கோயிலே என்பது உறுதி.

திருஞானசம்பந்தப் பெருமான் சுட்டியருளிய மலையாளர் என்பது கொல்லி மலை நாட்டு அந்தணர்களே என்பதும் அவர் பாடிய செங்குன்றூர் திருக்கோயில் தற்கால திருச்செங்கோட்டுத்தரைக் கோயிலே என்பதும் இவ்வாய்வின் முடிபுகளாகும்.



❖

Sekkizhaar Adi - p - Podi Dr.T.N.Ramachandran, D.Litt., is an acknowledged cognoscente of Saiva Siddhantam. He has indited, edited and translated, in all, fifty works so far. His knowledge of Tamil and English is the envy of scholars. He is devoted to Tamil and Tamil Saivisam and his devotion is worthy of our emulation.

₹. 1000/-